
# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



வால்டேர்

ஊசி 2 குத்து

★ டிசம்பர் 1963 ★

இதனுள்:

நாத்திகப் பிரசாரம்
பெசண்ட் வரலாறு
சோஷலிசம் என்றால் என்ன
டில்லி மக்கள்
வவ்வால் வாழ்க்கை
அரசியலும் பொருளாதாரமு
குழந்தை எழுத்தாளர்
மனை மாட்சி
கவிதைப் பகுதி
இலக்கியப் பகுதி
இன்னும் பல

50 காசு

Telegrams: "SWITCHES"

Phone: 51436

# KASIMARI INDUSTRIAL CORPORATION

"KASIMARI BUILDINGS"

295, THIRUVOTTIYUR HIGH ROAD,

MADRAS-21.

INDUSTRIALISTS, ENGINEERS & CONTRACTORS

**We Undertake:**

ALL KINDS OF STRUCTURAL FABRICATIONS AND ENGINEERING WORKS OF EVERY DESCRIPTION

**Our Motto:**

QUICK, EFFICIENT AND PROMPT SERVICE

# எமது புதிய வெளியீடுகள்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| காலநிலை இயல்<br>இர. இராதா, M.A., L.T., M.A. | 10 | 00 |
| பகவதி எம். எல். ஏ.<br>"துமிலன்" | 8 | 00 |
| முதன்மைபெற்ற அமெரிக்கப் பெண்மணிகள்<br>*தமிழில்:* ஏ. ஆர். இந்திரா | 6 | 00 |
| இனி நாம் செய்ய வேண்டுவது யாது?<br>—டால்ஸ்டாய்<br>ரா. விசுவநாதன் | 3 | 50 |
| பாய் பரமானந்தன்<br>தென்காசி ச. சொக்கலிங்கம் | 3 | 25 |
| யார் அவர்?<br>மகரம் | 2 | 50 |
| இமயத்தில் நூறு மைல்<br>எஸ். அருண் | 1 | 50 |


## *பழனியப்பா பிரதர்ஸ்*

சேப்பாக்கம்; . . தெப்பக்குளம்;
சென்னை - 5 . . திருச்சி - 2

## தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

**23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன் : 82026) சென்னை-34.**

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

*எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—*

| | | | |
|---|---|---|---|
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் | ... | 4½% | ஒரு ஆண்டிற்கு |
| இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 4¾% | ,, |
| மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5% | ,, |
| நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5¼% | ,, |
| ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை | | 5½% | ,, |

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**எஸ். இராஜரத்தினம்**
*காரியதரிசி.*

# குத்தூசி

## உறுப்பினர்கட்கு:

*திங்கள்தோறும் இதழ்கள் 1-ந் தேதியன்றே அஞ்சலில் சேர்க்கப்படுகின்றன.* **மும்முறை ஒத்திட்டுப் பார்த்த பிறகே** *அஞ்சலகத்துக்கு அனுப்பப்படுகிறது. ஆதலால் இதழ் கிடைக்காவிடில் அஞ்சல் துறையினருக்கு முறையிடுவதே முறை.*

*இதழ் கிடைக்காத முறையீடுகள் அந்தந்த மாதம் 7-8 தேதிக்குள்ளாக வரவேண்டும்; பிறகு வருபவைகளை (சிறப்பாக நூலகங்களிலிருந்து) கவனிக்க வசதியில்லை.*

## விற்பனையாளர்கட்கு:

*ஒவ்வொரு மாதமும் 30-ந் தேதிக்குள் (அடுத்த மாதத்துக்கு வேண்டிய இதழ்களுக்கான) முன் பணத்தை அனுப்பி வைத்தால்* **முதல் தேதியன்றே ஒரே தடவையில்** *எல்லோருக்கும் கட்டுகளை அனுப்பி வைக்க வசதியாயிருக்கும். தாமதமாக அனுப்புகிறவர்களுக்கு 8 அல்லது 10-ந் தேதிதான் அனுப்ப வசதிப்படும்.*

*உரிமையாளர்.*

# MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

---

Manufacturers of:

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

தபால் பெட்டி எண்: 3                    தொலைபேசி எண்: 14

தோற்றம்: 1910

# ஸ்ரீ கமலாம்பிகா

## கோவாப்பரேடிவ் அர்பன் பாங்கு லிமிடெட்,

திருவாரூர் : : தஞ்சை ஜில்லா

53 ஆண்டுகளாக பணியாற்றிவரும் பாங்கு.

31—10—1963-ல் உள்ளபடி

| | | ரூ. |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... | 7,50,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... | 5,00,375 |
| டெப்பாசிட்டுகள் நிலுவை நிற்பது | .... | 31,48,295 |
| கடன்கள் நிலுவை நிற்பது | .... | 30,32,276 |
| நடைமுதல் மூலதனம் | ... | 37,23,670 |

எல்லாவிதமான டெப்பாசிட்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

### வட்டி விகிதம் :

பிக்ஸட் டிபாசிட்டுகள்

| | | |
|---|---|---|
| 6 மாத கெடுவுக்கு | ... | 5 சதவிகிதம் |
| 1 வருஷ கெடுவுக்கு | ... | $5\frac{1}{2}$ ,, |
| 2 வருஷங்களும் அதற்கு மேலும் ... | | 6 ,, |

விவரங்களுக்கு காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

# தமிழ் நூல் நிலையம்

**84, ஷெனாய் நகர் : : சென்னை-30**

| | | ரூ. காசு |
|---|---|---|
| 1. | பிச்சைக்காரி (சிறு கதைகள்)<br>குருசாமி. | 2·00 |
| 2. | பன்னீர்ச்செல்வம் (நாடகம்)<br>சா. குருசாமி. | 0·40 |
| 3. | குத்தூசி (12 இதழ்கள்)<br>பைண்டு செய்யப்பட்டது. | 8·00 |
| ★ 4. | குத்தூசி (கிண்டல்)-கட்டுரைகள்<br>புதிய தொகுப்பு | அச்சில் |
| ★ 5. | கட்டுரைக் கொத்து<br>சா. குருசாமி. | அச்சில் |

★ இவை இரண்டும் இதுவரையில் புத்தக உருவில் இல்லாதவை; திருத்தியும், பெருக்கியும், தனிச் சுவையுடன் எழுதப்பட்டவை. ஜனவரி இறுதியில் கிடைக்கும்.

குறிப்பு :—மேற்கண்டவைகளுக்கு அஞ்சல் செலவு தனி.




# “குத்தூசி”

**இரண்டாவது ஆண்டுக்கு...**

## தேவை! விற்பனையாளர்!!

குத்தூசிக்கு, முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தேவை :

| | |
|---|---|
| சிதம்பரம் | ஒரத்தநாடு |
| திண்டுக்கல் | சீர்காழி |
| லால்குடி | காஞ்சீபுரம் |
| கரூர் | விருதுநகர் |
| மதுரை | ஆத்தூர் |
| திண்டிவனம் | புதுக்கோட்டை |
| உடுமலைப்பேட்டை | தர்மபுரி |


நேரு
இந்தியா

''மெய்ப்பொருள் காண்பது அறிவு''

குத்தூசி

ஊசி 2 டிசம்பர் 1963 குத்து 3

# சோஷலிசமும் நாத்திகப் பிரசாரமும்

இந்தியா வன்முறையல்லாத பாதையில் ஜனநாயக (மக்கள் ஆட்சி) சோஷலிசத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதாக முதலமைச்சர் நேரு பலதடவை கூறிவிட்டார்.

''சோஷலிசம் என்றால் என்ன?'' என்பது பற்றி கருத்துச் செறிவுள்ள கட்டுரையொன்று இவ் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இரத்தப் புரட்சியோ, இராணுவப் புரட்சியோ-இன்றி ஏழை-பணக்காரத் தன்மையற்ற சோஷலிச (சமதர்ம) சமுதாயத்தை அமைக்கக்கூடுமானால், அது நிலையாகவும் இருக்குமானால், உலகமே இந்தியாவைப் போற்றிப் பாராட்டும். அத்தகைய அதிசயக் காட்சிக்கு உலகம் கண் திறந்து காத்துக் கொண்டிருக்கிறது. ''சோஷலிச சமுதாயம் என்பது பொருளாதாரத்தைப் பற்றியது மட்டுந்தானா? இனம்–மதம்–சாதி-மூட நம்பிக்கை-படிப்பின்மை-பெண் அடிமை போன்ற தீமைகளையும் அறவே ஒழிக்க வேண்டாமா? வேண்டாம் எனில், இப்போதுள்ள சுரண்டல் (முதலாளித்துவ) சமுதாயமே தொடர்ந்து இருக்கலாமே! இவைகளையெல்லாம் நிலை நிறுத்திப் பாதுகாக்கக் கூடிய வேறு ஏதோ ஒரு அரசியல் கட்சிகூட அதிகாரத்திலிருக்கலாமே!

புரட்சி மூலம் சோஷலிச ஆட்சியை ஏற்படுத்திய ருஷ்யாவில் (மார்க்சும், எங்கெல்சும், லெனினும் கூறியபடி) மத எதிர்ப்பையும் நாத்திகப் பிரசாரத்தையும் இரண்டாந்தரமாகக் கருதியிருக்கலாம்; தொழிலாளர் ஆட்சி முறை ஏற்பட்டவுடனே மேற்கண்ட பிற்போக்கு உணர்ச்சிகள் தாமாகவே வெந்து கருகிக் கரைந்து போய்விடும் என்று முடிவு

"முயற்சியின் வெற்றி—தோல்வி பற்றி சோதிடம்—கைரேகை பார்த்துவிட்டுப் புறப்பட்டீர்களா?"

இவை போன்ற கேள்விகளை எந்த நிருபரும் கேட்கவில்லை! மறதியோ! வெட்கமோ?

உலக மங்கையர்க்கரசி வாலந்தினாவுக்குப் புடவையும் ஜாக்கெட்டும் தந்து உடுத்தச் செய்ததும், நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்ததும் குறிப்பிடத்தக்க (சோஷலிசப்) புரட்சி வேலை!

சென்னையைச் சேர்ந்த வடபழனிக்கு அழைத்துச் சென்று மொட்டையடித்திருக்கலாம்! அடுத்த ஆண்டில் பிள்ளை பெறும்படியாக அரச மரத்தைச் சுற்றிவரச் செய்திருக்கலாம்! நேரமில்லையோ? நினைவில்லையோ?

ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன்—போன்ற வெளிநாடுகள் செல்கின்ற தமிழ்நாட்டு மாதர்கள் இனியாவது ஃப்ராக் அணிந்து("டான்ஸ்") ஆடிக் காட்டிவிட்டுத் திரும்புவார்களென்று எதிர்பார்க்கலாம்!

இவ்வாறு இந்நாட்டுப் பெண்களை அந்நாட்டுப் பெண்கள் கேட்பதுமில்லை; வற்புறுத்துவதுமில்லையே! ஏன் எனில், அவர்களுக்குள்ள அறிவும் பெருந்தன்மையும் அவ்வளவுதான்! கேவலம்! கேவலம்!! நமக்கல்ல! அவர்கட்கு! நமக்கீடு நாமே!

## கென்னடி மறைவு

*நிற (இன) வேற்றுமையை ஒழிப்பதற்காகவும், உலக அமைதிக்காகவும், சிறப்பாக இந்திய நட்புறவுக்காகவும் அரும்பாடுபட்டு வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருந்த உலகப் பெருந்தலைவர்களில் முக்கியமானவரான அமெரிக்க குடியாட்சித் தலைவர் கென்னடி, ஓர் இன வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டு மரணமடைந்தமைக்காக மிகமிக வருந்துகிறோம். உலக மக்களின் ஆழ்ந்த துன்பத்தில் பங்கு கொள்கிறோம். உலகத்திற்கே இது பேரிடி!*

*சாக்ரட்டீஸ், அப்ரகாம் லிங்கன், காந்தியார் போன்ற உலக உத்தம உயிர்த் தியாகிகளின் வரிசையில் இடம் பெற்றுவிட்டார், கென்னடி!*

*கென்னடியின் முயற்சி வெல்க!, ஆசை வெல்க!!*

—ஆசிரியர்.

சா. கு.

# பெசண்ட் அம்மையார்

## (II)

நாத்திகக் கொள்கையைத் தீவிரமாகவும் தனித் திறமையுடனும் பிராட்லாவும் பெசண்ட் அம்மையாரும், எழுத்தாலும் பேச்சாலும் பிரசாரம் செய்து கொண்டிருந்தனர். மனித சமுதாயத்தை உயர்த்தவேண்டும் என்ற ஆசை பெசன்டை ஆட்டிக் கொண்டேயிருந்தது. 1876 ல் "நாத்திகக் கோட்பாடு" என்ற நூலும், "கிருஸ்துவக் கோட்பாடும் பகுத்தறிவும்" என்ற நூலும் வெளிவந்தன. டார்வின், ஹர்பர்ட் ஸ்பென்சர், ஹக்ஸ்லி போன்ற பல பேரறிஞர்களின் நூல்களைப் படித்து ஆராய்ந்தார் பெசன்ட்.

> "நாத்திகன் என்பவன் முழுத்தன்மை பெற்றவனாக இருக்க ஆசைப்படுவது, தன் சொந்த இன்பத்துக்காக மட்டுமல்ல; எல்லா இனத்தாரும் ஒன்றே என்பதை விஞ்ஞானம் தெளிவு படுத்திவிட்டபடியால் நாத்திகன் உலகத்தையே தன் கொள்கைக்கு இழுப்பதில் இன்பம் காண்கிறான்",

என்று கூறுகிறார், பெசன்ட். சமுதாய ஒழுக்கத்தைப் பற்றி 1874 முதல் 1886 வரையில் இதேதான் அவரது கொள்கையாக இருந்து வந்தது.

இருவரின் சூறாவளிப் பிரசாரத்தைக் கண்டு நடுங்கிய பழமை விரும்பிகள் 'நாத்திகம்' என்பதே ஒழுக்கக்கேடு என்றும், பெசன்ட் ஒழுக்கங் கெட்டவர் என்றும், அவதூறான பொய்ப் பிரசாரம் செய்யத் தொடங்கினர். இது மனித வரலாற்றின் நிலையான குறும்பு; பழமை விரும்பிகளுக்கு இது தவிர வேறு போர்க் கருவி கிடையாது; அன்றும், இன்றும்.

எந்த நாத்திகனாவது இதற்காக அஞ்சுவானா? அதுவும் வைர உள்ளம் கொண்ட அம்மையாரா அஞ்சுவார்? பகுத்தறிவு (நாத்திக)ப் பிரசாரத்துடன் கூடவே, மன்னர் குடும்பத்தின் அக்கிரமச் செலவுகள், பிரபுக்கள் சபையின் பிற்போக்குத்தனம் — முதலியவற்றைக் கண்டித்துப் பிரசாரம் செய்தார். பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட நாடுகளுக்கெல்லாம் சுய ஆட்சி வழங்க வேண்டுமென்று போராடினார்.

ப்ராட்லாவுடன் சேர்ந்து மரண தண்டனையை எதிர்த்தும், பொதுவான தேசீயக் கல்வி முறை கோரியும் பிரசாரம் செய்தார்.

### இடைவிடா உழைப்பு

ஏழைகளின் வக்கீலான பிராட்லா, அவர்களுக்காக இலவசமாக வாதாடுவார்; பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவார். இருவரும் மணிக்கணக்கில் உட்கார்ந்து எழுதிக் குவித்துக் கொண்டேயிருந்தனர்.

1874 ல் தான் அவரது முதலாவது மேடைப் பேச்சு. கூட்டுறவுக் கழகத்தில், "அரசியலில் மாதர்களின் நிலைமை" என்பது பற்றி. துவக்கத்தில் சில நிமிஷம்

சிறிது நடுக்கமாக இருந்ததாம்! பேசப்பேச அருமையான துணிவு ஏற்பட்டதாம். "பேசத் தொடங்கி விட்டால், நான்தான் கூட்டத்தின் அதிகாரி; முழுசக்தியும் என்னுடையதே!" என்று அவரே கூறியுள்ளார்.

இந்த சமயத்தில்தான் ப்ராட்லா, மற்றொரு பகுத்தறிவு நிபுணரான ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவரின் ஆதரவு கொண்டு பிரிட்டிஷ் பார்லிமெண்ட்டுக்கு வேட்பாளராக நின்றார். தேர்தல் பிரசாரத்தில் முக்கிய பங்கு பெசன்ட்அம்மையாருக்கு. அடிக்கடி கலவரம்! அடிதடி! ப்ராட்லா மீது அவரது எதிரிகள் வீண் பழிகளையெல்லாம் சுமத்தி, பொய் வதந்திகளைப் பரப்பி, சகிக்க முடியாத தொல்லைகளைக் கொடுத்தனர். அவர் பார்லிமெண்டுக்குள் நுழைவதற்கான இடையூறுகளும், அவரது இறுதி வெற்றியும் இன்னும் பல சுவையான போராட்ட நிகழ்ச்சிகளும் இங்கு தேவையில்லை. (அவரது வரலாற்றைப் பற்றி எழுதும்போது விரிவாக வரும்) இப்போராட்டங்களிலும் கலவரங்களிலும் பெசன்ட் அம்மையார் ப்ராட்லர்வுக்குப் பக்கத் துணையாக நின்று, ஆயிரம் வீரர்களின் துணிவுடன் போராடியதை மட்டும் இங்கு குறிப்பிட்டால் போதும்.

## நீர்வீழ்ச்சி சொற்பொழிவு

1875 ல் தான் பெசன்டின் பகுத்தறிவுப் பிரசாரம் துவங்கிற்று. அவரது உடலுக்கு ஒரு "டானிக்" (ஊட்டம்) ஆக இருந்தது, சொற்பொழிவு வேலை.

"மேடை மீது நின்று நீண்ட நேரம் பேச என் உடல் நிலை இடந்தருமா?" என்று தம் மருத்துவரைக் கேட்டார்.

"பேச்சு உங்களை குணப்படுத்தலாம்; அல்லது கொன்று விடலாம்", என்றார், மருத்துவர். பெசண்ட் பேசப் பேசப் புது வலுப்பெற்றார்; ஊக்கம் பெற்றார்; புதுப்புது அவதூறுகளைத் தாங்கிக் கொள்ளும் சகிப்புத்தன்மையும் பெற்றார்.

"மதச்சார்பற்ற தேசீயக் கழகம்" (National Secular Society) என்ற கழகம் பிறந்தது. ப்ராட்லா அதன் தலைவர்; பெசன்ட் துணைத்தலைவர். பிரம்மஞான சபை (Theosophical Society) யில் சேர்கின்ற வரையில் பெசண்ட் இதில் அதே பதவியில் இருந்து வந்தார்.

மணமானவர்கள் அவரவர் பொருள் வசதிக்கேற்றபடி பிள்ளைப்பேற்றை இயற்கையாகக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கொண்ட உடற்கூற்று நூல் ஒன்றை டாக்டர் சார்லஸ் நவுல்டன் (Dr. Charles Knowlton) என்பவர் 1835ல் வெளியிட்டிருந்தார் "குடும்பக் கட்டுப்பாடு" என்று இன்று உலகெங்கும் பரவி வருகின்ற இயக்கத்தின் முதல் நூல் இதுவென்றே கூறலாம். நாற்பதாண்டுகளாக விற்கப்பட்டு வந்த இந்நூலில் சில ஆபாசமான படங்களையும் சேர்த்து அச்சிட்டு, வெளியிட்டார், ஒரு புத்தக வியாபாரி. ஆகவே ஆபாசத்தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டார்.

## சட்ட எதிர்ப்பு

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பிரசார உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற குறிக்கோளுடன், ப்ராட்லாவும் பெசன்டும் சேர்ந்து இந்நூலை வெளியிட்டனர்.

அவ்வளவுதான்! உடனே நாட்டில் பெரிய கொந்தளிப்பு!

மேலும் பல அவதூறுக் குப்பைகள்! பழமையின் எதிர்ப்புகள்! குருமார்களின் மனைவிமார்களும் காரிபால்டி போன்ற பெரியார்களும் இச்செய்கையை வரவேற்றுப் பாராட்டினர்; ஆனாலும் சட்டம் அதன் குறும்புத்தனத்தைக் காட்டிற்று. ப்ராட்லாவும் பெசண்ட்டும் கைதுசெய்யப்பட்டனர். பிரிட்டிஷ் தலைமை நீதிபதி முன்பு நடைபெற்ற வழக்கு விசாரணையில் இரு குற்றவாளிகளும் தாங்களே விவாதித்தனர். நீதிபதி விவாதத் திறமையை மிகவும் பாராட்டினார்; செய்கையையும் ஆதரித்தார். ஆனால் வெறுப்புணர்ச்சி கொண்ட ஜுரிகள் மாறான கருத்துத் தெரிவித்தனர். ஆறுமாத சிறைத்தண்டனையும் 200 பவுன் அபராதமும் விதிக்கப்பட்டது. மேல் விசாரணை மனுப்போட்டு மீண்டும் வாதாடி வெற்றி பெற்றனர். உடனே, ''மக்கள் பெருக்கத்தின் விதி'' என்ற துண்டு வெளியீட்டை எழுதினார், பெசன்ட்.

எதிரிகள் சும்மாயிருக்கவில்லை. பெசன்ட்டுக்கு மேலும் தொல்லை கொடுக்கக் கருதி, அவரது பிள்ளைகளை அவரிடமிருந்து பிரிப்பதற்காக முயற்சி செய்தனர். மத வெறியனை ஒரு நீதிபதியின் முன்பு வந்த இவ் வழக்கில், பிள்ளைகளை பெசன்ட் வளர்க்கக்கூடாது என்ற தீர்ப்புப் பிறந்தது. பெசன்டின் உடல் நிலையும் சிறிது சிதைந்தது.

இவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகளுக்குப் பொது மக்கள் ஆதரவு வரவரப் பெருகியது. (பிர்ம்மஞான இயக்கத்தைச் சேர்ந்த பிறகு பெசன்ட் குடும்பக்கட்டுப்பாடுக் கொள்கையை மாற்றிக் கொண்டுவிட்டார் என்பதும் குறிப்பிடத் தக்கது.)

1878ல் எழுதிய ''இங்கிலாந்து, இந்தியா, ஆஃப்கானிஸ்தான்'' என்ற நூலில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தும், இந்தியாவுக்கு சுயஆட்சி வழங்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

கல்வி ஆர்வம்

இச்சமயத்தில் லண்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்றார். பத்திரிகைக்கு பொது விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதினார். இவ்வளவுக்குமிடையில், தம் மகளைத் தம்முடன் வைத்துக் கொள்வதற்காக வழக்குத்தொடர்ந்து, தாமே வாதாடி வெற்றியும் பெற்றார். மனமாற்றத்துக்காக அல்ஜீப்ரா, ஜாமெட்ரி (வடிவக் கணிதம்), பவுதீகம் இவற்றைக் கற்றார். விஞ்ஞான ஆசிரியராகப் பயிற்சி பெற்றார். பி. எஸ். சி. பட்டத்துக்கான தேர்வு எழுத முயன்றார். இதற்கும் எதிர்ப்பும் தடையும் உண்டாயின. இதற்கிடையில் நிலச்சட்டத் திருத்த மாநாடு ஒன்றைக்கூட்டினார்.

ப்ராட்லா பார்லிமெண்ட் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளே சென்றபோது, கடவுள் பெயரால் உறுதிமொழி கூற மறுத்து, காவலாளிகளால் வன்முறையாக வெளியேற்றப்பட்ட போது, ''சட்டம் செய்பவர்களும் சட்டம் உடைப்பவர்களும்,'' என்ற துண்டு வெளியீட்டை எழுதிப் பரப்பினார், பெசன்ட். ஒரே வாரத்தில் 200 கண்டனக் கூட்டங்கள் நடந்தன. (இதுபற்றிப் பின்னர் விரிவாக.)

இத்தனை சச்சரவுகள், பூசல்கள், தொல்லைகள், கவலைகளுக்கிடையே தாவரத்துறையில் பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றார். இங்கிலாந்திலேயே இவர்தான் இதில் முதல் பட்டதாரி.

பகுத்தறிவு இயக்கமானது சோஷலிச இயக்கமாக விரிந்து

வளர்ந்தது. பர்னர்ட்ஷா, ஹெக்கல், டாக்டர் ஆவ்லிங்—போன்ற பல பெரியார்களின் தொடர்பு ஏற்பட்டது.

## சோஷலிசத் தொண்டு

ப்ராட்லா — பெசன்ட் புகழ் மணம் அய்ரோப்பாவுக்கும் பரவிற்று. சோஷலிசம் ஏராளமான ஆதரவாளர்களைப் பெற்றது.

> "பெசன்ட் விரைவாக ஒரு நல்ல முடிவு செய்வார்; எந்த இயக்கத்திலும் திடும் என்றே குதிப்பார்! இங்கிலாந்திலோ அய்ரோப்பாவிலோ, இவருக்கு இணையான பேச்சாளரே இல்லை; இவரை நெருங்கக் கூடியவர் கூட இல்லை,"

என்கிறார், பர்னர்ட்ஷா!

பகுத்தறிவுக்கும் சோஷலிசத்துக்கும் எல்லைக்கோடு ஏது? ஆகவே, குழந்தைத்தொழிலாளர்கள், தொழிலாளர்வேலை நேரம், போன்ற பல பிரச்னைகளில் குதித்து இடைவிடாத பிரசாரக் கிளர்ச்சி செய்து கொண்டேயிருந்தார், பெசன்ட். குடிசை வாழ் மக்களின் வாழ்க்கை வசதிக்காகப் போராடினார். தீப்பெட்டித் தொழிற்சாலைப் பெண் தொழிலாளர்களின் உரிமைக்காகக் கிளர்ச்சி செய்தார். தொழிற்சங்க இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்தார். ஆண்களைப் போலவே பெண்களுக்குச் சம உரிமை வேண்டுமென்று பெருங் கிளர்ச்சி செய்தார்.

1885ல் பெசண்ட் ஃபேபியன் சங்கத்தில் சேர்ந்து சோஷலிசப் பிரசாரம் செய்தார். அதிகார வர்க்கத்தின் எதிர்ப்பைக் கண்டித்துப் போராடினர். வில்லியம் மாரிஸ், சிட்னி வெப், கிர்ாகாம் வாலெஸ், எட்வர்டு கார்பெண்டர், பர்னர்ட்ஷா போன்ற சோஷலிஸ்ட் பெரியார்களுடன் கலந்து தொழிலாளர்களிடையே சமதர்மப் பொருளாதார தத்துவத்தைப் பரப்பினர்.

(தொடரும்)

### புரோகிதர்!

"உலகத்தாருக்கு உண்மையை எடுத்துக் கூறக்கூடிய துணிவு பெறும் ஒவ்வொருவரும் புரோகிதர்களின் வெறுப்புக்கு ஆளாகியே தீரவேண்டும்; புரோகிதர்களோ, அதிகார வர்க்கத்தைத் துணைக்கழைக்கிறார்கள்; தங்களின் கடவுள்களையும் விவாதங்களையும் நிலைநிறுத்துவதற்கு மன்னர்களின் உதவி தேவையல்லவா? அவர்களின் கொள்கை எவ்வளவு வலுவற்றது என்பதற்கு இம்மாதிரிக் கூக்குரல்களே தக்க சான்று."

—ஜீன் மெஸ்லியர்.

*"காலத்தின் மதிப்பை அறிந்துகொள்; அதைப் பிடி! கைப்பற்று! அதன் ஒவ்வொரு விநாடியையும் இன்பமாக்கு! சோம்பலே வேண்டாம்! தள்ளிப் போடவே வேண்டாம்! இன்றைக்குச் செய்யக்கூடியதை நாளைக்கு என்று தள்ளிவைக்க வேண்டாம்!"*

—லார்டு செஸ்டர்ஃபீல்டு.

அட்டைப் படம்

# புரட்சியின் வித்து!

[ கு. கு. ]

"ஒரு வீட்டுக்கு இரண்டு காவற்காரர்கள் இருக்கின்றனர். "வீட்டுக்குள்ளே உன் தலைவர் இருக்கிறாரா?" என்று முதல் காவற்காரனை நோக்கிக் கேட்கிறாய். "எனக்குத் தலைவர் என்பவரே கிடையாது; என் தலைவர் என்று நீ தவறாகக் கருதிக் கொண்டிருக்கிற ஒருவர் இல்லவே இல்லை," என்று சொல்கிறான். அவனை ஒரு நாத்திகன் என்பார்கள்.

"மற்றொரு காவற்காரனோ, "இல்லையில்லை; எங்கள் தலைவர் உள்ளேதான் இருக்கிறார்; அவர் தம்மிடம் அன்பாயிருப்பவர்களை அழிப்பதற்காக, நஞ்சுகளும் கொலைக் கத்திகளும் உற்பத்தி செய்து கொண்டும், கள்ள நாணயம் தயாரித்துக்கொண்டும், திருட்டுக்கணக்கு எழுதிக் கொண்டும் இருக்கிறார்," என்கிறான். அவனை ஆத்திகன் என்பார்கள்.

"ஆனால் முதற் காவற்காரனாகிய நீ மற்றவனைப் பற்றி என்ன சொல்வாய்? இவன் ஒரு அடிமுட்டாள்! தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற பக்தர்களை எவனாவது கொல்ல நினைப்பானா? 'இவன் சொல்வது சுத்தப் புரட்டு," என்றுதானே சொல்வாய்?"

* * *

"பெரும் புகழ்பெற்ற இரண்டு பாரிஸ் சோதிடர்கள் ஒரு சமயம் என்னிடம் வந்தார்கள். 32 ஆவது வயதில் எனக்கு நிச்சயமாக மரணம் ஏற்படும் என்று கூறினார்கள். ஆனால், நானோ இருவரையும் ஏமாற்றிவிட்டேன். இப்போதே மேலும் முப்பதாண்டு இருந்துவிட்டேன்!"

* * *

இப்படியெல்லாம் நகைச்சுவையும், கிண்டலும், கேலியும் கலந்த, சுருக்கென்று தைக்கும் எடுத்துக்காட்டுகளை அள்ளி அள்ளி வீசியவர், ஃப்ரெஞ்சு எழுத்தாளர் வால்டேர். 21—11—1694-ல் ஃப்ரெஞ்சுத் தலைநகரான பாரிசில் பிறந்தார்; 30—5—1778-ல், 84-ஆம் வயதில் மறைந்தார்.

ஃப்ரெஞ்சுப் புரட்சிக்கு எழுத்தினால் வித்தூன்றியவர், வால்டேர். கவிதையாகவும், நாடகமாகவும், உரை நடையாகவும் மலைமலையாக எழுதிக் குவித்தவர், வால்டேர். எழுத்தின் மூலம் லட்சக் கணக்கில் பணம் திரட்டினார்; முழுவதையும் ஏழை—எளியவர்களுக்கு வழங்கினார். தாம் பிறந்த பாரிஸ் நகருக்குள் நுழையக்கூடாது என்று கத்தோலிக்க மத வெறியர்களால் தடை விதிக்கப்பட்டு 28 ஆண்டுகள் வெளியூரிலும் வெளி நாட்டிலுமாகத் தங்கியிருந்து, பாரெங்கும் வீசிய புகழ்மணத்தோடு,—ஆனால் தளர்ந்து முதிர்ந்து பழுத்த உடலோடு—பாரிசுக்குள்ளே நுழைந்தார். இறந்தவுடனே சவத்தைப் புதைப்பதற்குப் புதைகாட்டில் இடந்தர மறுத்தார்கள் அந்நாட்டு கத்தோலிக்கமத வெறியர்கள். எனவே சவம் இரவோடு

இரவாகத் திருட்டுத்தனமாகப் புதைக்கப்பட்டது. ஆனால் சில ஆண்டுகளில் ஒவ்வொரு எலும் பாகத் தோண்டியெடுத்துப் போட்டி போட்டுக்கொண்டு ஊர் வலம் நடத்தி கோவில் தோட்டத்தில் புதைத்துக் கொண்டாடினார்கள், ஃப்ரெஞ்சு மக்கள்.

"கடவுளே இல்லை" என்ற பொருள் கொண்ட "நாத்திகர்" அல்லர், வால்டேர்! ஆனால் நாத்திகரை விடக்கடுமையாக பைபிளையும், மடமையையும், புரோகிதர்களையும், குருமார்களையும், பாதிரிகளையும், சடங்குகளையும் கண்டித்தார்; தகர்த்துத் தூளாக்கினார். வைதீகத்தின் வைரியாக விளங்கினார்.

"அவரது கொள்கை எக்காலத்திலும் மிக்க வலிமை பெற்றதாகும்" என்கிறார், ரஸ்கின்.

"18 ஆவது நூற்றாண்டின் ஃப்ரெஞ்சு லூதர்; உலகத்தில் சிறந்த உரை நடை ஆசிரியர்கள் ஆறுபேரில் ஒருவர்," என்கிறார், மாத்யூ அர்னால்டு.

"எல்லாப் பாதிரிமார்களையும் ஒன்று சேர்த்தாலும் அவர்களைக் காட்டிலும் வால்டேருக்குத் தான் உலக நாகரீகம் மிகுதியாகக் கடமைப் பட்டிருக்கிறது," என்கிறார் ஜோவட்.

"ஒரு மன்னர் மகன் போல வாழ்ந்தார்; அய்ரோப்பாவையே ஆட்டி வைத்தார். முதன்முதல் இலக்கியத்துக்கு மணிமுடி சூட்டினார். ஃப்ராங்க்லின், ஜெஃப்பர்சன், தாமஸ் பெயின் போன்ற பெரியார்களின் 'நெஞ்சிலும் மனத்திலும் விடுதலை உணர்ச்சி வித்தை ஊன்றியவர் வால்டேர்," என்கிறார், இங்கர்சால்.

ஃப்ரெஞ்சுப் பாதிரியாயிருந்து நாத்திக—மரண விருப்பம் (Will) எழுதிவைத்து விட்டு மறைந்து போன ஜீன் மெஸ்லியரின் நூலைப்படித்து அதைநாடெங்கும் விளம்பரம் செய்து, பரவச் செய்தவர், வால்டேர்..(விரிவான வரலாறு பின்னர்).

---

## அறிவின் அளவுகோல்

"உன் கருத்தோட்டத்துக்கு மாறாகக் கூறப்படும் மிக்க வலுவான எதிர்க் கருத்துக்களைப் படித்து ஆராய்ந்து அறியும் வரையில், உனக்கு ஒரு கொள்கை இருப்பதாகக் கூறவே கூடாது. ஒரு சங்கதியைப் பற்றிப் பேரறிஞர்கள் கூறியுள்ளதைப் பற்றியெல்லாம் நீ தெரிந்துகொள்கிற வரையில் அதைப்பற்றி நீ அறிந்திருப்பதாகக் கருதவே கூடாது. வெளியே பேசுவதை விடப் பல மடங்கு மிகுதியாக வீட்டில் படித்தறிந்து கொண்டாலொழிய, வெளியே நிதானமான பணியைச் செய்யமுடியாது. உனக்கு நீயே நீதிபதியாக இருக்க வேண்டும்; உன் பேச்சை நீயே கேட்டு அதன் குற்றங்குறைகளை நீக்க வேண்டும்; உன்னைப்பற்றித் தூற்றப்படுவதைப் படித்து அதில் எந்த அளவு உண்மை இருக்கிறதென்பதைக் காணவேண்டும்."

—சார்லஸ் பிராட்லா.

# 3. புணர்ச்சி மகிழ்தல்

*[ஆணும் பெண்ணும் சந்தித்து, இயல்பாக உண்டான காதலினால் ஒருவரை ஒருவர் விரும்பி மனங் கலந்து கலவி செய்கின்றனர். இந்த இன்பத்தை ஆண் சொல்லி மகிழ்கின்றான். நாணம் காரணமாகப் பெண் சொல்வதில்லை போலும்!]*

இவளது உடலழகு என் கண்ணுக்கு இன்பத்தையும், சொல் அழகு காதுக்கு இனிமையையும், இதழின் சுவை வாய்க்கு இன்பத்தையும், உடல் மணமும் மலரும் மூக்குக்கு நறுமணத்தையும், உடற்சேர்க்கை என் உடலுக்கு இன்பத்தையும் அளிக்கின்றன. ஆக, ஐம்பொறிகளாலும் நுகரக் கூடிய இன்பங்கள் இவளிடம் இருக்கின்றன. பிற காரணங்களால் நிகழும் நோய்களுக்கு வெவ்வேறு மருந்துகள் உண்டு. ஆனால் இவள் உண்டாக்கிய காம நோய்க்கு இவளே மருந்தாகி, அந்நோயைத் தீர்த்து விட்டாள்.

தான் காதலிக்கின்ற பெண்ணின் உடலைத் தழுவியிருப்பதைக் காட்டிலும், திருமாலின் உலகமான வைகுந்தம் மிகுந்த இன்பத்தைத் தரமுடியாது. ("பேரின்பம்" என்று கூறப்படுவதைவிடச் "சிற்றின்பம்" என்று கூறப்படும் இந்த இன்பம் உயர்ந்ததாகும்.)

தீயை நெருங்கினால் சுடும், விலகினால் சூடு குறையும். ஆனால் இவளோ! விட்டு நீங்கினால் சுடுகின்றது; நெருங்கினால் குளிர்ச்சி தருகின்றது! இப்பேர்ப்பட்ட அதிசயமான நெருப்பு இவளுக்கு எங்கிருந்து கிடைத்ததோ?

என் காதலியுடன் சேர்ந்திருப்பது, நான் இவ் உலகில் என்னென்ன பொருள்களை விரும்புகின்றேனோ அவைகளையெல்லாம் உடனே பெறுவது போன்ற இன்பத்தையளிக்கின்றது.

இதுமட்டுமா? இவளுடன் சேரும்போதெல்லாம், என் உயிருக்கும் புதுப்புது செழிப்பு உண்டாகிறபடியால் இவளது தோள்கள் (புத்துயிர் உண்டாக்குவதாகக் கூறப்படுகின்ற) அமிழ்தத்தினால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவரவர் சொந்த வீட்டிலிருந்து, சொந்த உழைப்பினாலாகிய உணவைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்துத் தானும் உண்பதில் எத்தகைய இன்பம் இருக்கிறதோ, அதே இன்பம் இவளைப் புணரும் போதெல்லாம் இருக்கிறது.

இருவரும் கட்டித் தழுவும் போது காற்றுக்கூட இடையில் புகுந்துவிட முடியாதபடி இறுகத் தழுவியிருப்பது காதலர் இருவருக்கும் இன்பமளிப்பதாகும். புணர்ந்தபின் பிரிந்திருப்பதும், பிறகு இன்ப உணர்ச்சிபெற்றுக் கூடுவதும், காதல் வாழ்வு நிறைவேறப்பெற்றவர்கள் அடைந்த பயன்களாகும்.

நாம் கற்கின்ற ஒவ்வொரு தடவையும், முன்பு நாம் அறியாத அறிவாகவே தோன்றுவது போல், இவளுடன் கலவி செய்கின்ற ஒவ்வொரு தடவையும் இதற்குமுன் நுகராத புது இன்பமாகவே இருக்கிறது.

❖❖❖❖❖❖❖❖

த. சலாவுத்தீன், B. Sc.

# எதிரொலியில் வாழ்க்கை . . .

[வவ்வாலின் வாழ்க்கை பற்றி அதிசயமான உண்மைகளைப் படித்துத் தெளிந்து தொகுத்து எழுதுகிறார், கட்டுரையாளர். வவ்வாலின் கேட்கும் சக்தி மனிதனின் கேட்கும் சக்தியைவிட மிகுந்ததாம்! இன்னும் பல அதிசய உண்மைகள்! அத்தனையும் புதுமைகள்!]

அதைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அது இரவில் தான் தன் அன்றாட வேலைகளைச் செய்யும் என்பதும் தெரியும். பலர் அதைக் கண்டு பயப்படுவார்கள். ஆனால் அதன் வாழ்க்கை நடைமுறைகள், பிறப்பு, வளர்ப்பு, இறப்பு முதலியவைகளைப் பற்றிப் பலருக்குத் தெரியாது. அந்த "அது" எது? அது தான் வவ்வால்.

இதை, வாவல் என்று கூடச் சொல்லலாம். இது பாலூட்டி (Mamalia) வகுப்பிலே கைச் சிறகிகள் எனப் பொருள்படும் கைராப்டிரா (Chiroptera) என்னும் வரிசையை (Order) சேர்ந்தது. பறவையைப் போலச் சிறகுகளை அடித்துக் கொண்டு காற்றில் பறந்து திரிந்து வாழும் சிறிய விலங்கு வகை.

உலகத்திலுள்ள பல பறவைகளில் பறப்பதில் நல்ல ஆற்றல் கொண்டது வவ்வால். இவைகளின் உடலின்மேல் எலிக்கிருக்கும் 'வெல்வெட்' போன்ற மயிர் அடர்த்தியாக இருக்கின்றது. ஆகையால் இவைகளுக்கு ஜெர்மனியர்கள் (Fleder-maus) "பறக்கும் எலிகள்" என்று பெயர் வைத்தனர். ஆனால் உண்மையாக வவ்வாலுக்கும் எலிக்கும் எதிலுமே தொடர்பு இல்லை.

சாதாரணமாக இதைப் பற்றி பலர் பலவிதமான கதைகளைக் கூறுகின்றனர். இந்தியாவில் இதைப் பற்றி பல கட்டுக்கதைகள் விட்டிருக்கின்றார்கள். அதில் ஒன்று கீழ் வருமாறு:

"முதன் முதலில் வவ்வால்கள் ஏறக்குறைய பறவைகள் போல் இருந்தன. ஒரு சமயம் தாங்கள் மனிதர்களாக வேண்டும் என்று இறைவனை வேண்டின. ஆனால் இறைவன் அவைகளுக்கு மனித உருவைக் கொடுக்காமல், இப்பொழுது இருக்கும் வவ்வாலின் உருவைக் கொடுத்து விட்டான். இந்த உருவைப் பெற்ற பிறகு வவ்வால்கள் தங்கள் சுற்றத்தாரான பிற பறவைகளின் முன்வர வெட்கப்பட்டன. ஆகையினால் தான் அவைகள் இரவில் யாருக்கும் தெரியாமல் வெளி வருகின்றன."

இது ரசிக்கும்படியான ஒரு கட்டுக் கதை. நாம் நம் பொது அறிவைக் கிள்ளிவிட்டோமானால் நமக்குப் பல உண்மைகள் தெரியும். வவ்வால்கள் இரவில்தான் வெளி வருகின்றன; வெளிச்சத்தில் வருவதில்லை. ஏன்? அது எப்படித் தன் இரையை இரவில்

தேடிக் கொள்கின்றது? அதற்கு அதனுடைய கண்கள் இரவில் பயன்படுகின்றனவா? இவற்றை இங்கு ஆராய்வோம்.

வாழ்க்கை விள்க்கம்

வவ்வால்களின் காதல் வாழ்க்கை மிகவும் வியப்பானது. ஆணும் பெண்ணும் இலை உதிர் காலத்தில் புணர்கின்றன. ஆனால் புணர்ந்த பிறகு உடனே பெண் வவ்வால் சினைப்படுவதில்லை. பெண், ஆண் விந்தைப் (Male sperms) பத்திரப்படுத்தி வைத்துக் கொள்கின்றது. வசந்த காலத்தில் (Spring) தனக்குப் பிடித்தபோது பத்திரப்படுத்தி வைத்துள்ள ஆண் விந்தை ஏற்றுக்கொண்டு கருத்தரிக்கின்றது. இச்சமயத்தில் ஆண் வவ்வால்கள் தனியே சென்று தூங்கிக் கொண்டிருக்கும்.

வவ்வால்கள் உணவில்லாமல் மூன்று நான்கு மாதங்கள்கூடத் தூங்கும். இச்சமயத்தில் அதன் உடலின் வெப்பம் மிகவும் குறைந்து விடும். இவைகள் சூடான இரத்தம் உடையவை. ஆதலால், ஆராய்ச்சியாளர்கள் இவைகளை குளிர்ப் பெட்டியில் வைத்துத்தான் ஆராய்ச்சி நடத்துகின்றனர். அதற்குள் அது தன் உடலின் வெப்பத்தைக் குறைத்துக் கொள்கின்றது. பிறகு நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றது. இது (Hibernation) "அமைதியான நீண்ட தூக்கம்" என்று சொல்லப்படுகின்றது; நிமிடத்திற்கு 180 தடவை துடிக்கும் இதன் நெஞ்சு இப்பொழுது மூன்று தடவைதான் துடிக்கும். வினாடிக்கு எட்டு முறை மூச்சு வாங்குவது நிமிடத்திற்கு எட்டு முறையாகக் குறைந்து விடுகின்றது இது குளிர்ப் பெட்டியில் பல மாதங்கள் வரை உயிருடன் இருக்கும். இதன் உடலில் இருக்கும் ஒரு விதமான கொழுப்புத் தான் இதற்கு உணவாக இருக்கின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

வவ்வாலின் குஞ்சு பிறக்கும் போது குருடாகவே பிறக்கும். ஒரு பெண் வவ்வால் ஒரு முறை ஒரே ஒரு குஞ்சைத்தான் பெற்றெடுக்கும். பிறந்தவுடன் அது தன் தாயின் உடலைத் தன் பால் பற்களால் கெட்டியாகப்பிடித்துக் கொள்கிறது. இப்படியே சில நாட்கள் அது தன் தாயுடனேயே இருக்கும். அது வரை அதற்கு உணவு தாய்ப் பால்தான். தாய் வவ்வால் தான் பறக்கும்போதும் தன் குஞ்சைக் கூடவே கொண்டு செல்லும். பிறந்த சிறிய குஞ்சு பதினைந்து நாட்கள் ஆனவுடன் அதன் தாயை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து செல்லும். ஆனால் சுதந்திரமாகப் பறந்து சென்று வாழ இரண்டு மாதங்கள் ஆகின்றன. இதன் பிறகு அது சுதந்திரமாகத்தானே தன் உணவைத் தேடிக் கொள்கிறது.

வவ்வால் இரவில் தான் தன் இரையைத் தேடுகின்றது; வெளியில் பறந்து செல்கின்றது. அது ஏன்? பலர் அதன் கண்கள் மிகவும் கூர்மையானவை என்று நினைத்து சில கண் நோய்களுக்கு வவ்வாலின் இரத்தத்தைப் பயன்படுத்துகின்றனர் இவை இருட்டில் எப்படி வழியைக் கண்டு கொள்கின்றன என்பதையும் கவனிப்போம்.

பல பேர் இதன் மாயமான இரவு சஞ்சரிப்பைப் பற்றிக் கண்டு பிடிக்க ஆராய்ச்சிகள் நடத்தினர். இதே போல் 1793ல் முதன் முதலில் இத்தாலியைச் சேர்ந்த "லாசாரோ ஸ்பிலான்சானி" (Lazzaro Spllanzani) என்ற விஞ்ஞானி, ஆந்தைகள் இரவில் பறக்க தங்கள் பெரிய

கண்களை உபயோகப்படுத்துகின்றன; ஆனால் வவ்வால்கள் இரவில் நடமாடுவது எப்படி என்பதைப் பற்றி ஆராய்ந்தார்.

ஒருநாள் அவர் தம் ஊரிலுள்ள மாதா கோவிலில் தொங்கிக் கொண்டிருந்த பல வவ்வால்களைப்பிடித்து அவைகளின் கண்களை மூடி கோவிலிலிருந்து வெகு தூரம் கொண்டு போய் விட்டு விட்டார். மறுநாள் காலை மாதா கோவிலில் அவைகளின் வருகைக்காகக் காத்திருந்தார். அவை ஒரு தடங்கலும் இல்லாமல் மீண்டும் தம் இடத்திற்கே வந்து விட்டன. கண்ணை மூடி விட்டவைகளையும், மூடாமல் விட்டவைகளையும் கொண்டு சென்று அறுவை செய்து பார்த்தார். இருவித வவ்வால்களின் வயிற்றிலும் உணவு (பூச்சிகள், புழுக்கள்) நிறைந்திருந்தது. இதே போல், சுவிஸ் நாட்டு விஞ்ஞானி சார்லஸ் ஜுரைனுடன் (Charles Jurine) சேர்ந்து பல ஆராய்ச்சிகள் நடத்தினார். வவ்வாலின் காதுகளில் சிறிய பித்தளையால் செய்த மூடிகளை, நன்றாக அழுத்தி மூடிப் பறக்க விட்டார். 1790-ல் வவ்வாலின் காதுகளுக்குச் சரியான மூடிகளைச் செய்வதென்பது மிகவும் கடினம். அவைகளின் காதின் உள் இடைவெளி ஒரு மில்லி மீட்டருக்கும் சிறியது. ஆகையால் இவைகளைச் செய்து ஆராய்ச்சிகள் நடத்துவதென்பது அந்தக் காலத்தில் வியக்கத்தக்க செயல் தான்.

## சீக்கியர் மதம்

இதை நிறுவியவர் குரு நானக். இவர் லாகூருக்கு அருகில் 1469ல் பிறந்து 1538ல் மறைந்தார். இவர் சாதியையும் சமயச் சடங்குகளையும் எதிர்த்துப் பிரசாரம் செய்தார். இவர் காலத்தில் இவரது மதம் பரவவில்லை. இவருக்குப் பின் தோன்றிய தலைவர்களான அங்கத், அமர்தாஸ், ராமதாஸ், அர்ஜுன் சிங், கோவிந்த சிங், ஹர் ராய், ஹர்கிஷன், டெக் பகதூர் சிங் — போன்றவர்களால்தான் சீக்கிய மதம் வளர்க்கப்பட்டது. பல பெரியவர்களின் நல்லுரைகளைத் தொகுத்து, "ஆதிகிரந்தம்" என்ற நூலாக ஆக்கியவர், அர்ஜுன் சிங் என்ற தலைவர்.

சீக்கியரின் அடையாளங்களான, கத்தி, நீண்ட தலைமயிர், கைவளையல், சீப்பு, கச்சம் ஆகிய அய்ந்தையும் கட்டாயமாக்கி, சில கட்டுப்பாடுகளையும் விதித்து சீக்கியரை உருவாக்கியவர், கடைசி குருவான கோவிந்த சிங் ஆவார்.

சீக்கியருக்கு சிலை வணக்கமில்லை. கடவுள் ஒருவரே என்ற கொள்கை உண்டு. இந்நாட்டில் ஏறத்தாழ 63 லட்சம் சீக்கியர் உள்ளனர்.

### தொடர்ந்த ஆராய்ச்சிகள்

இவ்வாறு காதுகள் அடைக்கப்பட்ட வவ்வால்கள் பறக்கவிட்ட போது அவை தம் பாதையில் கட்டப்பட்டிருந்த நூல்கள் போன்ற பல தடுப்புகளில் மோதிக்கொண்டன. ஆகையால் அவை காதுகளினால் பார்க்கின்றன என்பதைக் கண்டுபிடித்தார். அதெப்படிக் காதுகளினால் பாதையைக் காண முடியும் என்று பலபேர் கேள்விகள் எழுப்பினர்; பரிகசித்தனர். ஸ்பிலான்சானியின் ஆராய்ச்சி முடிவுகளை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

சிலர், அவற்றின் சிறகுகளின் மேல் ஏதோ ஒரு சவ்வு இருக்கிறது; அதனால்தான் இருக்கும்

தடுப்புகளைத் தெரிந்து கொள்கின்றன என்று கூறினர். ஆனால் இதற்கு ஒரு ஆதாரமும் இல்லை. இதன் பிறகு, "ஸ்பிலான்சானியின் வவ்வால் பிரச்னை" (அப்பொழுது மக்கள் பெயரிட்டது) இருபது ஆண்டுகள் வரை யாராலும் தீர்க்க முடியாமல் இருந்தது.

இதன் பிறகு டொனல்ட் ஆர். கிரிப்பின் (Donald R. Griffin), ராபர்ட் கேலம்போஸ் (Robert Galambose) என்ற இரண்டு விலங்கு நூல் ஆராய்ச்சியாளர்கள் பல ஆராய்ச்சிகள் நடத்தினர்.

ஓர் இருட்டு அறையில் குறுக்கும நெடுக்குமாக மிகவும் மெல்லிய கம்பிகளைக் கட்டி விட்டனர். பிறகு பல வவ்வால்களை அதன் உள்ளே விட்டனர். அவைகள் அக்கம்பிகளின் மேல் படாமல் பறந்தன. அது எப்படி என்று ஆச்சரியப்பட்டனர். பிறகு வவ்வால்களின் கண்களை மூடிப் பறக்க விட்டனர். அப்பொழுதும் அவைகள் கம்பிகளின்மேல் படாமல் பறந்தன. இதனால் அவை கண்களின் உதவியால் பறக்கவில்லை என்பது தெரிந்தது. ஏதோ ஒரு புதிய முறையில்தான் அவைகள் பறக்கின்றன. அந்த முறைதான் என்ன?

## எதிரொலி

பிறகு அவைகளின் வாய்களைக் கட்டிப் பறக்க விட்டனர். இப்பொழுது கம்பிகளின் மீது மோதிக் கொண்டன. மறுமுறை அவைகளின் காதுகளை அடைத்துப் பறக்க விட்டனர். இப்பொழுதும் அவைகள் கம்பிகளின் மீது மோதிக் கொண்டன. இதனால் வவ்வால்கள் தங்கள் ஒலியினது எதிரொலியின் (Echo) உதவியால் பறக்கின்றன என்று தெரிந்தது. ஒலியின் எதிரொலியின் மூலம் பறக்கின்றன என்றால் அவை செய்யும் ஒலி நமக்குக் கேட்பதில்லையே, ஏன்? மனிதனுடைய கேட்கும் சக்தியைவிட வவ்வாலின் கேட்கும் சக்தி அதிகமாகும். மனிதன் விநாடிக்கு 20,000 அதிர்ச்சிகளைக் கொண்ட ஒலி அலைகளைக் கொண்ட ஒலியைத்தான் கேட்க முடியும். அதற்கு மேல் நம் காதுகளால் ஒன்றும் கேட்க முடியாது. சில சமயங்களில் நாய் திடீரென்று தன் காதுகளை விரைத்துக் கொள்ளும். ஏன்? நம்மைவிட நாயின் கேட்கும் சக்தி அதிகம். அதற்குக் கேட்பது நமக்குக் கேட்பதில்லை. நாயை விட வவ்வாலின் கேட்கும் சக்தி அதிகமாகும்.

கார்னல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டொனல் கிரிபின் என்பவர், ஜி. டபிள்யு. பியர்ஸ் (G. W. Piers) என்ற ஹார்வார்டைச்சேர்ந்த பூத நூல் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்த 'மின் ஆய் கருவி' (Electronic apparatus) யின் மூலம் வவ்வால்கள் பறக்கும்போது செய்யும் ஒலியை அளந்தார். அவைகளின் ஒலி விநாடிக்கு 45,000-த்திலிருந்து 50,000 ஒலி அலைகளைக் கொண்டுள்ளது, என்றும், அந்த ஒலி வினாடியின் 50 ல் ஒரு பங்கு கேட்கின்றது என்றும், கண்டுபிடித்தார். ஒவ்வொரு ஓசைக்கு நடுவில் சிறிய அமைதி இருக்கின்றதாம். ஏனென்றால் அது உண்டாக்கிய ஒலியின் எதிரொலி திரும்பி வந்து அதற்குக் கேட்கும் வரை அது மறுபடியும் ஓசை செய்வதில்லை. கேட்டவுடன் மறுபடியும் தன் வாயால் ஒலியை உண்டாக்கும்.

இவரும் இன்னும் பலரும் செய்த ஆராய்ச்சிகளின் மூலம் தெரிவது இதுதான். இரவில் வவ்வால் பறக்கும்போது அதன்

வாயிலிருந்து ஒலி விட்டுவிட்டு வருகின்றது. அது, தான் பறக்கும் பாதையில் ஏதாவது மரம் அல்லது வேறு தடுப்பு இருந்தால் அதில் ஒலிபட்டுத் திரும்பு கின்றது. இந்த எதிரொலியைக் கேட்கும் சக்தியை மிகுதியாகக் கொண்ட வவ்வால் அதன் மூலம் பறக்கின்றது; தடுப்புகளின் மீது மோதாமல் விலகிச் சென்று விடு கின்றது. ஒலி ஒரு விநாடியில் 1,130 அடிகள் வேகமாகச் செல் கின்றது. ஆனால் வவ்வால் அதைவிட மெதுவாகத்தான் பறக்கின்றது. 11 அல்லது 12 அடிக்கு அப்பால் ஒரு பட்டு நூலைக்கட்டியிருந்தாலும் அது தன் எதிரொலியின் மூலம் அதைத் தெரிந்து கொள்கின்றது. இந்த எதிரொலி முறைதான் இன்று ''ராடார்'', ''சோனார்" கருவிக ளில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

## இரை தேடுவது

வவ்வால்கள் இதே முறையில் தான் தங்கள் இரையைத் தேடிக் கொள்கின்றன. புழு, பூச்சிகள் இருக்கும் இடத்தை தங்களின் ஒலியின் எதிரொலியின் மூலம் தெரிந்து கொண்டு தங்கள் கூர் மையான பற்களால் கடித்துத் தின்று விடுகின்றன. உலகத்தில் பலவிதமான வவ்வால்கள் இருக் கின்றன. இதில் ஏறக்குறைய எல்லா வகைகளும் புழு, பூச்சி களைத்தான் இரையாகக் கொண் டுள்ளன. ஆகையால்தான் இவைகளுக்கு 'பூச்சித் தின்னி கள்' என்றும் பெயருண்டு.

ஒரு வகை வவ்வால் பழங்களை உண்கின்றது. ஆராய்ச்சியாளர் ரோஸ். கி. ஹட்சின்ஸ் என்பவர் இரவில் ஆராய்ச்சி செய்வதற்காக (Guam) கூவம் என்ற தீவில் தங்கினர். தூங்கும் போது ஒருவிதமான ஓசையைக் கேட்டு அருகிலிருந்த பழச்செடிகளின் மீது கை விளக்கை அடித்துப் பார்த்தார். அங்கே ஏராளமான வவ்வால்கள் பழங்களைத் தின்று கொண்டிருந்தன. இவைகளின் இறக்கையின் நீளம் ஏறக்குறைய நான்கு அடி. விஞ்ஞானிகளுக்குத் தெரிந்தவகைகளில் இவைகள்தான் நீளமான இறக்கையைக் கொண்டுள்ளவை. இவைகளை இந்தியாவிலுள்ள சிலரும் கிழக்கு இந்தியர்களும் உண்கின்றனர்!

வவ்வால்கள் யாரையும் தாக்குவதில்லை. ஆனால் ஒருவகை வவ்வால்கள், பிராணிகள், மனிதர்கள், ஆகியோரின் இரத்தத்தைக் குடித்து வாழ்கின்றன. இரவில் இவை பிராணிகளின் மீது உட்கார்ந்து தங்கள் கூர்மையான பற்களால் காயம் செய்து அதிலிருந்து வரும் இரத்தத்தைக் குடித்து விடுகின்றன. இதனால்தான் சில சமயங்களில் பெரும் பண்ணைகளில் இருக்கும் ஆடுகளும் மாடுகளும் மெலிந்து இருக்கும்.

வவ்வால்கள் இன்னொருவகை மீனையும், மற்றொன்று தவளையையும்தன் உணவாகக் கொண்டிருக்கின்றது. மீனை இரையாகக் கொண்டது எப்படி மீனைப் பிடிக்கின்றது என்பது வியப்பாயிருக்கும். இரவில் இது குளம், குட்டை நீர் நிலைகளின் மேலாகப் பறந்து சென்று திடீரென்று தண்ணீரில் தன் இருகால்களை விட்டு மீனைப் பிடிக்கின்றது. தன் எதிரொலியின் உதவியால் தான் இப்படிச் செய்கின்றதா என்று இன்னும் தெளிவாகவில்லை.

உலகத்தில்ஏதோ ஒருமூலையில் மனிதனையே உண்ணும் சாதியினர் இன்றும் இருக்கின்றனர் என்கிறார்கள். இதேபோல் வவ்வால்கள் உண்ணும் 'காட்டு

மிராண்டி' வவ்வால்கள் உலகில் மிகச்சில இடங்களில் இருக்கின்றன. இந்த வகையைச் சேர்ந்த வவ்வால்கள் இந்தியாவில்தான் அதிகமாக உள்ளன.

சில வகையான் வவ்வால்கள் மனிதனைக் கடித்தால் (Hydrophobia) "ஹைட்ரோ ஃபோபியா" (Trypanosomiasis) "டிரைபானோ சோமியாசிஸ்" என்ற நோய்கள் வருகின்றன. ஆனுல் பொதுவாக வவ்வால்களுக்கு எதிரிகள் யாருமில்லை என்றே சொல்லலாம். சிலவேளைகளில் ஆந்தைகள் வவ்வால்களைக் கொன்று விடுகின்றன என்று சொல்லுகிருர்கள்.

## மற்றப் பண்புகள்

வவ்வால்கள் நன்கு பறக்கும் திறமை உடையவை. அவை தங்கள் எடைக்கு இரண்டு மடங்கு எடையைத் தூக்கிக் கொண்டு பறக்கும். இவைகளின் எதிரொலியின் தன்மை 'ராடார்' 'சோனுன்' (கப்பலில் செல்லும் போது கடலின் ஆழத்தை அளக்கும் கருவிகள்) விட பல லட்ச மடங்கு சிறந்தது. வவ்வால்கள் அதிக தூரம் பறந்து செல்லும் என்று பல ஆராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடித்திருக்கிருர்கள். ஒரு தடவை நியூ மெக்ஸிகோவில் அடையாளமிட்டுப் பறக்க விடப்பட்ட வவ்வால் 810 மைல்களுக்கு அப்பாலுள்ள தென் மெக்ஸிகோவில் மீண்டும் பிடிக்கப்பட்டது. தன் இருப்பிடத்திலிருந்துபல மைல்களுக்கு அப்பால் விட்டு வந்தாலும் அது தன் பழைய இருப்பிடத்திற்கு மீண்டும் திரும்பி விடும்.

வவ்வாலில் சுமார் 1400 வகைகள் இருக்கின்றன. இவைகளின் பழக்க வழக்கங்கள் ஒன்றுக் கொன்று மாறுபடுகின்றன. இவை குளிர்காலத்தில் கூட்டம் கூட்டமாக எங்கு செல்கின்றன என்பது இன்னும் தெரியாமல் வியப்பாகவே இருக்கின்றது.

விலங்கு ஆராய்ச்சி நூலில், விலங்குகள் சிறிதாக இருந்தால் அவற்றின் வாழ்நாளும் குறுகியதாக இருக்கும் என்று ஒரு பொது விதி இருக்கின்றது. யானை பெரிதாகஇருப்பதால்அது பலஆண்டுகள் உயிர் வாழ்கின்றது; எலி ஒரு ஆண்டுக்கு மேல் வாழ்வதில்லை. ஆனுல் வவ்வால் சிறியதாக இருந்தாலும் அது பதினைந்து ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றது. அதாவது பொது விதிக்கு விலக்காக வாழ்கின்றது.

ஆராய்ச்சியாளர்கள் வவ்வாலைப் பற்றி மேலும் பல ஆராய்ச்சிகள் செய்கின்றனர். இதன் சேர்க்கையைப் பற்றி இன்னும் பல உண்மைகள் தெரியவில்லை. அவை தெரிந்தால் விலங்குகளுக்கு (Artificial insemination) 'செயற்கைச் சேர்க்கை' முறையினுல் பயன்படக் கூடிய பல புது மருந்துகளைக் கண்டு பிடிக்கலாம். வவ்வால்கள் பாலூட்டிகளாகையால் இந்த முறையில் மனிதருள் சிலருக்குப் பயன்படும் படியான சில முறைகளைக் கண்டு பிடிக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வவ்வால் சிறியதுதான். அது இரவில்தான் வெளிவருகின்றது. ஆகையால் நாம் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனுல் அதைப்பற்றி நன்ருக அறிந்த பிறகு மனிதனுல் வாளா இருக்க முடியாது. இனிமேல் நீங்கள் வவ்வாலைக் கண்டால் பயப்பட வேண்டாம். அதைப்பற்றி நம்மவர்கள் கூறிய கட்டுக்கதைகளை நம்ப வேண்டாம். அவைகளைப் பற்றி மேலும் அறிவதற்கு முற்படுங்கள். ★

# அரசியலும் பொருளாதாரமும்

—டாக்டர். பா. நடராஜன், M.A., D. Litt. —

*[பொருளாதர்ரம் என்பது ஒரு கலையா? அல்லது விஞ்ஞானமா? இன்று உலகை ஆட்டிப் படைக்கும் இத்துறையின் பிறப்பு, வளர்ப்பு என்ன? பொருளாதாரமும் அரசியலும் ஒன்றுக்கொன்று மாறு பட்டதா? அல்லது தொடர்பு கொண்டதா? இந்த இரண்டில் எது முக்கியம்? எது, எதற்கு ஆதாரம்?- ஆகியவை பற்றி இங்கிலீஷில் பல்லாயிரக்கணக்கான நூல்கள் உண்டு. தமிழில், இக்கட்டுரை ஆசிரியர் எழுதியுள்ளதும் பிறவும் போன்ற 5-6 நூல்கள் மட்டுமே உண்டு. இது பற்றிச் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார், பொருளாதார வல்லுநர், டாக்டர் நடராஜன்.]*

அரசியலும் பொருளாதாரமும் தனித் தனி அறிவுத் துறைகள்; அரசியலுக்கென்று சில அடிப்படைக் கோட்பாடுகள் உள்ளன; அவற்றிற்கும் பொருளாதார செயல்முறைகளுக்கும் தொடர்பில்லை; அது போலவே பொருளாதார நூலுக்கும் தனக்கென சில விதிகள் உள்ளன. அவை எந்த அரசியல் அமைப்புக்கும் பொருந்தியவை. அவை விஞ்ஞான விதிகள் போன்றன— இவ்வாறு இன்றைய நாளில் பலர் பகுத்துக் காண்கின்றனர்.

ஆனால் இவை இரண்டும்பற்றி ஆய்ந்த நமது ஆன்றோர்கள் இங்ஙனம் கருதினாரில்லை. அவருட் சிலர் அரசியல் முதன்மை யென்றார்; வேறு சிலர் பொருளாதாரம் முதன்மையென்றார்; ஆயினும் இரண்டும் இணைபிரியாதன; ஒன்றையொன்று தழுவுவது; ஒன்றுக்கொன்று ஆதாரமானது—என்றே கொண்டார்கள்.

நெல்லும் உயிரன்றே, நீரும்
உயிரன்றே;
மன்னனுயிர்த்து மலர் தலை
யுலகம்,

என்று பாடிய சங்கப்புலவர், அரசியலையே பொருளாதாரத்தினும் சிறப்பாகக் கூறினார். ஆனால் இது அரசனுக்குக் கூறியது; அவன் தன் கடமையை உணரும் வகையில் இடித்துரைத்தது.

நெல்லும் நீரும் வளங்கொள்ள வேண்டுமானால், நாட்டிலே அதன் வழி நல்ல பொருளாதார நிலை ஓங்க வேண்டுமானால், அடிப்படையான அரசியல் சூழ்நிலை சிறந்து அமைய வேண்டும் என்பது கோவூர்க்கிழார் கருத்தாயமைந்துள்ளது. இவ்வாறாக, பொருளாதாரத்துக்கும் அரசியலுக்கும் இருக்கும் நெருங்கிய உறவை சங்கப் புலவர்கள் வற்புறுத்தினர்.

அரசியல் அறம்கூற வந்த வள்ளுவர் அதற்கு பொருட்பால் என்று தலைப்புக் கொடுத்தார்.

நல்லதொரு பொருளாதார நிலை நாட்டின் நல்வாழ்வுக்கு ஊற்ருகும். அதற்கு அறநெறியிற் செல்லும் அரசுச் சூழ்நிலை இன்றியமையாத கருவி என்று கருதலானர்.

"தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடா"யினும், அந்த நாட்டிலே "உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் சேராது இயல்வதா"யிருக்க வேண்டும்; அதற்கு ஏற்ற அரசியல் அமைப்பு வேண்டும், என்று கொள்ளலானர். உற்பத்திப் பெருக்கம், சேமிப்பு, சேமித்த பொருளைத் திரட்டிக் காத்தல், உழைப்பின் ஊக்கம் குன்ருத வகையில் பொருளாதார வேற்றுமை மிகுதியில்லாத சமூக நிலை—இவை வேண்டுமென்ருர்; இவற்றைத் தரவல்லது நல்லாட்சியே என்பதை விளக்க, 'பொருட்பாலின் தலைமை உறுப்பாக' இறைமாட்சி' என்னும் அதிகாரத்தை வைத்ததோடு,

"இயற்றலும், ஈட்டலும்,
காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற அருமைத் திருக்குறளையும் பெய்து வைத்தார்.

வள்ளுவர் வகுத்த பொருளாதார நெறிகள் இரண்டு கூருக அமைகின்றன. ஒன்று, அரசாங்கத்துக்கு வேண்டிய பொருள் செயல் வகை முறை. மற்றது, மக்கள் வாழ்வு நலனுக்கு வேண்டிய உழவு, ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, குடி செயல் வகை, நன்றியிற் செல்வம், இரவச்சம் போன்றவை உள்ளிட்ட குடி மக்களின் பொருள் செயல் வகை முறைகள். இந்த இரண்டுமே நல்லாட்சியின்பாற் பெறப்படுவன என்று கண்டு, அந்த ஆட்சியின் இலக்கணங்களை வகுக்கலானர்.

பொதுவாகப் பார்க்கும்போது, பொருளாதாரத்தை உயிராகவும், அரசியலை உடலாகவும், இவ்விரண்டுக்கும் இன்றியமையாத அறநெறிகளை ஆன்மாவாகவும் வள்ளுவர் கொண்டார் எனலாம்.

## பிறமொழி நூல்களில்

வடமொழியில் அரசியல் நெறியை வகுக்கப் போந்த சாணக்கியரும் தமது நூலுக்கு "அர்த்த சாஸ்திரம்" அல்லது "பொருள் நூல்" என்றே பெயர் சூட்டலானர். ஆனல் கிரேக்க ஆசிரியரான பிளாட்டோ என்பவரோ, "ரிபப்ளிக்" அல்லது "குடியரசு" என்று தமது நூலுக்கு தலைப்புச் சூட்டி, உண்மையில் புரட்சி மிக்க பொருளாதாரக் கருத்துக்களை நிலைநாட்டும் ஒரு அரிய களஞக அதனை அமைத்துக் கொண்டிருக்கிருர். அது போலவே, அவர் சீடரான அரிஸ்டாட்டிலும், "பாலிட்டிக்ஸ்" அல்லது "அரசியல்" என்ற ஒரு நூலெழுதி, அதில் தாம் கண்ட, தமது ஆசிரியரோடு மாறுபட்ட, பொருளாதார நெறிகளைப் பொதிந்து வைத்தார்.

இங்ஙனமாக, தொல்லாசிரியர்களெல்லாம் ஓரொருகால் பொருளாதாரத்தையும், ஓரொருகால் அரசியலையும் வற்புறுத்திச் சென்ருர்களேயாயினும், ஒன்றை விடுத்து ஒன்றை எடுத்துக் கூறினரில்லை. நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்றில்லாது, பொருளாதாரமும் அரசியலும் "ஒன்றில்லாது மற்ருென்று இல்லை", என்பதாகவே கொண்டுள்ளார்கள். இங்ஙனமாகவே பல நூற்ருண்டுகளாக இத்தொடர்பு இடை

யீடின்றி நூல்தொறும், நூலாசிரியர் பெயருரையே தாங்கி தொறும் நீடித்து வந்துள்ளது. நின்றது.

பொருளாதார நூலை ஒரு தனி நூலாக முதன் முதல் தொகுத்த பெருமை ஆடம் ஸ்மித் (Adam Smith) என்ற ஆங்கில ஆசிரியரையே சாரும். இதனால் இவரை "பொருளாதார நூல் தந்தை" என்று சொல்கிறார்கள். இவர் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இதற்கு முன் அரசியலோடு விரவியிருந்த கருத்துக்களை, வேறு பிரித்து, தனக்கென பொருளாதார நூலுக்கு சிற்சில கோட்பாடுகள் உள்ளன; இந்த கோட்பாடுகள் எல்லா அரசியலுக்கும், எல்லாக் காலத்துக்கும், எல்லா நாட்டுக்கும் பொருத்தமானவை; இவற்றை மேற்கொண்டால் தான் அரசாங்க வருமானம் சிறக்கும்; மக்கள் வாழ்க்கை நலன் பெருகும்—என்று அறுதியிட்டார். "நாடுகளின் செல்வம்" (Wealth of Nations) என்ற இவருடைய முதல் நூல் 1776-ல் வெளி வந்த பிறகுதான், "பொருளாதாரம்" ஒரு தனிக் கலையாகியது.

## கலையா? விஞ்ஞானமா?

ஆயினும் அது ஒரு கலையே; விஞ்ஞானமன்று. அதாவது, அன்றுடஅரசியல் ஒழுக்கத்துக்கு இன்றியமையாத, நடைமுறையில் கையாள வேண்டிய கோட்பாடுகளின் தொகுப்பு என்ற நிலையிலேயே பொருளாதார நூல் இருந்தது. அரசியலோடு நெருங்கிய உறவு கொண்டது; அரசியலில் நின்றும் வேறு பிரித்து இயங்க இயலாத வகையிலுள்ளது—என்ற குறிப்பை உணர்த்தி நின்றதால், அன்று அது "பொலிடிகல் எக்கானமி"— அல்லது, அரசியல் பொருளாதா

ஆடம் ஸ்மித்துக்குப் பின்னே வந்த பல பொருளாதார ஆசிரியர்கள் பொருளாதார நூலை ஒரு விஞ்ஞான நூலென்று சாதிக்க முன் வந்தனர். இயற்கையான, எந்தவிடத்தும் எக்காலத்தும் வரையறையில்லாது உண்மையாகச் செயல்படும் நியதிகளை அடிப்படையாகக் கொண்டது விஞ்ஞானம். அது போலவே, பொருளாதாரத்திலும் காலதேச வரையறையைத் தாண்டி, மாறாமல் நிகழும் நியதிகள் உள்ளன. எனவே, பொருளாதாரமும் ஒரு

> ### நாகர்கள்
>
> இவர்களுக்கு இப்பெயர் வந்த காரணம் தெரியவில்லை. இந்தியா-பர்மா எல்லையில் சுமார் 6000 சதுர மைல் பரப்புள்ள நாகாலாண்டில் (நாகர் நாடு) இவர்கள் வாழ்கின்றனர். நாகர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஆறு லட்சம். இவர்களில் பெரும்பாலோர் நாகர் மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். மீதிப் பேர் நேபாவின் எல்லைப் புறத்திலும் மணிப்பூர் மாநிலத்தின் வட பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசும் இனத்தவர்கள்.
>
> இவர்களின் இடைவிடாக் கிளர்ச்சியின் விளைவாகவும், பிற்போக்கான வாழ்க்கை நிலை காரணமாகவும், இந்நாட்டை ஒரு தனி நிர்வாக 'யூனிட்'டாக ஆக்கி சட்டம் இயற்றப்பட்டு, ஆட்சி புரியப்பட்டு வருகிறது.
>
> சீரமைப்புத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு, சட்ட மன்றம், அமைச்சர் - அவை—முதலியன ஏற்படும்.

விஞ்ஞானமாகும். ஆயினும் அது முற்றிய ஒரு விஞ்ஞான நூலாகாது. இன்னின்ன நிலைமைகள் இவ்வாறிருந்தால், இன்னபடியாக நிகழும் என்று ஒரு கட்டுப்பாடு கொண்ட நியதிகளையே யுடையது. இந்த முறையில் பார்த்தால் பொருளாதார நூலை, வான நிலையைக் கூறும் விஞ்ஞான நூலோடு ஒத்ததாகச் சொல்லலாமே தவிர, மிகத் துல்லியமான நியதிகளைக் கொண்ட பௌதிக நூலுக்கோ, இரசாயன நூலுக்கோ, கணித நூலுக்கோ ஒப்பக் கூறுவதற்கில்லை. ஆயினும், பொருளாதார நூல் ஒரு விஞ்ஞான நூலே. தனக்கென இயற்கை நியதிகளைக் கொண்ட நூல். நியதிகளுக்குள்ள நிபந்தனைகளுக்கு உள்ளடங்கினால் எந்த அரசியலிலும், அந்த நியதிகள் உண்மையாகவே இருக்கும். ஆகவே, அது அரசியலுக்குக் கீழடங்கிய ஒரு கலை என்பது தவறு. அதனை விஞ்ஞானமென்றே கூறுதல் வேண்டும். அரசியல் மணம் வீசும், ''பொலிடிகல் எக்கானமி'' என்ற பெயர் அதற்கு இனி பொருந்தாது; விஞ்ஞான மணம் வீசும் ''இக்ஸ்'' என்ற விகுதி கொண்ட ''எக்கனமிக்ஸ்'' என்பதே அதற்குப் பெயராக வேண்டும் — இங்ஙனமாக பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில், பொருளாதார ஆசிரியர்கள் சிந்தனை நலம் செல்ல, கலை விஞ்ஞானமாக்கப்பட்டது. அதற்கேற்ப, நூலின் பெயரும் மாற்றப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டு, விஞ்ஞான நூல்கள் புத்தம் புதிதாக முகிழ்த்த காலம். ஒவ்வொரு அறிவுத் துறையிலும் அஃகி அகன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இயற்கை நியதிகள் அறுதியிட்டு முடிவு கூட்டப்பட்டு, அறிவுத்திரள் பல துறைகளாகப் பாகுபாடு செய்யப்பட்டு, அவ்வத்துறையின் பொது விதிகள் வரையறுக்கப்பட்டு, அவற்றின் தொடர்பு விளக்கம் தெளியக் காண முயன்ற காலம். அது காலம், கலையளவிலே கருதப்பட்ட பல அறிவுத் துறைகள் விஞ்ஞான நிலையைப் பெற முயன்ற காலம். இந்தக் காலத்தில்தான், உயிர் நூல் (Zoology), உள நூல் (Psychology), வளர்ச்சி நூல் (Genetics), தாவர நூல் (Botany), புவி நூல் (Geology) போன்றகலைத்திறன்களெல்லாம் விஞ்ஞான உருவம் பெற்றன. விஞ்ஞான முறைகளான சுருதி, யுக்தி என்ற இரண்டினேடு, ஆராய்ச்சியால் வரும் அனுபவத்தையும் 'எகனமிக்ஸ்' (பொருளாதாரம்) மேற்கொண்டு நின்றது. விஞ்ஞானம் என்ற சொல்லுக்கு பத்தொன்பதாம் நூற்றுண்டின் அறிவு உலகத்தில் தனிப் பெருமையும், தனி இடமும் பிறந்தன. அந்தக் காலத்திலேதான் பொருளாதாரமும் விஞ்ஞான நூலின் வரிசையில் ஏற முயன்றது.

## விஞ்ஞானத்தில் வேற்றுமை

ஆயினும், அது இயற்கை விஞ்ஞான நூல்களோடு வைத்து எண்ணப்படும் நிலையிலில்லை என்பது உணரப்பட்டது. அதன் விதிகள் சில நிர்ப்பந்தங்கள் அல்லது கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய வழியில்தான் உண்மையாகின்றன. இந்தக் கட்டுப்பாடுகள் எல்லா விஞ்ஞான நெறிகளிலும் ஓரோ அளவு காணப்படுவதாயினும், பொருளாதாரத்துறையில் மிகச் சிக்கலானவைகளாகவும், நடைமுறையில் எளிதில் கைகூடாதனவாகவும் இருக்கின்றன. காரணம், இயற்கை விஞ்ஞான நூல்களான இரசாயனம், பௌதிகம் போன்றவை இயற்கைப் பொருள்களைப் பற்றிய உண்மைகளைக் கூறுவதாயிருக்

கின்றன. அவற்றைப் பற்றிய ஒரு யூகம் அல்லது யுக்தியான கோட்பாட்டை விஞ்ஞானி ஒருவர் வெளியிடுவதானால், அது உண்மைதானா அல்லவா என்று கண்டறிய அவருக்கும் வேறு பல விஞ்ஞானிகளுக்கும் பலசோதனைகள் செய்து கொள்ள முடிகின்றது. நீர் வாயுவும், உயிர்க்காற்றும் இன்ன இன்ன அளவில் சேர்வதனால் தண்ணீர் உண்டாகும்என்று ஒரு விஞ்ஞானி சொன்னால், ஒரு கண்ணாடிக் குழாய்க்குள் அந்த இரு வாயுக்களையும் சொன்ன அளவில் அடைத்து, தண்ணீர் வருகின்றதா இல்லையா என்று உறுதி செய்து கொள்ள முடியும்.

ஐன்ஸ்டீன் என்னும் கணித மேதை, 'ரிலேட்டிவிட்டி' என்ற ஒரு கோட்பாட்டை தமது சிந்தனை நுணுக்கத்தில் கணக்கிட்டுக் கண்டார். பிறகு, பல விஞ்ஞானிகள் சூரிய கிரகண காலங்களில் தகுந்த இடங்களுக்குச் சென்று, பல நுட்பமான விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்தி ஐன்ஸ்டீன் சொன்னது உண்மையே என்று உறுதிப் படுத்தி விட்டார்கள்.

ஆனால், பொருளாதாரத்தில் இம்மாதிரியான சோதனைகள் செய்வதற்குரிய வாய்ப்புகளில்லை. அது சமூக நூல்; மனிதரைப் பற்றியது. இயற்கைப் பொருட்களை சோதனைக் குழாய்க்குள் அடைத்து சோதனைகள் நடத்துவது போல, மனிதர்களை எங்கே அடைத்து எப்படிச் சோதனை செய்வது? ஒரு மனிதனைப் போல் இன்னொரு மனிதன் செயல்படுவதில்லையே! அவரவர்களுக்கென தனியான இலட்சியங்கள், தேவைகள், ஆசைகள், கருத்து ஊற்றங்கள், சிந்தனைகள்—இவை இருந்து வருகின்றனவே! ஒருவர் சூழ்நிலை ஒருவருக்கில்லையே! ஒருவர் வேண்டாமென்பதை மற்றொருவர் விரும்புகின்றாரே! ஒருவருக்கு உணவாவது மற்றொருவர்க்கு நஞ்சாயிருக்கின்றதே! மதுவை விரும்புகின்றவர் பலர்; மதுவை வெறுக்கின்றவர் பலப்பலர். புகையிலையைக் கடிகின்றவர் சிலர்; பொன்னெனப் போற்றுகின்றவர் பலப்பலர்.

'பொருளாதார மனிதன்'

இதற்காக, பத்தொன்பதாம் நூற்றாண்டையப் பொருளாதார நூல் வல்லுநர்கள் "பொருளாதார மனிதன்" என்ற ஒரு கற்பனை மனிதனைப் படைத்துக் கொண்டார்கள். "பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்'' என்ற அடிப்படைக் கொள்கையை மனிதனுக்கு வகுத்தருளினர். எல்லா மனிதனும் இதற்கு அடங்கியவனே என்று வைத்துக்கொண்டனர். ஆனால், நடைமுறையில் மனிதர்கள் பொருள் ஒன்றே எல்லாம் என்று செயல்படுவதில்லையே! அல்லது பொருள் ஒன்றே தான் இன்பம் பயப்பது என்றும் கொண்டவராக இல்லையே! எத்தனையோ எத்தனையோ ஆசாபாசங்கள், இலட்சியங்கள், வேட்கைகள், உணர்ச்சிகள்—பொருளைக் கடந்து—அவர்களை ஆட்டி வைக்கின்றனவே! நாட்டுப் பற்று, குடும்பப்பற்று, தொழில்பற்று, மானம், சான்றாண்மை, கட்டாயம் போன்ற பற்பல—பணத்தையுங் கடந்த—உணர்ச்சிகளும் மனிதனை இயக்குகின்றனவே. தன்னலமே எல்லாம் என்று மனிதன் செயல்படுகின்றான்? தன்னலம், பொதுநலம் இரண்டும் கலந்தே அவனுள் காணப்படுகின்றன. சில வேளை முழுத் தன்னலம், சில வேளை முழுப் பொதுநலம், சில வேளைக்ளில் இரண்டும் கலந்த நிலை—இவ்வாறன்றோ மனிதன் செயல்படுகிறான்? ஆகவே, தங்கள் கற்பனையில்

பிறந்த "பொருளாதார மனிதனை", பொருளாதார பண்டிதர்கள் மெல்லக் கைவிடலாயினர். அது அவர்கள் நூலுக்கே இழுக்குத் தருவதாயிற்று என்று கண்டுகொண்டனர்.

இந்தக் கொள்கையால், பத்தொன்பதாம் நூற்றுண்டில், முதலாளித்துவ முறை தோன்றவும் வளரவும் செய்தது; ஆனால் அதே வேளையில், சுரண்டலும், ஏழ்மையும், இன்னலும் உலகிலே பெருகவும் அந்தக் கொள்கை துணை புரிந்ததும் உண்மையே. ரஸ்கின் போன்ற ஆங்கில எழுத்தாளர்களெல்லாம் பொருளாதார நூலின் மேலேயே இந்தப் பழி பாவத்தையெல்லாம் சுமத்தலானார்கள். அதைப் "பணப் பேயின் சாத்திரம்'' என்றார்கள். இதைக் கண்ட ஆல்ஃபிரட் மார்ஷல் போன்ற பொருளாதார் பண்டிதர்கள் தன்னலமே உருவாகிய "பொருளாதார மனிதனை'' தமது கோட்பாடுகளிலிருந்து விரட்டி விட்டனர். தனது அன்றாட வாழ்க்கையை நடத்தும் வகையில், மனிதனைப் பற்றி ஆராயும் நூலே பொருளாதாரம் என்றார். மனித சமூகத்தைக் கொன்றழிக்கும் வறுமையை ஒழிப்பதே அதன் குறிக்கோள் என்றார்,

## அரசியல் புகுதல்

இப்படிச் சொன்ன இடத்திலே அரசியல் புகுந்து விடுகிறது. வறுமையை ஒழிப்பதென்றால்,அமையும் சமுதாயம் என்ன உருவத்தில் இருக்க வேண்டும்? அதில் தனி உடைமை வேண்டுமா, அல்லது பொது உடைமை வேண்டுமா, அல்லது இரண்டும் வேண்டுமா? 'இரண்டும் வேண்டுமானால் எந்த எந்த அளவுக்கு ஒவ்வொன்றும்வேண்டும்? விறகு வெட்டும் வேலையாளுக்கும் வானத்தைத் துருவி நிற்கும் விஞ்ஞானிக்கும் ஒரே ஊதியமா, வேறு வேறா? வேலையே செய்யாமல் உடைமையே வைத்திருப்பவர்களுக்கு ஏதும் ஊதியமில்லையா? இவை போன்ற கேள்விகளெல்லாம் தலைமையாக அரசியலில் தீர்மானிக்கப்பட வேண்டியவைகளாகவே இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் பொருளாதார நூல் வழி காட்ட இயலாதென்பது கருத்தன்று; ஆனால் வழி காட்டத்தான் இயலுமே தவிர, முடிவுகள் அரசியலிலேயே முனைந்து கிடக்கின்றன என்பது மறுத்தற்கியலாததாக இருக்கின்றது.

இதைக் கண்ணுற்றே தான், காலஞ்சென்ற கீன்ஸ் பிரபு என்னும் பொருளாதார மேதை, பொருளாதார் நூல் ஒரு கருவி நூலே; சிந்தனையைக் கூரியதாக்கும் ஒரு இயந்திரமே; அரசியலில் வகுக்கப்படும் இலட்சியங்களுக்கு வழிமுறை வகுக்கும் ஒரு நெறி நூலே—என்று கூறியதோடு, வாழ்விலே நடைமுறையில் பயன் தரும் ஒரு கலைபோன்றதாகவே அதனைக் கருத வேண்டும் என்றும், எக்காலத்தும் அழியா உண்மைகளைக் கொண்ட இயற்கை விஞ்ஞான நூல்கள் போலக் கருதிவிடலாகாது—என்றும், பொருள்பட எழுதலானார்.

இதனால், பொருளாதாரக் கருத்துக்கள் அரசியலிலே புகவில்லையென்பதோ, அரசியல் நெறியைப் பாதிக்கவில்லையென்பதோ, பொருளல்ல. அல்லது பொருளாதார நூலுக்கென்று தனிக் கோட்பாடுகளோ, நெறிகளோ இல்லை என்பதும் தவறு.

என்ன என்ன பொருளாதாரக் கருத்துக்கள் எந்த எந்த வகையில், எந்த எந்த அளவில், அரசியல் கோட்பாடுகளை மாற்றி அமைந்துள்ளன என்பதைப்

பின் ஒரு முறை ஆராய்வோம். இங்கு கூற வந்ததெல்லாம், வள்ளுவர், கவ்டில்யர், பிளாட்டோ, அரிஸ்டாட்டில், பெந்தம், கீன்ஸ் போன்ற பொருளாதாரத் தொல்லாசிரியரும், இன்றையப் பொருளாதார ஆசிரியரும் ஒருங்கே கண்டது அரசியலும் பொருளாதாரமும் இணைபிரியாதன; ஒன்றின்றி ஒன்று இயங்க இயலாதது; நல்ல அரசியலுக்கு நல்ல பொருளாதார நெறி வேண்டும்; நல்ல பொருளாதார நெறிக்கு நல்ல அரசியல் நிலை வேண்டும் என்பதேயாகும். ★★

# தீக்குச்சி

ஆதிமனிதனின் சக்கிமுக்கிக் கல்லுக்குப் பிறகு 1781-ல் ஃப்ரான்ஸ் நாட்டில் முதன் முதல் பாஸ்பர வத்தியை (Phosphoric Candle) கண்டுபிடித்தனர். காகிதச் சுருளின் முனையில் பாஸ்வரம் வைத்துக் கண்ணாடிக் குழாயினுள் வைத்து மூடிவிடுவர். குழாயை உடைத்தவுடன் வெளிக் காற்றிலுள்ள உயிர்க்காற்று (ஆக்சிஜன்) பாஸ்வரத்துடன் வினைப்பட்டு தீப் பிடித்து எரியும். 1786-ல் இத்தாலியில் மற்றொருவகை அமைப்பைக் கண்டுபிடித்தனர்; ஒரு புட்டியினுள்ளே பாஸ்பர ஆக்சைடு பூசப்பட்டிருக்கும். ரசாயனப் பொருள் பூசிய மெல்லிய குச்சிகளைப் புட்டியின் உட்புறம் தேய்த்து வெளியில் எடுத்தால் அவை தீப்பற்றி எரியும். பிறகு 1805-ல் கந்தக அமிலத்தில் ஊறிய நார்ப்பொருள் உள்ள புட்டியை ஃப்ரான்சில் பயன்படுத்தினர்.

இக்காலக் குச்சியைப் போன்ற தீக்குச்சியை ஜான் வாக்கர் (John Walker) என்ற ஆங்கிலேயர் 1827-ல் முதன் முதல் செய்தார். உப்புத்தாள் போன்ற ஒன்றின்மீது தேய்த்தால் இது வெடித்துக் கொண்டே எரியும்; எரியும் போது கெட்ட நாற்றம் வீசும்.

பிறகு 1830-ல் டாக்டர் சார்லஸ் சாவுரியா (Dr. Charles Souria) என்ற ஃப்ரஞ்சுக்காரர், எதில் தேய்த்தாலும் எரியக் கூடிய தீக்குச்சியைக் கண்டுபிடித்தார். இதிலுள்ள மஞ்சள் பாஸ்வரம் தீமை பயப்பதாயிருந்தது.

இதைத் தவிர்ப்பதற்காக இன்றுள்ள பாதுகாப்புத் தீக்குச்சியை (Safety matches) ஸ்வீடன் நாட்டு விஞ்ஞானியான கஸ்டாவ் ஈ பாஸ்க் (Gustave E. Pasch) என்பார் 1844-ல் செய்தார்.

இரண்டாவது உலகப் போரின் போது நீர் புகாத (Water proof) தீக்குச்சியை ரேமண்ட் டேவிஸ் கேடி (Raymond Davis Cady) என்ற அமெரிக்கர் 1943-ல் செய்தார். இக்குச்சியை எட்டுமணி நேரம் தண்ணீரில் போட்டுவைத்த பிறகும் இது எரியும்.

கவிதைப் பகுதி

# கங்கையும் காவிரியும்!

— கவிஞர் முருகுசுந்தரம் —

*[கம்பன் புராணக் கவிஞன். அவன் மகன் அம்பிகாபதியோ புரட்சிக் கவிஞன். தான் எழுதிய இராம காதையைப் பற்றித் தன் மகனிடம் கேட்கிறான் கம்பன். இருவரும் கருத்தால் முரண்படுகின்றனர். அக்கருத்துச் சண்டையைக் கவிதையில் ஏற்றி வைத்திருக்கிறார் கவிஞர் முருகுசுந்தரம்.]*

1

கங்கைநதிக் காவியத்தைச் சோழ நாட்டுக்
காவிரியில் ஓடவிட்ட விருத்தக் கம்பன்
திங்களைப்போல் வீற்றிருந்தான் மேடை மீது.
திருக்கோவை யார்போலக் கோவை ஒன்று
பொங்கிவரும் புதுத்தமிழில் ஆக்கித் தந்த
புகழ்அம்பி காபதியும் எதிரிருந்தான்.
சங்கத்தில் பரப்பிவைத்த தமிழை, இங்குச்
சலித்தெடுத்தார்; இருவரும்ஆ ராய்ச்சி செய்தார்.

2

"நாட்டுபுகழ் ரகுராமன் தன்து மார்பில்
நட்டுவைத்துக் காத்துவந்த கொடியை, வேதப்
பாட்டொழுகும் வாயழகன் இலங்கை வேந்தன்
பறித்தெடுத்துச் சென்றுவிட்ட கதையை, நானும்
தீட்டிவிட்டேன் காவியமாய்! அந்த நூலைத்
தேனாற்றின் ஓட்டமென்று போற்றுகின்றார்.
பாட்டரசன் என்றுசொல்லிப் புலவர் என்னைப்
பாராட்டுச் செய்கின்றார்; புகழுகின்றார்.

3

''சித்திரம்போல் அமர்ந்திருக்கும் மகனே! பச்சைச்
சிறகடித்துப் பறக்கின்ற கிள்ளை வந்து
கொத்தாத கோவ்வையினைத் தந்த நீயும்
குறைவற்ற பெரும்புலவன்; பாட்டு வேங்கை.
முத்துச்சொல் வைத்தெழுதும் புலவ! உன்னை
முதுபுலவன் கேட்கின்றேன்; எனது நூலில்
சத்தான கருத்துண்டா? சார முண்டா?
சாற்று'' என்றான், சந்தப்பாப் பாடும் கம்பன்.

4

மதியாதார் தலைவாசல் மிதிக்க நாணும்
மதிப்புலவர் வழிவந்த கம்பன் பிள்ளை,
''இதிகாசம் பாடிவைத்த எந்தாய்! நீங்கள்
ஈடற்ற பெருங்கவிஞர்! உங்கள் நாவில்
சதிராடும் பெண்ணாள் தமிழ நங்கை!
சதங்கையொலி கேட்கின்றேன் உங்கள் பாட்டில்!
எது நற்றேன்? எதுகம்பன் கவிதை என்றே
இரண்டிற்கும் வேறுபாடு அறியார் மக்கள்.

5

''பன்னரிய விருத்தங்கள் பாடி வைத்துப்
பாட்டுலகை ஆட்சிசெயும் கம்ப நாடா!
என்னுள்ளக் கடல்மீதில் எழுந்து மோதும்
எண்ணமெனும் அலைகட்குப் பஞ்ச மில்லை.
சொன்னால்தான் தீருமென்று காத்தி ருந்தேன்
சொல்வதற்கும் காலம்எதிர் பார்த்தி ருந்தேன்.
சின்னவன் நான்! என்பேச்சில் குற்றம் வந்தால்
சீற்றமுகம் காட்டாதீர்; பொறுத்துக் கொள்வீர்.

6

"கண்ணாலே காதலுக்(கு) அச்சாரம் தந்து
கையாலே வில்லொடித்துச் சனகன் பெற்ற
பெண்ணாளைப் பொன்னாளைத் தடங்கண் ணாளைப்
பெண்டாட்டி யாய்மணந்த ராமன் என்பான்
மண்ணாளும் மன்னன்தான்; இன்ப துன்ப
மனிதன்தான் என்றான்வால் மீகி; நீரோ
கண்ணனென்றீர், கடவுளென்றீர், அவனை; இந்தக்
கதையெனக்குச் சற்றேனும் பிடிக்க வில்லை.

7

"அஞ்சாமல் பாய்கின்ற அரிமா என்றால்
அழகான பிடரிமயிர் இருக்க வேண்டும்
வஞ்சநரி வால்மயிரால் பெருமை யில்லை;
வரிப்புலியைக் காலிலிட்டுத் தேய்க்கும் காட்டுக்
குஞ்சரமென்றால் வெள்ளைக் கொம்பு வேண்டும்.
குக்கலைப்போல் கோரைப்பல் இருக்க லாமா?
அஞ்சனவண் ணன்ராமன் கடவுளென்றால்
அதற்கேற்ப அருங்குணங்கள் இருக்க வேண்டும்.

8

*"மாயத்தால் மானாகி முன்னால் வந்த
மாரீசப் பொய்மானை அறிந்திடாமல்
மாயையிலே அகப்பட்டுக் கைப்பிடித்த
மனையாளைப் போக்கடித்துத் துடித்த ராமன்
மாயைக்குத் தலைவனென்றால், இந்தப் பொய்யை
மதிப்புலவர் ஒருநாளும் ஒப்ப மாட்டார்.
மாயையிலே அகப்பட்டீர் நீரும்; இந்த
மனிதனைப்போய்க் கடவுளென்று சொன்ன தாலே.

* சிவஞான சித்தியாரின் கருத்து.

9

குரங்கிற்குக் கற்புமில்லை; முறையு மில்லை;
குடும்பமென்ற சிறப்பில்லை விலங்கினத்தில்.
தரங்கெட்டுத் தம்பிமனை யாளைத் தொட்டுத்
தன்னுடைமை ஆக்கிவிட்டான் வாலி என்றால்
சிரம்வெட்டத் துடிப்பானேன் ராமன்? கொல்லும்
சிலையம்பை அவன்நெஞ்சில் பாய்ச்சு வானேன்?
மரத்திற்குப் பின்னாலே கோழை போல
மறைந்திருந்து தாக்குவதோ கடவுள் வீரம்?

10

''உலகத்தை உளவாக்கி அழித்துக் காக்கும்
ஒப்பற்ற கடவுளென்றால், அந்த ராமன்
இலங்கைக்குத் தீவைக்கப் பல்லைக் காட்டி
இளிக்கின்ற குரங்கைஏன் அனுப்ப வேண்டும்?
விலங்கினத்தால் வாழ்வுபெற்ற ராமனைப் போய்
வீரனென்று பாடிவிட்டீர்! புராணம் பாடும்
புலவர்தாம் உமைமெச்சிப் போற்று வார்கள்;
புதுச்சிந் தனைக்காரர் தூற்று வார்கள்.

11

''உள்ளத்தில் பதித்திருந்த கருத்தை எல்லாம்
ஒளிவுமறை வில்லாமல் கூறி விட்டேன்.
அள்ளியணைக் கின்றதந்தை முன்னால், பெற்ற
அன்புமகன் உள்ளத்தை மறைக்க லாமா?
தள்ளுவதோ, என்னறிவைப் போற்றிக் கையால்
தாங்குவதோ, உம்பொறுப்பு!'' என்று சொன்னான்.
வள்ளலைப்போல் தேன்கவிதை சொரியும், கம்ப
வளநாடன் சிந்தனைக்குள் மூழ்கி விட்டான்.

# சிந்தனை செய் மனமே!

—[ உதகை பொன்னழகன் ]—

1

இயற்கைவெளி யாய்நிற்கும் தனியாற்றல்
உலகனைத்தும் இயக்குகின்ற தனிக்கடவுள்
எனவுரைத்துத் தம் வாழ்க்கை
நிலைநிறுத்தும் சமயத் தோரே!
மனித்தர்செயும் தவத்தாலும் சமயநெறி
வழக்காலும் நினைத்த வண்ணம்
தனித்தபெரும் இயற்கையது மாறிலதை
இயற்கையெனச் சாற்ற லாமோ?

2

கண்ணெதிரே தோன்றாத கற்பகமாய்க்
கருதிடுவார் கருத்தி னுக்கும்
நண்ணுவதா யில்லாத நற்பொருளே
கடவுளெனில் நாடி யோடிப்
பண்ணுகின்ற பூசையிலும் பயனுண்டோ?
அமர்ந்திருந்து பார்வை யின்றி
எண்ணுகின்ற நினைப்பினிலும் எதிர்ப்படுமோ?
பயன் படுதல் ஏதுமுண்டோ?

3

எல்லாமுந் தானாகி இயங்குகின்ற
பெருவெளியாய் இருக்கும் ஒன்றே
நல்லாரின் கடவுளென நயமாகத்
தெரிந்தெடுத்து நவிலு வீரேல்,

கல்லாகி மண்ணுகிக் காணுகின்ற
பொருளெல்லாம் கடவுளென்று
சொல்லாமற் சொல்லுவதாம் சொற்பொருளைத்
தேடுவதில் பயனு முண்டோ?

4

வாணுகி மண்ணுகி வளியாகித்
தீயாகி நீரும் ஆகித்
தாணுக இயங்குகின்ற தனிப்பொருளே
கடவுளெனில் சமயத்தோரே,
வாணுய ஐந்திணையும் வயமாக்கி
நன்மையுற வகை செய்யாமல்
வீணுகத் தொழுவதிலே பயனுண்டோ?
அறிவுக்கும் வேலை யுண்டோ?

5

அணுவுக்கும் அணு வாகி,
அண்டமெல்லாம் தாணுகி, அவனிதன்னை
கண நந்தோறும் இயக்குகின்ற
கடவுள் படைப்பினைத்துமெனக் கழறுகின்ற
கணந்தனிலே அவ னடியில்
காணிக்கை கொடுப்பதுவும், கையைநீட்டி
வணங்கி யிருந் தருளைத்தந்தி
வாங்கிவர நினைப்பதுவும் மடமையன்ருே?

6

எங்கணுமே தாணுகி யிருப்பதொரு
பேரிடத்தை இடர் படுத்தித்
தங்க வைத்துச் சிற்றறையில்
தங்கவணி பூட்டிவைத்துத் தாழுமிட்டுப்
பொங்கலிட்டுப் பூசை செயும்
போக்கிலந்தத் தத்துவ்மும் போய்மறைந்து
தங்குவது மடமை யெனத்
தானறியா திருப்பதுவும் தவறேயன்ருே?

## குருவிக்கரம்பை வேலு

# கண்ணே நீ வாழி!

—( "தமிழவேள்" )—

1

அன்னைதன் குழந்தையினை அணைத்துமிகப் போற்றி
ஆசையுடன் "என்கண்ணே" என்றழைத்து மகிழ்வாள்.
மின்னலிடை மெல்லியலார்க் காதலியைக் கணவன்
மீதூறும் அன்புடனே "என்கண்ணே" என்பான்.
பொன்னென்றும் மணியென்றும் கல்வியினைச் சான்றோர்
புகழ்வதிலை; "கண்"என்றே புகழ்ந்திடுவர். எதனால்?
உன்னைவிடச் சிறந்ததுவாம் ஒன்றில்லை என்னும்
உண்மையுணர் வால்அன்றோ? கண்ணே நீ வாழி!

2

பெற்றுள்ள உறுப்புகளில் வேறெந்த ஒன்று
போனாலும் பெருங்குறையாய் நோவதிலை மனிதன்
பெற்றுள்ள கண்ணிழந்தால் நோகின்றான் பெரிதும்
பெறவில்லை-கண்என்றால் பாழன்றோ வாழ்க்கை?
உற்றறியும் புலனுடனே உண்டுயிர்த்துக் கேட்டே
உணர்ந்தாலும் முழுஅறிவு கண்ணின்றேல் ஏது?
கற்றறியும் கலையெல்லாம் அறிவெல்லாம் உன்னால்
கவினெல்லாம் உன்னால்தான் கண்ணே நீ வாழி!

3

விண்ணகத்து மீன்கூட்டம்; வெண்ணிலவின் தோற்றம்;
விந்தைமிகு முகிலினங்கள் செய்யுமெழில் மாற்றம்;
மண்ணகத்து மலையுயர்வு; மணிநீரின் வீழ்ச்சி;
மாக்கடலின் மேற்பரப்பில் அலைகள்தம் ஆட்சி;
வண்ணமலர் வடிவழகு; செடிகொடியின் பசுமை;
வனப்புநிறைப் பொன்முத்தின் ஒளிச்சிதறல்; எழிலார்ப்
பெண்ணவளாம் இயற்கைத்தாய்ப் பெருமையெலாம் [மனிதன்
பார்க்கின்றான் உன்னால்தான்! கண்ணே நீ வாழி!

4

பலஉயிரும் உறவாடிப் பழகிடுதல் உன்ஞல்;
பகைநாட்டைப் பிரித்தறிந்து பிழைத்திடுதல் உன்ஞல்;
பலஉருவம் பலவண்ணம் கண்டறிதல் உன்ஞல்;
பகலிரவு ஒளியிருளைப் பகுத்தறிதல் உன்ஞல்;
நிலவுமுகப் பெண்மகளை ஆண்மகனும் அவனை
நேரிழையும் காதலித்தே ஒன்ருதல் உன்ஞல்;
உலகுயிர்கள் அத்தனையும் ஒளிகாணல் உன்ஞல்;
ஒப்பில்லாப் பெருமையுடைக் கண்ணே நீ வாழி!

5

மனத்தகத்து மாற்றமெலாம் முகம்காட்டும் என்பர்
மெய்யாகக் காட்டுவது நீயன்ருே? கண்ணே!
சினத்துடனே சீறுகையில் சிவக்கின்ருய்ப் பின்னர்
சினம்நீங்கிச் சிரிக்கையிலே மலர்கின்ருய்; தீப்புண்
எனத்துன்பம் படர்கையிலே பதைக்கின்ருய்; அச்சம்
இரக்கமருள் நாண்கலக்கம் ஊக்கம்சோர் வென்னும்
மனத்துணர்வு பலப்பலவும் காட்டுகிருய்த் தெளிவாய்
மிகஅருமை உன்ஆற்றல்! கண்ணே நீ வாழி!

6

மன்னுயிர்கள் துயரெல்லாம் தம்துயராய்க் கொண்டு
மனம்வாடி மெலிகின்ற மேலோர்கள் போலத்
துன்பமுறும் பிறஉறுப்பின் துயர்கண்டுக் கண்ணீர்
தேக்கியழு கின்ருயே! கண்ணே நீ வாழி!
அன்புடையார்ப் பின்ஞெருகால் பொல்லாத நஞ்சை
அருந்திடவே தரக்கண்டும் அவர்செய்யும் செயலின்
புன்மையினைக் காஞத கண்ஞேட்டம் என்னும்
பேரழகோ(டு) இலங்கிடுவாய்! கண்ணே நீ வாழி!

# டில்லி மக்கள்

—( சாலை இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட். )—

*[வடக்கு வாழ்கிறதா? தெற்குத் தேய்கிறதா? 'இந்திய ஒருமைப்பாடு' ஏட்டளவில் - பேச்சளவில் - நினைப்பு அளவில் இருந்தால் போதுமா? மக்களின் பண்பும், நாகரீகமும், நடத்தையும் சிறிதாவது ஒட்டியிருக்க வேண்டாமா? இந்த ஆசையினுல் தூண்டப்பட்டுள்ள கட்டுரையாளர், டில்லி மக்கள் வாழ்க்கையைத் தனிச் சுவையுடன், நிறைய நகைச்சுவை கலந்து, டில்லி சென்றிராதவர்களும் நேரில் காண்பதுபோல், ஊன்கலந்து, உயிர்கலந்து, படிப்போர் கண்முன்பு நிறுத்துகிருர்.]*

முன்னுரை

நாற்பத்தைந்து கோடி மக்களைக் கொண்ட நமது நாடு உலகிற்கே ஒரு புதுமை. சாதிகளாலும், மொழிகளாலும், இனப் பண்பாடுகளாலும் வேறுபட்டும் மாறுபட்டும் வளர்ந்த கதையே இதன் வரலாறு. இத்தனை பிளவுகளுக்கும் மத்தியில், யாவும் இணைந்தும் - இணையாமல், பிரிந்தும்–பிரியாமல் கூடி நிற்கின்ற ஒரு காட்சி உலகம் காணுத புதுமை என்பதில் அய்யமில்லை. இந்த நிலைக்குக் காரணம், பாரதப் பண்பாடு என்பதாக ஒரு நெறி இந்த நாட்டில் நிலவிவருவதே என்று சிலர் பேசியும் எழுதியும் வருகின்ருர்கள். சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளால் பாதிக்கப்படாமல் ஒரு பொதுப் பண்பு, இந்த நாட்டுக்கே உரிய பண்பு இந்த நாட்டு மக்கள் அனைவரின் வாழ்விலும் ஊடுருவி நிற்கிறது என்று அவர்கள் கருதுகிருர்கள்.

நாம் ஒவ்வொருவரும், நம்மை எண்ணிப் பார்த்தால், தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்ட பரம்பரைகளின் வழி வந்தவர்களே நாம் என்ற உண்மையை உணருகிருேம். 'பாரத நாடு' என்ற சொல்லுக்குள் இப்போது அடங்கியிருக்கிற நிலப்பரப்பு முழுவதும், நமது முன்னேர்களின் காலத்தில் இச்சொல்லால் குறிக்கப்பட்டதில்லை. இச்சொல் முன்பே வழக்கில் இருந்திருந்தாலும், - கதைகளிலும் சமயப் பேச்சுக்களிலும் "இமயம் முதற் குமரி வரை" என்ற மரபு இருந்து வந்தாலும்,-ஒவ்வொரு பேரரசனும் தன் எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பை மட்டுமே பாரத நாடு என்று கருதிக்கொண்டான். அப்படி ஒரு கூட்டாக இணைந்த பெரும்பகுதியில் கூட ஒரே மொழி, ஒரே இனம், ஒரே கலாச்சாரம் என்ற நிலை இருந்ததில்லை. காரணம், அந்தக் காலத்தில், அரசாட்சி என்பதற்கு இக்காலத்தில் கொள்ளப்படும் இதே பொருள் (பொதுவாக) இருந்ததில்லை. தங்களை உள்ளடக்கியும் அடக்காமலும் விரிந்து நின்ற ஒரே வெண்கொற்றக் குடையின்

கீழ், அவ்வப்பகுதிகளிலுள்ள மக்கள் தங்கள் தங்கள் இன-மொழி-பண்பாட்டு அடிப்படையில் எழுந்த அமைப்புக்களுடனேயே வாழ்ந்துவந்தார்கள். அந்த ஒற்றுமைக்கும் இன்று நாம் விரும்புகிற ஒற்றுமைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது.

ஆயினும், சென்று போன நிகழ்ச்சிகளைச் சீரணித்துவிட்டுப் புதிய தொரு பெருநாடாக, ஒன்றுபட்ட பாரதநாடாக வாழ விரும்புகிற நாம், காலத்தின் மாறுதல்களுக்கேற்ப நமது ஒற்றுமையின் அடிப்படையை விரித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், முன்பு ஏற்பட்ட அதே தொல்லைகள் நிகழாவிட்டாலும், அவைகளினும் வேறுபட்ட பயங்கரமான தொல்லைகள் ஏற்பட வழி உண்டு. ஆகையால் நேற்றை நிலை எப்படி இருந்தாலும், நாளை நலனைக் கருதி இன்றைக்கே ஒன்றுபட்டு நிற்கவேண்டியது இன்றையத் தேவைகளில் மிக முக்கியமானது.

இந்த ஒற்றுமை வெறும் பேச்சுக்களாலோ எழுத்துக்களாலோ ஏற்பட்டுவிடும் என்று நாம் எண்ணுவதாகாது. தங்கள் தங்கள் போக்கில் மொழிகளையும், கலைகளையும், பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் வளர்த்துக் கொண்டுள்ள பலபகுதிகளான மக்கள் ஒன்றுபடுவதிலும், உண்மையானதோர் தேசீய உள்ளம் பெறுவதிலும், பல தொல்லைகள் உண்டு. 'காசி-கன்னியாகுமரி' என்று சொன்னால், உடனே கண்களை மூடிக் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் காலமல்ல இது. அத்தகையதொரு காலத்தில் நிலவிய ஒற்றுமை இக்காலத்துக்குப் போதவும் போதாது. அதைவிட நெருங்கிப் பொருந்திய ஒற்றுமை—சமயம் மட்டுமல்லாமல் வாழ்வின் எல்லா அம்சங்களையும் அளாவிய ஒற்றுமையே இன்றையத் தேவை. முன்பு இருந்த ஒரே ஒற்றுமை சமய நம்பிக்கை ஒற்றுமையே. இப்போது அந்த ஒற்றுமையும் தகர்ந்து விட்டது. அது இன்னும் இருப்பதாக நினைப்பது, நாட்டின் சில தொகுதி மக்களை அடியோடு புறக்கணிக்கும் முரட்டடிச் சிந்தனையாகும்.

பழைய அடிப்படைக் கொள்கைகளில் பலவற்றைப் பல சமூகங்கள் கைவிட்டுத் தங்களையறியாமலே புதிய கொள்கைகளைத் தழுவிக் கொண்டுள்ளன. மாபாரத-இராமாயண காலத்தில் இருந்தனவாகச் சொல்லப்படும் வாழ்க்கைத் தத்துவங்களை இந்துக்கள் என்று உள்ளவர்கள் கூட அப்படியே வைத்திருக்கவில்லை; கடைப்பிடிக்க முடியாமல் பலவற்றையும், கடைப்பிடிக்க விரும்பாமல் பலவற்றையும் கைவிட்டுவிட்டார்கள். வாழ்வின் நோக்கும் போக்கும் பற்றிய புதிய புதிய கருத்துக்கள் இந்தியச் சமூகங்களில் ஊடுருவி நிலை பெற்றுள்ளன. ஒவ்வொரு புதிய கருத்தையும் ஒவ்வொரு சமூகமும் ஏற்றிருக்கும் முறையிலும் வேறுபாடு இருக்கிறது......

சான்றாக, ஆங்கில ஆட்சியினால் மொழித்துறையிலும் வாழ்க்கை நடைமுறைகளிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் நாடெங்கிலும் ஒரே சீராக இல்லை. சில பகுதி மக்கள் ஆங்கில மொழியை விரும்பிப் படித்து அதில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்; வேறு சில பகுதிகளில் உள்ளவர்கள் ஆங்கிலத்தை வீட்டுக்கு வெளியிலேயே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இது இரண்டு பகுதிகளிலுமுள்ள மக்களின் மன இயல்பிலே இருந்து

வரும் வேற்றுமையைக் காட்டுகிறது. ஒரு பகுதியினர், ஆங்கில மொழியைக் கருத்துப் பரிமாற்றத்திற்கு வசதியான ஒரு கருவியாகக் கருதி அதைக் கற்றுத் தேறியிருக்கிறார்கள்; மற்றப் பகுதி மக்கள், அதையும், நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயரின் பொருள்களில் ஒன்றாகக் கருதி வெறுத்திருக்கிறார்கள்.

இவை போன்ற மாறுபட்ட இதயக் குரல்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு, நாம் ஒன்றுபட்ட நாடாக வாழ்கிறோம் என்று கனவு காண்பது மிகமிகத் தவறு. நாம் விரும்பும் ஒற்றுமை தோன்றி, நின்று நெடிது நிலைக்க வேண்டுமானால் மக்களின் வாழ்க்கைத் தத்துவங்களை ஒன்றுபடுத்த முயலவேண்டும்; எதிர்கால இலட்சியங்களில் ஒருமைப்பாடு துலங்குவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். இதற்கு முதற்படியாக இக்கால மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து இணைய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இன்றைக்கு ஒருவரை ஒருவர் மதிக்கப் பழகினால் தான் நாளை ஒன்றாக வாழ முடியும்.

மக்கள் ஒருவரைஒருவர் மதிக்க வேண்டுமானால் தங்களுக்குள் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அவர்கள் நன்கு உணரவேண்டும். செத்துப்போன நம் முன்னோரின் வாழ்வையும் பழக்கவழக்கங்களையும் காட்டி, இப்போதைய மக்களை ஒன்றுபடுத்திவிட முடியாது. பழைய வாழ்வில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த ஒற்றுமைக் கூறுகளைச் சொல்லலாம்; ஆனால் அதுமட்டும் போதாது. முக்கியமாக, ஒரு பகுதியில் வாழும் இன்றைய மக்களின் பழக்கவழக்கங்கள் என்னென்ன, வாழ்க்கைக் கருத்துக்களும் நோக்கங்களும் என்னென்ன என்பவற்றை மற்றொரு பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு விவரித்து உணர்த்த வேண்டும். இதுவரையில் பாராதவர்களையும் கேளாதவர்களையும் மக்கள் தெரிந்து கொள்வதற்கு இது தான் ஒரேவழி. பழக்கவழக்கங்களின் மூலமே மக்களின் நாகரிகப் போக்கைத் தெரிந்து கொள்ள முடியும். அதைத் தெரிந்துகொண்டால் தான், மக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவும், புதிய இயல்புகளை ஏற்கவும் வசதி உண்டு.

இந்த வகையில், இந்திய நாடெங்கிலும் உள்ள மக்கள் இந்த நாட்டின் தலைநகரில் வாழும் பெரும்பான்மை மக்களின் பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ள விரும்புவது இயற்கை. அவர்களின் பழக்கவழக்க வாழ்க்கை முறைகளைச் சமுதாய இயல் கண்ணோட்டத்துடன் (நான் கண்டறிந்த அளவில்) விவரித்துத் தமிழ்

## சோவியத் பெண்கள்

ருஷ்யாவில் பயனுள்ள உழைப்புத் துறைகளில் ஈடுபட்டிருப்போரில் 100-க்கு 48 விகிதத்தினர், பெண்கள். சில துறைகளில் ஆண்களே அடியோடு இல்லை. மருத்துவ ஊழியர்களில் 100-க்கு 75 பேர் பெண்கள்; 20 லட்சம் பள்ளி ஆசிரியர்களில் 15 லட்சம் பேர் பெண்கள். மொத்தத்தில் அறிவுத்துறைகளில் ஈடுபட்டுள்ள ஆண்கள்—90 லட்சம்; பெண்களோ — 110 லட்சம்!

ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் தரப்படுகிறது.

மக்களுக்குத் தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்..

## தில்லி மக்கள்

தில்லிமாநகரில் இந்தியாவின் எல்லாப்பகுதியிலுள்ள மக்களும் வாழ்கின்றார்கள். அவர்களில் பெரும்பகுதியினர் பஞ்சாபியர்கள். பஞ்சாபியர் என்றால் சீக்கியர் மாத்திரமல்ல; பஞ்சாபி மொழி பேசுகின்ற பிறமத இனத்தவர்களும் அவர்களில் உண்டு. அடுத்த பெருந்தொகையினர் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். தில்லியிலேயே வாழ்ந்து வரும் "பழையகுடி"களும் உண்டு. இந்த முத்தரப்பினரின் வாழ்க்கை முறையே தில்லியின் பொதுவான வாழ்க்கைமுறை. தத்தமக்குள் ஒடுங்கி வாழ்கின்ற வங்காளிகளாலோ, தமிழர்களாலோ, பிறமொழியினராலோ தில்லி வாழ்க்கை (குறிப்பிடத்தக்க) மாறுதல் எதையும் அடைந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால், தில்லித் தெருக்களிலும் அலுவலகங்களிலும் காணப்படும் அன்றாடக் குறைகளும் நிறைகளும் இந்தப் பெரும்பான்மை மக்களைச் சார்ந்தனவே.

## தெருக்காட்சிகள்

தில்லிக்கு வந்து சில நாள் தங்கியிருந்து இந்நகரத்தின் பல பகுதிகளையும் சுற்றிப்பார்த்த என் நண்பர் ஒருவர், "தில்லிமாநகர் ஒரு பெரிய கிராமம் போலவே இருக்கிறது" என்று தமது கருத்தைத் தெரிவித்தார். தில்லிமாநகர்த் தெருக்களில் காணப்படும் மக்கள் பழக்கவழக்கங்கள் எளிதாக எவர் கண்ணையும் கவர்ந்துவிடுகின்றன. அதனால் எல்லாரும், பொதுவாகத் தில்லியைப் பற்றி இந்தக் கருத்தையே தெரிவிக்கின்றார்கள்.

எல்லாருடைய கண்களையும் முதலில் உறுத்துவது இங்குள்ள வாகனப் போக்குவரத்தே 'கார், பஸ், ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, சைக்கிள்' போன்ற வாகனங்களுக்கு நடைமுறையில் வேகக் கட்டுப்பாடே கிடையாது. எந்த இடத்திலானாலும் தலைதெறி வேகமாக ஓட்டுவதே இங்குள்ளவர்களின் வழக்கம். சாலைவிதிகள், அவர்களைப் பொறுத்தவரை, அவரவர் 'தலைவிதி'யே! முன்னால் போகும் வண்டியை வலப்புறமாகவே முந்தவேண்டும் என்பது சில நாடுகளில் உள்ள விதி; இடப்புறமாகவே முந்தவேண்டும் என்பது வேறு சில நாடுகளில் வழக்கத்தில் உள்ளது. தில்லிமாநகரில், வலப்புறமாகவே முந்தவேண்டும் என்பது எழுத்து விதி:— நடைமுறையில் இரண்டு பக்கமாகவும் முந்துகிறார்கள். ஆகையால் பாதசாரிகளோ வாகனவாணர்களோ அடிபடாமல் தப்பிக்க வேண்டுமானால், 'அட்டதிக்கு'க்களையும் கவனித்தே செல்ல வேண்டும். 'இடப்பக்கமாக ஒதுங்கிச் செல்லுகிறோம், அதனால் நம்மீது எதுவும் மோதாது' என்ற நம்பிக்கைக்கு இங்கு இடங்கிடையாது. "எப்போதாயினும் கூற்றுவன் வருவான்" என்பது இவ்வூர்சாலைகளில் எப்போதும் நினைவிருக்க வேண்டிய பொன்மொழி...

எல்லா வாகனக்காரர்களுமே, ஏதோ, தலைபோகிற அவசரத்தில் போவதாக எண்ணிக் கொண்டு தான் வண்டிகளை ஓட்டுவார்கள். ஒன்று முந்திச் செல்ல, மற்றவை அதைத் தொடர்ந்து செல்லுவது என்ற முறை பொதுவாகக் கிடையாது. வண்டிப் போராட்டமும் வாழ்க்கைப் போராட்டம்

மாதிரியே. எந்த இடுக்கிலாவது (இடப்பக்கமோ வலப்பக்கமோ) நுழைந்து முன்சென்றுவிடக் கூடாதா என்றே போய்ப் புகுவார்கள். இதிலே, விரிந்த தெரு, குறுகலான தெரு என்றெல்லாம் பிரித்துத் தெருக்குள்ளே வீணான ஏற்றத்தாழ்வுகளை இவர்கள் கற்பிப்பதில்லை. இதனால் பல சமயங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவிடுவதுமுண்டு. இடுக்குகளில் புகுந்து முன்னேற முனைந்த வண்டிகள் ஒன்றுக்குள் ஒன்று நுழைந்து, முன்னும் போகமுடியாமல் பின்னும் போக முடியாமல், போகவும் யாரும் விரும்பாமல் மாட்டிக்கொண்டு நிற்கும் 'மல்லுக்கட்டு' தில்லியில் சில இடங்களில் கட்டாயம் பார்க்க வேண்டிய காட்சி. இந்தச் 'சிக்கிடிமுக்கிடி' யால், தொடர்ந்துவரும் நூற்றுக்கணக்கான வண்டிகள் அப்படியே பிண்ணாக்கு மாதிரித் தேங்கிவிடும். இந்த முடிச்சை அவிழ்த்து வண்டிகள் செல்லுவதற்கு அரை மணி நேரமோ, ஒரு மணி நேரமோ......?

இன்னொரு காட்சியும் குறிப்பிடத்தக்கது: மூன்று நான்கு சாலைகள் சந்திக்கின்ற இடத்தில், ஒரு பஸ் வண்டிக்குக் குறுக்கே ஒரு சைக்கிள்காரர் போய்விடுவார்; இருவரும் தத்தம் வண்டிகளை, ஒருவரை ஒருவர் கடக்கமுடியாத வசத்தில் நிறுத்திக் கொள்வார்கள். "யார் வந்தது சரி?—யார் வந்தது தப்பு? என்பதைப் பற்றி விவாதம் தொடங்கும்; காரசாரமாக ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வார்கள். முன்னாலும், பின்னாலும் இரண்டு பக்கங்களிலும் நூற்றுக்கணக்கான வண்டிகள் வந்து, அந்தச் சந்தியைக் கடக்கமுடியாமல் தடைப்பட்டு நிற்கும்; "பாழ் பாழ்!" என்று 'ஆரன்' அடிப்பார்கள். அது பற்றி எல்லாம் இந்த இரண்டு வீரர்களும் கவலைப்படுவதில்லை; சில சமயங்களில் கீழே குதித்துக் கைகலப்பில் கூட இறங்கிவிடுவார்கள்! அந்தச் சமயத்தில், தங்கள் இருவரையும் தங்களின் இரண்டு வண்டிகளையும் தவிர வேறு ஒன்றுமே உலகில் இல்லை என்பது அவர்களின் எண்ணம். வீரம்பொங்கிவிட்டால் உலகமும் அதிலுள்ள மனிதர்களும் ஒரு பொருட்டா?

## விதியோ விதி!

பஸ் போக்குவரத்தை மட்டும் எடுத்துக்கொண்டால், அதிலே சுவைமிக்க அம்சங்கள் நிறைய உண்டு. ஒரு பஸ்ஸில் எத்தனை பேரை ஏற்றலாம் என்பதற்கு உள்ள விதி எதுவும் கடைப்பிடிக்கப் படுவதில்லை. "கண்டக்டரய்யா"வின் விருப்பமே நடைமுறை விதி! போகிற பஸ்ஸில் உட்காரவோ நிற்கவோ இடம் இருந்தால், வழியிலுள்ள பஸ் நிறுத்தங்களில் நிறுத்தி அங்கு நிற்பவர்களை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் கிடையாது. "டிரைவர்" விரும்பினால் நிறுத்தி ஏற்றலாம்; இல்லாவிட்டால் நிறுத்தவேண்டியதில்லை. அதாவது, பஸ் போக்குவரத்து ஒரு பொதுநலச் சாதனம் என்ற கருத்து, கண்டக்டர்—டிரைவர்களில் பலருக்குக் கிடையாது; தாங்கள் ஏறியுள்ள பஸ் தங்கள் சொத்து, அதைத் தங்கள் விருப்பம் போல் செயல்படுத்தலாம். இதுவே அவர்களின் நடைமுறைக் கொள்கை!

பஸ் பிரயாணிகளையும் 'அப்பிராணிகள்' என்று எண்ணிவிட வேண்டாம். அவர்களின் குணச்சித்திரம் தனியொரு விந்தை! பஸ் நிறுத்தங்களில், ஒவ்வொரு பஸ் வரும்போதும் ஒருபெரியமல்

யுத்தமே நடக்கிறது! இதில் ஆண் பெண் வேறுபாடோ, இளையவர் முதியவர் ஏற்றத்தாழ்வோ கிடையாது. சொல்லப் போனால் பெண்கள்தான் இந்த குஸ்திகளில் அதிகக் கெட்டி! அவர்கள், ஆண்களை இடித்து உதறிவிட்டு பஸ்ஸுக்குள் ஏறி, வியர்வை வழியும் உடலோடும் கலைந்த தலையோடும் நின்று பார்க்கின்ற வெற்றிப் பார்வை இருக்கிறதே, அதை அவ்வளவு எளிதில் வர்ணித்துவிட முடியாது. இந்தப் போர் நெரிசலில் அவர்களின் கைக் குழந்தையும் அவர்களோடு ஓட்டிக் கொண்டு சென்றிருக்கும்... இந்த அதிதீர வீரத்தை எந்த எழுத்தாளன்தான் வருணித்துவிடுவான்?

சில பஸ் நிறுத்தங்களில் பிரயாணிகள் (கியூ) வரிசையிலும் நிற்பார்கள். அங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளும் முறைமைக் கொலைகளும் விவரிக்கத் தக்கவை. வரிசை நீண்டு நீண்டு செல்லும்; நூறு நூற்றைம்பது பேர்கூட வந்துவிடுவார்கள். அதற்குப் பிறகு வரும் சிலர் நடத்துகின்ற நாடகங்கள் சுவையானவை. வரிசையின் முகப்புக்குப் போனால் அங்கே நிற்கும் 'கண்டக்டர்' துரத்துவார்; இடையில் எங்காவது நுழைந்தால் பின்னால் நிற்பவர்கள் கூச்சலிடுவார்கள். அதற்காக இந்த "வரிசைமாறிகள்" ஒரு நல்ல தந்திரத்தைக் கையாளுகிறார்கள். வரும்போதே வரிசையை ஒரு கண்ணோட்டம் விட்டுக் கொண்டு வருவார்கள். அங்கே இவர்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது நிற்பார்களல்லவா? அவர்கள், வரிசையில் முன்னால் நின்றால், ஒரு புதிய நகைச்சுவை நம்பி அவர்களிடம் ஏதோ காரியமாகப் பேசப்போவது போலப் போவார்கள். வண்டி வரும்வரை அவர்களிடமே "பேசி"க் கொண்டு நிற்பார்கள்; வண்டி வந்ததும்; அனுபவப் பாத்தியதை மாதிரி, அவர்கள் சிறிது நேரம் நின்ற இடமே வரிசையில் அவர்களின் இடம். அப்படியே தங்களை இடைச் செருகிக் கொண்டு......

இதில் பெரிய பரிதாபம் என்னவென்றால், பொதுவாக இந்த இடைச் செருகிகளில் வயதுப் பாகுபாடு எதுவும் இல்லாவிட்டாலும், கட்டிளங் காளைகளும் 'காளி'களுமான பல்கலைக் கழக மாணவ மாணவிகளே இதில் அதிகம்! இந்த முறைகேட்டைச் செய்யும்போது அவர்கள் அகம் செத்து முகம் செத்துக் காணப்படுகிறார்கள். அசட்டுச் சிரிப்பினால் தங்களைச் சமாளிக்கிறார்கள் என்பதெல்லாம் உண்மைதான். ஆனாலும் இந்தக் கோழைகள் தானே இந்த நாட்டின் எதிர்காலக் குடிமக்கள்? ஏன், இவர்களில் பலருக்கு இப்போதே கூட வாக்குரிமை இருக்குமே......!

பஸ்ஸில் கூட்டத்துக்கும் நெரிசலுக்கும் குறைவு கிடையாது. அந்த நெரிசலிலும், இறங்குகிற

---

## போட்டிக் கட்டுரை

சாதியை ஒழிக்க முடியுமா? முடியாதா?

முடியுமென்றால் என்ன செய்ய வேண்டும்?

இதுபற்றி இந்த இதழில் 6 பக்கத்துக்கு மேற்படாமல் தக்க ஆதாரங்களுடன் கருத்துச்செறிவுடன் எழுதியனுப்புக.

முதற் பரிசு—10 ரூபாய் மதிப்புள்ள புதிய தமிழ் நூல்கள்

இரண்டாம் பரிசு — குத்தூசி ஓராண்டுக்கு இலவசம்.

—ஆசிரியர்

ஆணும் பெண்ணும் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாக, ஆட்களை விலக்கிக் கொண்டு செல்லமாட்டார்கள். இடித்து நெரித்துக் கொண்டு, கொஞ்சம் நோஞ்சல்களாக உள்ளவர்களைக் கீழே தள்ளிவிட்டுப் புயல்போல பஸ்ஸுக்குள் விரைகின்ற முரட்டுத்தனம், அப்பப்பா! நமது பழைய சினிமாக் கொட்டகை "டிக்கட்வீரர்"கள் கூட இவர்களுக்கு,—இந்த அம்மணிகளுக்குச் 'சலாம்' வைக்க வேண்டும்!......

தில்லியும் ஒரு பட்டணமாகையால், சாலைச் சந்திகளில் போலீசாரை நிறுத்தியோ, சிவப்பு பச்சை விளக்குகளை அமைத்தோ போக்குவரத்தை முறைப்படுத்துகிறார்கள். இந்த இடங்களில் பஸ் நிற்கும் போது அதில் யாரும் ஏறக் கூடாது, இறங்கவும் கூடாது என்பது விதி. அந்த விதியை எல்லாம் இந்த மக்கள் கிழித்துக் காற்றில் விட்டுவிட்டார்கள். இவர்கள் ஏறுவது, இறங்குவது, அடிபட்டு விழுவது எல்லாம் அந்த இடத்திலேதான். இப்படி ஏறுகிற, இறங்குகிற, பெருமக்களைத் தண்டிப்பதற்கென்று இயங்கும்—நீதி மன்றம் ஒன்று உள்ளது. இதன் மூலம் நிறையத் தேசீய வருமானம் கிடைப்பதாகக் கேள்வி. இரண்டு ரூபாய் அபராதத்தைப் பார்த்தால் முடியுமா?—எவ்வளவு அவசரமாகப் போக வேண்டியவர்கள்! சிலபோது "எமதருமன்" 'வாரண்டை' வைத்துக்கொண்டு அங்கே நிற்கிறனே;—அவர்கள் என்ன செய்வார்கள்?

## தின்னும் திருக்காட்சி!

உணவுக் கடைகளில் இரண்டு மூன்று வகைகள் உண்டு. ஒன்று நிரந்தரமான கடை; மற்றது (நாளங்காடி, அல்லங்காடி மாதிரி) அவ்வப்போது சாலை மேடை (பிளாட்பாரம்)களில் சில மணி நேரம் மட்டுமே நடைபெறும் கடை; இன்னொன்று இயங்கும் (தள்ளுவண்டிக்)கடை. மரக்கறி உணவு, மாமிச உணவு எல்லாமே இவைகளில் உண்டு. பல கடைகளில் மீன், இறைச்சி முதலியவை (மட்டும்) திறந்த வெளி அரங்கில், திறந்த அடுப்பில் சுட்டும், வறுத்தும் கொடுப்பார்கள். மக்கள் (ஆணும் பெண்ணும்) சிலபோது குடும்பம் குடும்பமாக அங்கேயே நின்று திருக்கோலத்தில் உண்டு மகிழ்வார்கள். இவர்களெல்லாம் யாரோ பாமர அநாகரிகர்கள் என்று நினைத்துவிடப் போகிறீர்கள்! பெரும் பெரும் உத்தியோகஸ்தர்கள், பட்டதாரிகள், (சொந்தக் கார் உள்ள அளவு) பணநாயகர்கள் போன்றவர்களே நின்றுண்ணும் திருமேனிகளில் அதிகம். அவர்கள் ஏறி வந்த அழகிய 'கார், ஸ்கூட்டர், சைக்கிள்' முதலியவை அங்கே சப்புக் கொட்டிக்கொண்டு நிற்கும்! இதெல்லாம் எங்கோ, சந்து பொந்துகளிலல்ல; தூசி கிளம்பத் தூய்மை பறக்கின்ற பெரும் பெரும் சாலைச் சந்திகளிலே, பெருந் தெருக்களிலே......

தெருவில் நின்று திறந்த வெளிச் சாப்பாட்டு நாடகம் நடத்துவது ஒருபுறம் இருக்க, இத்தனை தூசியும் மண்ணும் தின்றும் இவர்கள் உடற்கட்டுத் தளராமல் (மாறாக, மேலும் மேலும் உறுதியாகிக் கொண்டு) இருக்கிறார்களே என்று நான் வியந்ததுண்டு. எதற்கும் முறிவு உண்டல்லவா? வெள்ளரிக்காய், வெங்காயம், முள்ளங்கி, காரட், காலிப்பூ, எலுமிச்சம்பழம் போன்றவைகளை, அவையவை கிடைக்கின்ற காலங்களில், பச்சையாகவே அரக்கித் தள்ளிவிடுகிறார்

கள். இலை, தழை, வேர், கிழங்கு என்ற வேறுபாடே அவர்கள் பார்ப்பதில்லை. ஒரே வயிற்றுக்குள் போய்ச் சேருவதில் வேற்றுமை எதற்கு?......

இலை கனிகளில் மட்டுமல்ல; கைகளிலே கூட இடது கை, வலது கை என்ற வேறுபாட்டை அவர்கள் அதிகம் பாராட்டுவதில்லை. சுவையான உணவை இரண்டு கைகளாலும் தான் சாப்பிடுகிறார்கள். (நம் ஊர்களில் தண்ணீர்ச் செம்பை மாத்திரம் இடது கையால் எடுத்து அண்ணாந்து ஊற்றிக்கொள்வார்கள்; மற்றபடி இடது கை, இறுதியில் ஊன்றிக் கொண்டு எழுவதற்குத் தவிர சாப்பாட்டின்போது வேறெதற்கும் இடம் பெறுவதில்லை. இங்குள்ளோர் அந்தப் புறக்கணிப்பை விரும்பவில்லை.) பெரிய எலும்போடு கூடிய மாமிசத் துண்டுகளையும் ஒருநகை விரல்களால் நிமிட்டிப் பிய்க்க முடியாத் கோதுமைச் சப்பாத்திகளையும் சமாளிக்க இரண்டு கைகளாவது வேண்டாமா? (சாப்பிடு முன்னும் சாப்பிட்ட பின்னும் இரண்டு கைகளையும் கழுவிக் கொள்கிறார்கள்...)

கல்லூரி மாணவர்களில் சிலரும், அதிகாரிகளில் சிலரும் சாப்பிடும்போது கூடத் தங்கள் காதலுக்குரிய சிகரெட்டைக் கைவிடுவதில்லை. ஒரு கையில் புகையும் சிகரெட்டு; மறுகையில் தேநீர்க் கோப்பை. இதில் ஒரு இழுப்பு; அதில் ஒரு இழுப்பு! இது அவர்களின் பழக்கம். உணவு விடுதிகளுக்குப் போனால், எல்லா மேசைகளிலும் தவறாமல் ஒவ்வொரு சாம்பல் கிண்ணி (ஆஷ் ட்ரே) நடுநாயகமாக வீற்றிருக்கும். அதைப் பார்த்துக் கொண்டேதான், சாப்பிட வேண்டும். சிகரெட் பிடிக்கின்றவர்களே அறிவாளிகள், பெரிய மனிதர்கள் என்ற கருத்து உலகில் தீவிரமாகப் பரவி வருகிறது. அவர்களின் சௌகரியத்தைப் புறக்கணிக்க முடியுமா?

## மாணவ மணிகள்!

தில்லிமா நகரில் அலுவலக வாழ்க்கையே முக்கியம். கலை வாழ்வுக்கு இங்குப் பொதுவாக இடமில்லை. தொழில்களும் மிகக் குறைவே. அதனால்தானோ என்னவோ, கல்வி ஒரு தொழிலாகவே மாறியுள்ளது. கல்விக் கூடங்கள் உண்மையில் தொழிற்சாலைகளே. அங்கு ஆசிரிய—மாணவ உறவும் சற்றேறக் குறைய முதலாளி–தொழிலாளி உறவே! தொழிற்சங்க நடவடிக்கை போன்ற போக்கே அங்கு அதிகம்.

என்ன காரணத்தினாலோ, இங்குள்ள மக்கள் அறிவைத் தேடிக் கொள்வதில் அதிக அக்கறை காட்டவில்லை. மாணவர்களும் மற்றவர்களும் பொது அறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். விரிந்து பரந்த நமது நாட்டின் பல பாகங்களைப்பற்றி அவர்களில் பலருக்கு ஒன்றும் தெரியவில்லை. அதுபற்றி அவர்கள் கவலைப்படுவதுமில்லை. படிப்பைவிட வழிகாட்டி (கைடு)களுக்கும், பாட நூல்களை விடத் துணை நூல்களுக்குமே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கல்வியும் பட்டங்களும் அநேகமாக விலை—விடை அளவுக்கு இறங்கிவிட்டன. தேர்வுகளை நன்றாகத் தெரிந்து கொண்டு அவைகளில் வெற்றி பெறும் வழிகளைத் திறம்பட வகுத்துக் கொண்டுள்ளார்கள் என்று சொல்ல வேண்டும். ஆதலால், கல்வி நிலையங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்கள் அதிக மதிப்பு, (சில போது

மதிப்பே) கொடுப்பதில்லை. ஆசிரியர்களும்,

"பொழுதொடு சென்று
வழிபடல் முனியான்;
சித்திரப் பாவையின்
அத்தக அடங்கி...."

என்னும் (நன்னூல்) மாணவ இலக்கணங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, மாணவர்களைக் 'காக்கா' பிடிக்கத் தொடங்கி விட்டார்கள்' பாவம், வயிறு படுத்தும் பாடு...

மாணவர்களும், கல்வி நிலையங்களில்,கல்வியைத்தவிர வேறெல்லாவற்றிலும் அதிக ஈடுபாடு காட்டுகிறார்கள். "எங்களுக்கு ஒரு தனி அறை (காமன் ரூம்) வேண்டும்; குளிர் காலத்தில் அதில் வெப்ப சாதனங்களும் வெயில் காலத்தில் குடிக்கும் குளிர்நீர் வசதியும் வேண்டும்; தேர்வுகளோ, சிறப்பு வகுப்புக்களோ எவையும் மாணவர்களைக் கலந்தாலோசித்தே நடத்த வேண்டும்; நாங்கள் விரும்புகிற மேசை நாற்காலிகள், விளையாட்டுச் சாமான்கள், நூல் நிலையப் புத்தகங்கள் முதலியன நாங்கள் விரும்பும்போது கிடைக்க வேண்டும்" என்பன போன்ற சிக்கல்களுக்காகக் கல்லூரித் தலைவரைச் சந்தித்துப் பேசுவதும் அவர் தங்கள் கருத்தை ஏற்காவிடில் வேலை (படிப்பு) நிறுத்தம் என்னும், 'ஸ்டிரைக்'செய்வதுமே அவர்களின் முக்கியமான கடமைகள்! இந்த மாணவ மணிகளைப் பெற்ற மகராசர்களோ இவைகளிலெல்லாம் தலையிடுவதே இல்லை. தந்தையே ஆனாலும் வயதுவந்த பிள்ளையின் உரிமைகளில் தலையிடலாமா? இல்லை, தலையிடத்தான் அவர்களுக்கு நேரம் இருக்கிறதா?

கல்லூரிகளிலும் பல்கலைக்கழகத்திலும் மாணவ மாணவிகளுக்கு வேறொரு முக்கியமான கடமையும் உண்டு. அதுதான் அவ்வப்பகுதிகளில் உள்ள சிற்றுண்டிக் கடைகளை ஆதரிப்பது. இவர்களை நம்பித்தானே, எந்தப் பொருளுக்கும் அதிக விலை குறித்து அவர்கள் கடை போட்டிருக்கிறார்கள்!

இங்கே வந்த புதிதில், 'மாணவர்கள் திருமணத்தை முடித்துக் கொண்டு குடும்பம் குடும்பமாகவே சென்று படிக்கின்றார்கள்' என்று நினைத்தேன். எந்த இடத்தில் பார்த்தாலும் ஓராணும் ஒரு பெண்ணுமே காட்சியளிப்பார்கள்; அவர்கள் நெருங்கி நடப்பதையும் இனிக்க இனிக்க (ஏதேதோ) பேசிக் கொள்வதையும் பார்க்கின்ற யாரும் அவர்களைக் கணவன்-மனைவி என்றே நினைப்பார்கள், — அதாவது, தமிழ்க்கண் கொண்டு பார்ப்பவர்கள்! இங்கே இது பழகிய காட்சி. அதனால் யாரும் அதை விகற்பமாக நினைப்பதில்லை...

கல்வி நிலையங்களை அடுத்துள்ள சிற்றுண்டிச் சாலைகள் பெரும்பாலும் பொழுது போக்குச்சாலைகளே. அங்கு செல்கின்ற இளைஞர் இளைஞிகளுக்கு உணவோ காப்பியோ முக்கியமல்ல; பேச்சு ஒன்றே முக்கியம். ஒரு குவளைக் காப்பி அல்லது தேநீரை வாங்கி வைத்துக் கொண்டு ஒரு மணிநேரம் பேசிப் பேசிப் பொழுதைக் கழிப்பார்கள். சில சமயம் தங்கள் பாடத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். மற்றச் சமயங்களில் தங்களைப்பற்றியும், மற்றவர்களைப்பற்றியும், தாங்கள் அறியாத உலகப் பிரச்சினைகளைப்பற்றியும் பேசுவார்கள். அவர்கள் தந்தைமார் அலுவலகங்களில் நடத்துகின்ற இந்த அரிய சாதனைகளுக்கு இவர்கள் இங்கேயே ஒத்திகை பார்க்கிறார்களோ?

அவசரமாகக் காப்பி யருந்த வேண்டுமென்று இந்தக் கடைகளுக்குப் போகின்றவர்கள் ஏமாற்றமே அடைவார்கள். போய் உட்கார்ந்து அரைமணி நேரம்வரை பரிமாறுகிறவர்கள் யாரும் நமது பக்கமே வரமாட்டார்கள்; கூப்பிட்டு எதையாவது கொண்டு வரச் சொன்னாலும், அது வந்து சேர அடுத்த அரைமணி நேரம் ஆகும்! அது அங்குள்ள சம்பிரதாயம். அவர்கள் பொழுதுபோக்கர்களுக்கே பழக்கப்பட்டவர்கள்.

இங்குள்ள படிப்புப் பெண்கள் 'உயர்ந்த' சாதியைச் சேர்ந்தவர்கள். அதனால் அவர்கள் புல் தரையிலோ, பெஞ்சு, நாற்காலிகளிலோ பொதுவாக உட்காருவதில்லை. மேசை மேல் உட்காருவார்கள்; அல்லது, சுற்றுச்சுவர்களில், (வயல் வரப்புகளில் வெள்ளைக் கொக்குகள் வரிசையாக இருப்பது போல) ஏறி உட்கார்ந்துகொள்ளுவார்கள். சிறுமிகளல்ல; எல்லாரும் கல்யாண வயதை மீறிய இளம்பெண்கள்!!

ரெயில் வண்டிகளிலேயே 'கூரை'யில் ஏறிப் பிரயாணம் செய்யும் வீராங்கனைகள் பெற்ற திருச்செல்வங்களாயிற்றே, கீழே உட்காருவார்களா?

(தொடரும்)

## அலெர்ஜி (Allergy)

அல்லோஸ் (மற்ற), எர்ஜியா (சக்தி) எனும் இரண்டு கிரேக்க சொற்களைச் சேர்த்து 'அலெர்ஜி' என்ற சொல்லை வான்பிரிக்கெட் (Von Pirquet) என்பவர் உண்டாக்கினார்.

இந்தநோய் எதனால் உண்டாகிறது என்பதை இதுவரை எவரும் கண்டுபிடிக்கவில்லை.

அரிசி, பால், பழம் போன்ற உணவுப் பொருள்கள் பெரும்பாலாருக்குப் பிடித்தமானவை. ஆனாலும் சிலருக்கு இவையும் இவை போன்றவைகளும் உடலுக்கு ஒத்துக் கொள்வதில்லை. சிலருக்கு மருந்துகளும் ஊசி மூலம் மருந்து செலுத்துவதும் 'அலெர்ஜியை' உண்டாக்கும். முகப்பவுடர், துணியிலுள்ள சாயம், காலணி, மயிர், தூசு முதலியவற்றால் சிலருக்கு அலெர்ஜி ஏற்படலாம். சில பிராணிகள், சில தாவரங்கள், ஒருசிலருக்குப் பிடிக்காத் காரணத்தாலும் அலெர்ஜி உண்டாகலாம்.

நோயின் வேறு காரணங்களைக் கண்டுபிடிக்க முடியாதபோது 'அலெர்ஜி'யே காரணம் என்கிறார்கள்.

காசம், கண் அழற்சி, வயிற்றுக் கோளாறுகள், தலைவலி, காக்கை வலி, தோல் நோய்கள் முதலியன 'அலெர்ஜி'க்குள் அடங்கும்.

திடீரென்று சிலருக்குச் சில பொருள்கள் ஒத்துக்கொள்ளாமல் அலெர்ஜி ஏற்படுவதுண்டு. பல கேள்விகள் கேட்டும் ஆழ்ந்த சோதனை செய்தும் அலெர்ஜிக்குள்ள பொருளைக் கண்டுபிடிக்க முயல்கிறார்கள். அப்பொருளை நீக்கிய பிறகு அலெர்ஜி "நோய்" நின்றுவிடக் கூடும்.

பொதுவாக உடல் நலம் குன்றாமல், வயதுக்கேற்ற உடற்பயிற்சி, சத்துணவு முதலியவற்றுடன் இருந்தால் அலெர்ஜியைத் தவிர்க்கலாம். பத்தில் ஒருவருக்கு அலெர்ஜிக் குணம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

**இலக்கியப் பகுதி :**

# குறளின் குரல் ஒன்றே

மு. குழந்தைவேலு, பீ. ஏ.

*[மனிதன் தான் செய்யும் தவறுகளுக்கு மேற்கோள் காட்டுவதென்றால் எந்த இழி செயலுக்கும் காட்டமுடியும். தான் செய்வது தனக்கும் பிறர்க்கும் கேடுதரும் என்ற உள் உணர்வு இருப்பதுதான் சிறப்பு. எந்த நூலும்அறநெறியும்,எந்த வாழ்க்கை நெறியும் எக்காலத்துக்கும், எல்லா மக்களுக்கும் பொருந்துவதாக இருக்க முடியாது. ஆனாலும் திருக்குறள் இப்பொதுவிதிக்கு பெரிதும் விலக்காக இருந்து வருகிறது. இதிலும் கூடக் காலமாறுபாட்டுக்கும் புதிய சமுதாயத்துக்கும் ஒவ்வாதன இருக்கக் கூடும்; இருக்கின்றன. ஆனாலும் ''உலகம்'' என்ற வள்ளுவரின் சொல் எவ்வாறு தவருகப் பயன்படுத்தப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார், கட்டுரையாளர்.]*

மூன்று எழுத்துக்களுக்குச் சிறப்புக் கொடுக்க வேண்டுமென்று நினைத்துத்தான் நம் தொன்மையான மொழிக்குத் ''தமிழ்'' என்று, அன்று, பெயர் சூட்டி மகிழ்ந்தார்களோ என்னவோ? தமிழ் எனும் சொல் இனிமையெனும் பொருளைத் தன்னுள் கொண்டது போல், குறள் என்ற மூன்றெழுத்து 'உலகு' அனைத்தையும் தனதகத்தே அடக்கி ஏற்றம் பெற்றுவிட்டது. கடுகுபோல் இருந்து, அதனுள் ஏழு கடலையும் அடக்கியது என்றும்; 'அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்திக் குறுகத்தரித்த குறள்' என்றும், அறிவுடைப் பெரியோர்களால் போற்றப்பட்டது, போற்றப்படுகிறது. எல்லா மதத்தினருக்கும்; எல்லா இனத்தவருக்கும்; எந்நாட்டவருக்கும், எக்காலத்தவருக்கும் பொதுவான கருத்தைச் சொல்லியதோடல்லாமல், எல்லோரும் 'வள்ளுவப் பெருந்தகை எங்கள் கருத்தைச் சொல்லி இருக்கிறார், அதனால் அவர் எம்மவர்' என்று போட்டியிட்டு உரிமை கொண்டாடும் அளவு தனிச் சிறப்புடையவர் வள்ளுவர்.

திருவள்ளுவரின் சமயம்பற்றி நமக்குக் கவலை இல்லை. அவர் இனம்பற்றிக் கவலை இல்லை. அவர் தமிழர். கல்தோன்றி மண் தோன்றாமுன் தோன்றிய தமிழ் நிலப்பரப்பில் வாழ்ந்து, வாழ்ந்த இடத்தைப் புனிதமாக்கிப் புகழோடு நம்முள் கலந்தார். மொழியால் பின்னப்பட்ட இனத்தால் நம்மவராகி, நாம் பெருமையுடன் வாழ வழி வகுத்தார். அயல் மொழியினரும் குறள் மணத்தை நுகரும்போது அது தோன்றிய மூலமொழியை. அவ்வாசிரிய-நல்

லார் வாழ்ந்த நிலத்தை, அப்புனிதமானவர் சார்ந்த இனத்தை நினைக்கிறார்கள். "தமிழில் என்ன இருக்கிறது?" என்று கேட்கும் சுவை உணரா மாக்களும் தமிழ் மண்ணில் பிறந்த காரணத்தால் பெருமை அடைகிறார்கள். அவர்களும் "பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி செயப்பான்மைகெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டு" வாழ்கிறார்கள். வாழட்டும்!

வாழ்ந்த தமிழினம்; சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்த்து, ஏற்றம் பெற்று, ஏறுபோல் பீடு நடைபோட்ட சிறந்த இனம்; என்ன காரணத்தாலோ சிந்தனையைத் துறந்து, எதையும் நம்பி ஏற்றுக் கண்மூடித்தனமான வாழ்வு நடத்தும் கையறு நிலைக்கு வந்தது. தமிழிலும் ஆய்வுத்திறன் வளர வேண்டும். இலக்கியத்துக்காக, இலக்கிய இன்பத்துக்காக எதையும் ஏற்கும் கண்மூடி வழக்கம் அனைத்தும் மண்மூடிப் போக வேண்டும் என்று, நல்லுள்ளம் கொண்டவர்கள், இலக்கியத்தில் மறுமலர்ச்சி விரும்புவோர், வேண்டுகிறார்கள். தம் எண்ணத்தை நிலைநாட்ட, 'ஏன்; எப்படி; எதற்கு' எனும் வினாக்களை எழுப்பி ஆய்கின்றனர்.

கடவுள் காதையில் காமச்சுவை ஏன்? முன்னுக்குப்பின் முரணான கருத்து எப்படி வந்தது? ஓர் இனத்தை பிறிதொன்று அடிமைப்படுத்த அமைந்த கருவியாக இருக்கலாமா ஒரு நூல்? அப்படியாயின் நம்மை நாமே இழிந்தவராகக் கருதிக்கொண்டு இலக்கியம் என்ற பெயரால் எதையும் எதற்காக ஏற்கவேண்டும்? அது சிறப்பாகுமா? மொழி அமைக்கும் கலைமூலம் தானே ஒருநாடு மற்றொரு நாட்டை; ஓரினம் மற்றொரு இனத்தை அடிமைப்படுத்த முடியும்? அப்படி புராணம்; இதிகாசம் என்ற பெயரால் நம் கருத்தை, உயர்வை, அழிக்க முயலும் ஏடுகளைப் படிக்கலாமா? பாராட்டலாமா என்று ஆதாரத்துடன் கேட்டால் தமிழருடைய உயிர்நாடியான குறளைச் சான்றுக்கு இழுக்கிறார்கள்.

## முரண்பாடு?

"எங்கில்லை முரண்பாடு? குறளில் முன்னுக்குப் பின் முரணான கருத்து இல்லையா? இரவு பாடிய வள்ளுவன் ஏன் இரவச்சம் பாடினான்? கொல்லாமை பாடிய பொய்யில் புலவன் ஏன் "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர்" என்று மாறுபட்டுப் பாடினான்? என எதிர்க்கவேண்டும் என்ற கருத்துக்காக எதிர்க்கிறார்கள்! போலி வேடமணிந்த சாமியார்போல் புறத்தில் சரியெனப்பட்டாலும், ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் குறைமதி கூத்தாடுவது தெரியாமல் போகாது.

'இரவு' பாடிய வள்ளுவர் 'இரவச்சம்' அதற்கு எதிர்த்தாற்போல்பாடினார்; மறுப்பதற்கில்லை; மறைப்பதற்கில்லை. இயல்வது கரவேல்; 'ஏற்பது இகழ்ச்சி' என்ற ஔவை, வேறொரு பகுதியில் 'ஈவது விலக்கேல்' ஐயமிட்டுண்' என்று பாடவில்லை; அடுத்தடுத்த வரிகளில்தான் பாடினாள். அவளுக்கு அது முரண்பட்ட கருத்தாக இருக்குமானால் கம்பர் மறந்த நிலையில் வாலியை மறைந்திருந்து கொன்ற இராமனைப் படம் பிடித்துக் காட்டித் தன்னைக் காக்க சமாதானமும் சொல்லிவிட்டுப் பின், இராவணனிடம் படையில்லை என்ற காரணத்தால், "இன்றுபோய் நாளை வா" என்று சொல்லித் தமிழ்ப் பண்பைக் காக்க முயன்றாரே, அதுபோல் செய்திருக்கலாம்.

அவ்வையும், வள்ளுவனும்! அப்படிச் செய்யவில்லை. காரணம் அவர்கள் கருத்திலே களங்கம் இல்லை. தங்களுடைய அறிவிலே மாசில்லை., களஞ்சியமாக இருந்திருக்கிறது.

உழைக்கச் சக்தி இருந்தும், நாலுவீட்டுச் சோற்று ருசிகண்டு தன் நிலை மறந்து, மானம் இழந்து வீடுவீடாகக் கையேந்தி நிற்கும் அந்தச் சோம்பேறிகளைக் கண்டு அவ்வை, '' 'ஏற்பது இகழ்ச்சி', அதனால் உழைத்து உண்டு மானத்தோடு வாழுங்கள்'' என்று புத்தி சொன்னாள். துறந்தோருக்கும்; உழைத்துண்ண உடலில் வலிமை இல்லாதவருக்கும் கூன், குருடு நொண்டி; இன்ன பிற இயற்கைக் கோளாறால் மெலிந்தவருக்கும் காப்பற்றோருக்கும் அவர் நிலைகண்டு கண்ணீர்விட்டுப் பணம்படைத்தோரைப் பார்த்து. 'ஐயமிட்டுண்ணுங்கள் என்று அறிவுரை சொன்னாள். இது முன்னுக்குப் பின் முரண் என்பது சரியல்ல.

இதுபோல்தான்,

''ஈயென இரத்தல் இழிந்தன்று
அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும்
இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல்
உயர்ந்தன்று-அதனெதிர்
கொள்ளேன் என்றல்
அதனினும் உயர்ந்தன்று...''

என்ற புறநானூற்றுக் கருத்தும். இது முன்னுக்குப் பின் முரண் எனக் குறை குடங்கள் கண்ணுக்குத் தெரியலாம். கூத்தாடலாம். ஆனால் சிந்தித்துப் பார்க்கும் திறன் பெற்றவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எளிதில் விளங்கும்.

தமிழர்கள் 'துறவிலும் இல்லறம் இனிது' எனக்கண்டவர்கள். அதனால் உலகை உள்ளடக்கிய வள்ளுவர் தனியாக வீடுபற்றிப் பேசவில்லை. மனிதன் தன் கடமையைச் செவ்வனே செய்தால் அவன் தனியாக இருந்து, குடும்பத்தை மறந்து இறைவனைத் தேடுதல் வேண்டாம் என்பது தான் அவர் கருத்து. அப்படியானால் துறவு என்று ஏன் திருவள்ளுவர்பாடினார் என்று சிலர்கேட்கலாம். குறள் ஒப்புயர்வற்ற நூல். அதில் குறை காணலாம்; குறை காணவேண்டும். அப்போது தான் தமிழ் வளரும். ஆனால் அதற்குமுன்பு உரையாசிரியர்களையும், முன்னால் வாழ்ந்த பெரியார்கள் வள்ளுவரைப்பற்றிக் கூறிய கருத்தையும் சிந்தித்துப் பார்த்துவிட்டுப் பின் ஆராய்ச்சியில் இறங்கவேண்டும்.

இரவு எந்த இயலில் பாடுகிறார்? இரவச்சம் அவர் பாடிய

**பாதுகாப்புச் செலவு**

இந்தியா:

| | ரூ.(கோடி) |
|---|---|
| 1956 — 57 ல் | 192.15 |
| 1957 — 58 ல் | 256.72 |
| 1958 — 59 ல் | 250.93 |
| 1959 — 60 ல் | 230.76 |
| 1960 — 61 ல் | 247.55 |
| 1961 — 62 ல் | 289.54 |
| 1962 — 63 ல் | 451.81 |

பிற நாடுகளுடன்:

| | டாலர் (கோடி) |
|---|---|
| சீனா | 235.0 |
| ஸ்பெயின் | 22.7 |
| பாகிஸ்தான் | 20.3 |
| பிரேசில் | 20.1 |
| இந்தோனேஷ்யா | 19.6 |
| அர்ஜெண்டினா | 18.8 |
| துருக்கி | 12.7 |
| பர்மா | 9.2 |
| இந்தியா | 52.2 |

நோக்கம் என்ன என்பதை ஆய்ந்து பார்க்க வேண்டும். மானத்தோடு ஒருவன் இரந்து வாழ்கிறான் என்றால்; இரப்பதால் அவன் தன்மான உணர்ச்சிக்கு ஊறு விளைவதில்லை என்றால், "இரப்பும் ஓர் ஏமாப்புடைத்து" என்று பெருமையாகக் கூறுகிறார்.

'தன்மான உணர்ச்சிக்குக் குறைவு ஏற்படுமாயின் பகுத்தறிவற்ற மாட்டுக்குக்கூட தண்ணீர் வேண்டுமென்று கேட்காதே' என அறிவுறுத்துகிறார்,

''ஆவிற்கு நீர் என்றிரப்பினும்-
நாவிற்கு
இரவின் இளி வந்ததில்''

என்ற குறளால்.

''தெண்ணீர் அடுபுற்கை
யாயினும் தாள் தந்தது
உண்ணலின் ஊங்கினியதில்''

எனும் குறள்மூலம் இரந்து சுவையோடு உண்பதைக் காட்டிலும், உழைத்து அரைவயிற்றுக் கஞ்சி குடிப்பதே மேல் என்கிறார்.

## எவருக்கும் பயன்படும்!

ஒரு நூலைப் படிக்கும்போது கூடுமானவரை அவ்வாசிரியர் கருத்தோடு, மனதோடு ஒட்டிப் பார்த்துவிட்டு, அவ் ஆசிரியரைப் பற்றி மற்றவர் கூறும் விளக்கத்தைப் படித்துவிட்டுப் பின் நம் எண்ணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து நிறைவு, குறைவு எப்படி இருக்கிறது எனக்கூறவேண்டும். இதன்றி மதத்துறையைச் சாடிவிட்டானே; நமக்கு வேண்டிய கவிஞனைத்தாக்கிவிட்டானே; என்று காழ்ப்பு மனம் கொண்டு நல்ல தமிழ் உள்ளம் கொண்ட எல்லோரது நெஞ்சிலும் குடியிருக்கும் வள்ளுவரையே தாக்க முயல்வது ''வன்மையுள் வன்மை' என்று தான் கூற வேண்டும்! இன்றைய தமிழகத்தில் இவர்கள் ஒரு தனிப் பிரிவினர். மதத்துக்காக வள்ளுவரைத் தாக்கி மதத்துக்கு ஆதாரம் தேடும் மகத்தான பணியில் ஈடுபட்டு மனதை இருளாக்கிக் கொண்டவர்கள் இவர்கள்.

மற்றொரு சாரார் குறளைத் தமக்கு உறுதுணையாகக் கொண்டு தங்களுடைய நேர்மையற்ற போக்கை மறைக்கமுயலும் கடமை மறந்தவர்கள். குறளோ எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறது. பிறர்க்குத் தீங்கு செய நினைக்காத உண்மையான புத்த மனம் கொண்ட புத்த மதத்தாரும் குறளைப் போற்றுகிறார்கள். கசாப்புக்கடைக்காரனும் ''வள்ளுவர் என் தொழிலைச் செய்யலாம் என்று சொல்கிறார்" என்கிறான், ஆதாரத்துடன். இப்படி ஒவ்வொரு பிரிவினரும் எடுத்தாளக் குறள் இடம் கொடுக்கிறது. அது தான் திருக்குறளின் திருத்தன்மை; தனித்தன்மை; புனிதத் தன்மை.

''மாணவனை ஏன் திருத்தவில்லை'' என்று, கடமையில் தவறிய ஆசிரியரை மற்றவர்கள் கேட்டால் வள்ளுவரின் துணையைக் கொண்டு தப்ப முயல்கிறார்கள். குறள் உற்றுழி உதவும் உயிர்த்துணையாக அவர்களுக்குப் பயன்படுகிறது. "மாணவர் வெண் சுருட்டுப் பிடிப்பதும், மாணவருக்குத் தகுதியற்ற செயல்செய்து மாண்பைக் கெடுப்பதும் இற்றைய நாள் நிகழ்ச்சி; இற்றைய காலப்போக்கு. அதனால் வள்ளுவர் கூறியதுபோல் நாமும்,

''எவ்வது உறைவது உலகம்-
உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"

என்று கூறித் தங்கள் கடமையிலிருந்து, தம்மை விடுவித்துக் கொள்கிறார்கள். ''நெற்றிக் கண்

னைக் காட்டினும் குற்றம் குற்றமே" எனக் கூறும் நக்கீரர் பரம்பரையும் ஆசிரியர்களாகத் தோற்றமளிப்பதை மறுக்கவில்லை. அதனால் சில நேரத்தில் கெட்ட பெயரும் கேட்கிறார்கள். உணராமல் இல்லை.

கண்ணுக்குள்ளே விட்டு வளர்த்து, கடமை தவறினால், கண்ணியக் குறைவாக நடந்தால் மகனைக் கண்டித்துத் திருத்தும் உயர்ந்த உள்ளம் படைத்த பெற்றோர் உண்டு. சிலர் தங்கள் கடமை மறந்தவர்கள் குறளைத் துணையாகக் கொண்டு குற்றம் பலசெய்து நாட்டின் ஏற்றத்துக்கு முட்டுக் கட்டையாக இருக்கிறார்கள். மகன் கோயில் மாடு போல; அவிழ்த்துவிடப்பட்ட கழுதைபோலத் தெருத் தெருவாகச் சுற்றிவந்து, பெற்ற தாய்க்கும்; பிறந்த பொன் நாட்டுக்கும் கெட்டபெயர் வாங்கிக்கொடுப்பான்; அதையும் பார்த்துவிட்டு, "இதுதான் இன்றைய நிலை; பண்பாடு; குறள்கூட 'உலகத்தோடு ஒட்ட ஒழுகு' என்றுதான் சொல்கிறது. இது தவிர்க்க முடியாதது" என்று திண்ணைமேல் இருந்து வேதாந்தம் பேசுகிறார்கள் தங்கள் கடமை மறந்தவர்கள்; வள்ளுவர் கூறிய "உலகம்" என்ற சொல்லுக்கு உண்மையான பொருள் தெரியாதவர்கள்.

அங்காடி நாய்போல் அலையும் கணவர்களும், மனைவிகளும் எத்தனையோ ...அவர்களுக்கும் குறள் பாதுகாப்பளிக்கிறது! இதுபோல் ஒவ்வொரு துறையிலும்!

நேர்மையான அலுவலரையும், சிலர் நேர்மையற்றவராக, இழிந்தவராகத் திருப்பிவிட முயல்கின்றனர். அவர்களுக்கு ஆயுதம் என்ன தெரியுமா?

"எவ்வது உறைவது உலகம்
உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்-
பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்"

எனும் சிறந்த குறட்களேயாம்.

நேர்மையற்றவராக, நயவஞ்சகத்தால் நல்லவரைக் கெடுப்பவராகக், கோள் சொல்லி ஒருவனைக்கெடுத்து அவன் வாழ்வு எனும் சவக்குழியின்மேல் தன் வாழ்வுக் கோட்டையைக் கட்டுபவராக இருந்தால், பொய்யும், புரட்டும், பித்தலாட்டமும் செய்து உயர்வடைய வழி வகுப்பவராக இருந்தால், அவர்களோடு சேர்ந்து அவரைப்போல் வாழ முயல்வதுதான் அறிவு! "நேர்மையாகத்தான் இருப்பேன்; 'அறிவுக்குப் புறம்பாக நடக்க மாட்டேன்; என் உயர்வுக்காக அடுத்தவரைக் கெடுக்க மாட்டேன்; அதிகாரத்தில் இருப்பவர் ஆணவக்காரர் என்பதற்காக அஞ்ச மாட்டேன்" எனக் கூறினால் அது அறிவின்மை! முன் குறிப்பிட்ட இனத்தவரோடு ஒட்ட ஒழுக முடியாதவர்; முயலாதவர், கல்லாதவர்! எவ்வளவு உயர்த்த கல்வி கற்றிருந்தாலும் அவர் அறிவில்லாதவர்! உலகத்தோடு ஒட்ட ஒழுகத் தெரியாதவர்! இப்படிச் சிலர் குறளைப் பயன்படுத்தி நல்லவரையும் அழிவு நோக்கித் துரத்துகிறார்கள். இவர்களிடம் குறள் மது உண்ட பித்தன்கையில் கிடைத்த கூர்மையான ஆயுதமாக இருக்கிறது. காட்டு வழியில் இருளில் தன்னைக் காத்துக் கொள்ளக் கிடைத்த ஒப்புயர்வற்ற ஆயுதம் திருக்குறள். தனக்கு ஆயுள் நாள் முழுதும் அகத்துக்கும், புறத்துக்கும் உதவும் உறுதுணை. அதைக் கொண்டு நல்லவர், நன்னெறி எனும் உயர் வாழ்வைக் குலைக்கப் பயன்படுத்துகிறார்களே என்று நாம் கண்ணீர் விடத்தான் வேண்டியிருக்கிறது. அவர்கள்.

'உலகம்' எனும் வார்த்தைக்குக் கொடுத்த விபரீதமான பொருளால் வந்த வினைதான் இது.

'உலகம்' எது?

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே." என்கிறது பழைய நூல். அடுத்து எழுவது 'உயர்ந்தோர் யார்' என்ற கேள்வி. கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் இவைகளில் சிறந்தோரே உயர்ந்தோர்; இதுதான் 'உலகத்'துக்குப் பண்டைத் தமிழர் வகுத்த இலக்கணம்; வரம்பு; எல்லை. இதை சிலர் உணர்ந்தும், பலர் உணராமலும் 'உலகம்' என்ற சொல்லை, அது குறிக்கும் உயர் பொருளை, எதிராகப் பயன்படுத்தி ஆக்கம் தேடுவதற்குப் பதில் அழிவையும் அறிவூட்டிச் சமுதாயத்தைத் திருத்துவதற்குப் பதில் மடமையைக் காட்டி மாசடையச் செய்தும் வருகின்றனர், மறைமுகமாக. நீதியின் செழிப்புக்கு உழைக்கவேண்டியவர்கள் அநீதிக்கு வழிவகுத்து நடந்து செல்கிறார்கள்.

வள்ளுவர் காட்டும் 'உலகு' வேறு குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானை எவர் சுற்றமாய்க்கொண்டு சுற்றி வருகிறார்களோ அம்மக்கள்தான் வள்ளுவருக்கு உலகம். குற்றம் உள்ளவனை; குற்றம் உடையவரை உறவினராகக் கொள்பவரை; குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வாரைப் போற்றாதவரை வள்ளுவர் காட்டும் உலகில் அநுமதிப்பதில்லை. வள்ளுவர் காட்டும் உலகத்தில் அவர்களுக்கு இடமில்லை. இது குடி செயல் வகையில் வள்ளுவர் காட்டும் உலகம். வள்ளுவர் 'உலகத்'துக்குத் தரும் விளக்கம்.

வள்ளுவர் கூறும் 'குற்றம் இலாதவர்' குண நலன் என்ன? குற்றமிலாதவரை அளக்கும் அளவுகோல்; எடைபோடும் கருவி என்ன என்பதை அவர் குறளை ஊன்றிப் படித்தால் உணரலாம்.

"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்–அமைந்தொருபால் கோடா திருப்பவர்," சான்றோர்; நடுநிலைமை தவறாதவர்; குற்றமிலாதவர். திறனல்ல தற்பிறர் செய்யினும் நோ நொந்து அறனல்ல செய்யாத விரிந்த உள்ளம் உடையவர்; பொறுமையுடையோரும்; மறந்தும் பிறன் கேடு சூழாத தீவினைக்கு அஞ்சும் நல்லுள்ளம் கொண்டோரும்; "சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா செய்யாமை" எனும் குறிக்கோள் கொண்ட மாசற்றோரும்; எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காணும் அறிவுடையோரும்; குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளும் தெரிந்து, தெளியும் ஆற்றல் பெற்றோரும்; பெயக்கண்டும் நஞ்சுண்டமையும் நயத்தக்க நாகரீகம் கொண்ட நனி சிறந்த கண்ணோட்ட முடையோரும்; அடுக்கிய கோடிபெறினும் குடிப்பிறப்பு குன்றுவ செய்யாத சிறந்த குடிப்பிறப்பாளரும்; இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் குன்றி வருபவற்றை விட்டொழிக்கும், நிலையின் இழியா மானமுடையவரும் வள்ளுவர் கூறும் "குற்றம் இலாதவர்" இனத்தைச் சேர்ந்தவர்கள். இன்ன பிற குன்றனைய உயர் குணம் படைத்த குற்றமிலாதவர்களையே வள்ளுவர் பண்பு உடையவர் என்று கூறுகிறார். அந்தப் பண்புடையவர் குறைந்த அளவில் இருந்தாலும், உலகம் அவர்களாலேயே நிலைபெற்று இயங்கி வருவதால் அவர்களே உலகம். பண்புடையார் பட்டுண்டு உலகம்,

"கருமம் சிதையாமல் கண்ணோட
வல்லார்க்கே
உரிமை உடைத்து இவ்வுலகு"

கண்ணோட்டம் இலாத குறைபாடு உடையவர்க்கு இவ்வுலகு உரிமை இல்லை. அவர்களை வள்ளுவர் 'உலகு' ஏற்பதில்லை. வள்ளுவர் உலகில் சூதுக்கும், சூழ்ச்சிக்கும் இடமில்லை. அடுத்தவரைக் கெடுக்க நினைக்கும் சிறுமதியாளருக்கு இடமில்லை. கடமை மறந்த சோம்பேறிகளுக்கு இடமில்லை. தான் மட்டும் வாழ எண்ணும் குறுகிய எலிஉள்ளம்படைத்தவருக்கு, சுயநலக்காரருக்கு இடமில்லை.

அடக்கம் உடையவர்; அருள் உடையவர்; அவா அறுத்தவர்; அவை அஞ்சாதவர்; அழுக்காறிலர்தார்; அறிவுடையார்; அன்புடையார்; ஆள்வினை உடையவர்; இடுக்கண் அழியாதவர்; இன்னா செய்யாதவர்; இனியவை கூறுபவர்; ஈகைக்குணம் உடையவர்; ஊக்கம் உடையவர்; கண்ணோட்டம் உள்ளோர்; கற்றவர்; கயமைக் குணமிலாதோர்; குடிசெயல்வகை உணர்ந்தோர்; குற்றம் கடியும் பண்பாளர்; கூடா ஒழுக்கம் துறந்தோர்; கூடா நட்புக் கொளாதவர்; கேள்வியில் வல்லவர்; கொல்லாமை போற்றுவோர்; சான்றாண்மை யுடையோர்; சிற்றினம் சேராதவர்; சுற்றம் தாங்குவோர்; சூது விரும்பாதார்; செய்நன்றி மறவாதார்; சொல்வன்மை உடையோர்; தீவினை அஞ்சுபவர்; தெரிந்து செயல்வகை புரிவோர்; தெரிந்து தெளிந்து நடப்போர்; தெரிந்து வினையாடும் திறம்படைத்தோர்; நடுவு நிலைமை தவறாதவர்; நட்பு மறவாதவர்; பண்புடையவர்; பயனில சொலாதவர்; பிறன் இல் விழையாதவர்; நற்புகழ் காப்போர்; புறம் கூறாதார்; பெரியோரைத் துணைகொண்டோர்; பொச்சாப்பு இல்லாதவர்; பொறை உடைமை உடையோர்; மடி இல்லாதவர்; மானமுடையோர்; வாய்மை காப்போர்; விருந்து ஓம்புபவர்; வினை செயல்வகை தெரிந்தாற்றுபவர்; வினைத் திட்பம் உணர்ந்தவர்; வெகுளாதவர்; வெஃகாதவர்; வெருவந்த செய்யாதவர்; இவர்களைத்தான் வள்ளுவர் கண்டார். இவர்களைத் தான் 'உலகம்' என்று எண்ணினார். தமது அழகிய நிலையான திருக்குறளில் நீங்காத இடம் தந்தார்.

இதை உணராதவர், 'உலகம்' என்ற சொல்லுக்கு வள்ளுவர் உள்ளத்துக்கு எதிரான, விபரீதமான பொருள் கொண்டு, வள்ளுவரையே குறைகூறுகிறார்களே!

"காதி விளையாடி கை வீசி
வந்தாலும்
தாதி மனம் நீர்க்குடத்தே தான்"

என்றாற்போல் உயர் நெறியை 133 அதிகாரங்களாகப் பகுத்துப் பாடினாலும், வள்ளுவர் நெறி தவறவில்லை. பாதை விலகவில்லை. குறளின் குரல் மாறுபடவில்லை. இணையற்ற இனிமை கலந்த குரல். உயிரூட்டும் உள்ளத் துடிப்புள்ள உயர்குரல் குறளின் குரல். அது மாறுபாடு இல்லாத ஒரே குரல்.

# சைகிள் ரிப்பேர்: நஃபீல்டு !

தம் வாழ்நாளில் பல்வேறு நற்பணிகளுக்காக உலகம் முழுதும் நன்கொடை வழங்கிய மொத்தத்தொகை 4 கோடி பவுன்; அதாவது 53 கோடி ரூபாய்! அப்படியானால் இவரது சொத்தின் மதிப்பு எவ்வளவோ?

'மாரிஸ்' மோட்டார்காரின் பெயர் உலகம் முழுவதும் தெரியும். இதைப்பெற்றெடுத்தவர், வில்லியம் ரிச்சர்டு மாரிஸ். பிறந்தது 1877 ல்; இறந்தது, 22-8-1963 ல்..

இந்த ஆங்கிலேயச் சிறுவன் தன் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு, 15 ஆவது வயதில் சைகிள் பழுது பார்க்கும் கடையை நிறுவினான். பிறகு 53 ரூபாய் மூலதனத்தில் சைகிள் உற்பத்தியில் ஈடுபட்டான். இதில் வெற்றி கண்ட பிறகு பல கூட்டாளிகளைச் சேர்த்துக்கொண்டு மோட்டார் சைகிள் உற்பத்தியில் ஈடுபட முயன்று தோல்வியுற்று, தன்னந்தனியாகத் தொழில் நடத்தி, அதில் வெற்றி கண்டான். பிறகு மோட்டார் கார் உற்பத்தி முயற்சி! முதல் ஆண்டிலேயே 500 மோட்டார் கார் உற்பத்தி!

1938 ல் இத்தொழிற்சாலையில் பணி புரிந்தவர் எண்ணிக்கை, 16,000.

1904 ல் இவருக்குத் திருமணம். இவர்களுக்குக் குழந்தையே இல்லை. மனைவியும் 1959 ல் மறைந்தாள்.

நஃபீல்டு பிரபு உலகக் கொடை வள்ளல்களில் ஒருவர்.

"இரணவைத்தியனாகப் புகழ்பெற வேண்டும் என்பது என் ஆசை. ஆனால் பணவசதியில்லாது போயிற்று. ஆதலால் அதற்கடுத்தபடியாக என்னைக் கவர்ந்த பொறி இயல் துறையில் ஈடுபட்டேன்," என்று ஒருசமயம் கூறிய இவர், 1938 க்குள்ளாக மட்டும் மருத்துவத்துறை நன்கொடையாக 10 கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்துள்ளார். 13 கோடி ரூபாய் மூலதனத்தில் 1943 ல் நஃபீல்டு ஃபவுண்டேஷன் என்ற அறக்கட்டளையை நிறுவினர். கல்வி வளர்ச்சி, மருத்துவ வளர்ச்சி, சமூக நலப்பணி, முதுமையும் வறுமையும் உடையோர்க்கு உதவி,—முதலிய துறைகளுக்காகவே இந்த ஏற்பாடு. பிற நாடுகளைப் போல் இந்தியாவும் இத்துறைகளில் இவரது நிதி உதவியைப் பெற்றுள்ளது.

"மக்களுடைய ஆதரவினால் என் வாணிபம் செழித்தது. பெரும் பொருள் திரட்டினேன். எனவே மக்கள் துயர் நீக்கும் பணிகளுக்காகவே அதைச் செலவிட முடிவு செய்துள்ளேன்", என்று இவர் கூறியுள்ளார்.

K. S. மகாதேவன், B.SC., M. A.

குழந்தைக்குப் புத்தகம் :

# 5. குழந்தை எழுத்தாளர்?

*[குழந்தை இலக்கியம் எப்படி யிருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது, இத் தொடர்க் கட்டுரை. அறிவுரை கூறுவதைக் கூட அழகான கவிதை மூலமும் சுவையான கதை மூலமும் கூற வேண்டும். மிகப் பெரிய இலக்கிய நிபுணர்கள் கூடக் குழந்தைக்கான இலக்கியத்தைப் படைத்திருக்கின்றனர். தமிழில் குழந்தைக்கான புத்தகங்கள் இன்றுதான் முளைக்கத் தொடங்கியிருக்கின்றன. இவை வளர்ந்து விரைவில் பெருஞ்சோலையாக வேண்டும். இதைக் கோடிட்டுக் காட்டுகிறார், கட்டுரையாளர்.]*

குழந்தைக்குப் புத்தகம் எழுதுகிறவர்களை எழுத்தாளருள் ஒரு தனிப் பிரிவினராகக் கருதும் நிலை இன்று இருந்து வருகிறது. வயது வந்த பெரியவர்கட்குப் புத்தகம் எழுதும் அளவிற்குப் புலமை நிரம்பாதவர்கள் முதலில் குழந்தைகட்கு எழுதிப் பழகிக் கொள்ளலாம் என்றும் சிலர் கருதிக் கொண்டிருக்கின்றனர்! குழந்தைக்குப் புத்தகம் எழுதும்போது தங்கள் முழுப் புலமையும் பயன்படுத்த வாய்ப்பிருப்பதில்லையே என்று சிலர் வருந்துவதையும் நாம் காண்கின்றோம்! குழந்தைக்கு என்று புத்தகம் எழுதும் ஆசிரியர்கள் தம் உண்மைப் பெயரினை வெளியிடுவதற்கு இன்றும் தயங்கும் நிலை இருந்து வருகிறது!

## சோறு எங்கே 'விக்கும்'?

குழந்தைக்குப் புத்தகம் எழுதுவது கற்றுக்குட்டிகள் மேற்கொள்ள வேண்டிய வேலை என்ற தவறான எண்ணமும், தாழ்வு மனப்பான்மையும் முதலில் அகல வேண்டும். எந்த ஒரு ஆசிரியரும் தன் முழுப் புலமையைக் காட்டாமல் சிறந்த ஒரு இலக்கியத்தைப் படைத்து விட முடியாது. குழந்தைகள் பெரியவர்கள் அணிவது போன்ற அளவில் பெரியனவாக இருக்கும் ஆடைகளை விரும்பாமலிருக்கலாம்; அதனால், பெரியவர்கள் அணியும் ஆடையினும் தரக்குறைவான ஆடைகளை அவர்கள் விரும்புவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது தவறாகும்! பெரியவர்கள் உண்ணும் அளவிற்குச் சிறுவர்கள் உண்ண முடியாது என்பது உண்மையே. ஆனால், பெரியவர்கள் உண்ணும் உணவை விடத் தரத்தில் தாழ்ந்த உணவைச் சிறுவர்கள் சுவைப்பார்கள் என்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? குழந்தை தானே என்ற மனப்பான்மையில் முழுப் புலமையையும் காட்ட விரும்பாமல் எழுதிக் குவிக்கின்ற எழுத்தாளர்

கள், "சோறு எங்கே விக்கும்?" என்று கேட்ட புலவருக்குச் "சோறு தொண்டையில் விக்கும்" என்று விடை கூறிய குழந்தை உலகத்தை மறவாமல் நினைவில் கொள்ள வேண்டும்!

குழந்தைக்கு எழுதவில்லை!

இன்று மிகச் சிறந்த அளவில் குழந்தைகள் விரும்பிப் படித்து மகிழ்கின்ற பாடல்களும் கதைகளும் பெரியவர்கட்கென்றே எழுதப்பட்டவை; குழந்தைகட்காக அல்ல என்பது சுவையான தொரு செய்தியாகும்!

*நந்த வனத்திலோ ராண்டி—*
*அவன்*
*நாலாறு மாதமாய்க்*
*குயவனை வேண்டி*
*கொண்டு வந்தானொரு*
*தோண்டி—அதைக்*
*கூத்தாடிக் கூத்தாடிப்*
*போட்டுடைத் தாண்டி*

என்ற சித்தர் பாடலைப் பாடிக் குதிக்காததமிழ்நாட்டுக்குழந்தை இல்லை சிறுவர் இலக்கியத்திற்கு வேண்டிய சுவையும், கவர்ச்சியும், எதுகை மோனை இயைபுகளும் ஒருங்கே கொண்டு திகழும் இப் பாடல் ஆங்கில மொழியில் நெடுங்காலமாகக் குழந்தைகளை மகிழ்வித்து வரும்,

Jack and Jill went up the hill
To fetch a pail of water,
Jack fell down and broke his [crown
And Jill came tumbling after

என்ற பாடலை நமக்கு நினைவூட்டும்! இந்த 'நந்த வனத்து ஆண்டி' உலகத்தை விடுத்துச் செல்ல விரும்பும் பெரியவர்கட்காகப் பாடப் பெற்றது; ஆனால், உலகத்தில் வந்து நுழையும், இளங் குருத்துக்கள் அதில் உள்ள தத்துவப் பொருளைப் பெரியவர்கட்கே விட்டு விட்டு, நகைச்சுவையையும், எதுகை மோனை இயைபு ஒலிகளையும் தமதாகக் கொண்டு விட்டனர்! அவ்வாறே, ஆங்கில இலக்கியமான "பில்கிரிம்ஸ் புராக்ரஸ்"(Pilgrim's progress) சமய அடிப்படையில் எழுந்தது. ஆனால், கதையைப் பொறுத்த வரையில் அது மிகச் சிறந்த குழந்தை இலக்கியமாக அமைந்து விட்டது. மேலும், சமூகச் சமயச் சிக்கல்களை எடுத்துக் காட்டும் வகையில், "இராபின்சன் குரூசோ'' (Robinson Crusoe) எழுந்தது; அரசியலைக் கேலி செய்யும் வகையில் ''கலிவரின் அயல்நாட்டுச் செலவுகள்" (Gulliver's Travels) என்ற நூல் எழுந்தது; ஆனால், அவை எல்லாமே இன்று நம் குழந்தைகளின் கைகளிலே சிறந்த

> **பல இராமாயணங்கள்**
>
> சமஸ்கிருத இலக்கியத்தில் வால்மீகி இராமாயணம் ஒன்றே யல்லாமல், இன்னும் அற்புத இராமாயணம், அத்யாத்ம இராமாயணம், ஆனந்த இராமாயணம், வாசிஷ்ட இராமாயணம், சேஷ இராமாயணம்—என்ற பல்வகையான இராமாயணங்கள் உண்டு. இவற்றைப் போலவே, பவுத்த-ஜைன இராமாயணங்களும் உண்டு.
>
> பவுத்த இராமாயணத்தில் இராவணனைப் பற்றிய குறிப்பே இல்லை. சீதையை எடுத்துச் செல்லுதலும் அதற்கு மேல் நடக்கின்ற நிகழ்ச்சிகளும் சொல்லப்படவில்லை. இராமனும், சீதையும், லட்சுமணனும் தசரதனுடைய மனைவியரில் ஒருத்தியின் வயிற்றில் பிறந்தோர்; அண்ணன் தங்கையை மணந்து கொள்ளும் வழக்கம் புத்தர் பிறந்த சாக்கிய குலத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

இலக்கியங்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

## பெரியவர் கையில் குழந்தை இலக்கியம்

குழந்தைகள் ஏன் பெரியவர்கட்காக எழுதப்பட்ட நூல்களை விரும்பிப் படித்தல் வேண்டும் என்பது அடுத்து எழக்கூடிய கேள்வி! இதற்கு விடையாக நாம் மற்றொரு கேள்வியைத் தான் கேட்க வேண்டும்! பெரியவர்கள் ஏன் குழந்தைகட்கென்று வெளிவரும் நூல்களைப் படிக்கின்றனர்? எத்தனை முறை நாம் குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் 'சாக்கில்' பாரதியாரின் பாப்பா பாட்டைப் படித்துச் சுவைத்திருக்கிறோம்! கவிமணியின் குழந்தைப் பாடல்களைப் பாடுகின்ற ஆசிரியர் அதிகமாகச் சுவைக்கின்றாரா, அல்லது கேட்கும் குழந்தைகள் அதிகமாகச் சுவைக்கின்றனவா என்று யாரே அறுதியிட்டுச் சொல்லக்கூடும்? "புதையல் தீவு" என்ற நூலையும் (Treasure Island) "பொன்னாற்றுப் புரவலனையும்" (King of the Golden Riv.r) பெரியவர்களாகிய நாம் படித்துச் சுவைக்கவில்லை என்று நெஞ்சில் கை வைத்துச் சொல்ல முடியுமா? இலக்கியம் பெரியவர்கட்கானாலும், சிறியவர்கட்கானாலும் அடிப்படைச் சுவையில் மாறுபடுவதில்லை என்ற உண்மையினையே மேற்கண்டவை பறைசாற்றுகின்றன!

## அறிவுரை கூறும் நூல்கள் எங்கே?

பெரியவர்க்கென்று எழுந்த இலக்கியங்கள் குழந்தையுலகிலே குடியேறி வாழுகின்ற அதே நேரத்தில், குழந்தைகட்கென்றே உற்பத்தி செய்யப்பட்ட இலக்கியங்கள் பல இருந்த அடிச்சுவடும் தெரியாமல் மறைந்துவிட்ட செய்தியையும் நாம் காண்கின்றோம்! 'நல்ல பையன்' 'கெட்ட பையன்' போன்ற அறிவுரை புகட்டும் கதைகள் இன்று எங்கே மறைந்தன என்று நம்மால் நினைத்தும் பார்க்க முடிவதில்லை! கல்லெறியும் கெட்ட பையனைப்பற்றி அக்காலக் குழந்தைகள் கையையும் காலையும் வீசியபடியே,

முத்து என்ற ஒரு
  பையன் — அவன்
மூர்க்கன் சோம்பேறி
  பொல்லா முழுப் பொய்யன்;
கல்லும் கையுமாகத்
  திரிவான் — தெருவில்
கண்ட நாய்களைக்
  கதறவே எறிவான்.

என்றுபாடுவர்; ஆனால் இக்காலக் 'குழந்தைகள் இப்படி நேரே எதிரில் வந்து அறிவுரை கூறும் பாடல்களை விரும்புவதில்லை! குழந்தைகள் தவறு செய்வதற்கே பிறந்தவர்கள்; பெரியவர்கள் அவர்களைத் திருத்துவதற்காகவே இருக்கின்றனர்' என்ற கருத்து குழந்தை உலகத்திலே இன்று எடுபடுவதில்லை.

## குழந்தையாக மாறினர்

"இரு நகரக் கதை"யை (A Tale of Two Cities) எழுதிய சார்லஸ் டிக்கன்சும் 'டாபொடில்' (Daffodils) பற்றிப் பாடிய வோர்ட்ஸ்வொர்த்தும் குழந்தைகளுக்காக இலக்கியம் இயற்றுவதாக நினைத்துக்கூட இருக்க மாட்டார்கள்! அவர்கள் குழந்தைக்காக எழுதினார்கள் என்று சொல்வதைவிடக் குழந்தையாக மாறி எழுதினார்கள் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். கண்டதைக் கண்டவாறு கற்பனையுணர்வோடு கூறும் குழந்தையுள்ளத்தை அவர்கள் கொண்டிருந்தனர்;

குழந்தை உலகத்திலே குடியேறி விட்டனர்! முல்லை பூத்துக் குலுங்குவதை நாள்தோறும் நாம் காண்கின்றோம். காய்ப் பேறிவிட்ட நம் மனத்திரையில் அது எத்தகைய உணர்ச்சியையோ, ஓவியத்தையோ உருவாக்குவதில்லை. ஆனால், ஒல்லையூரில் பூத்த முல்லை மலரைக் கண்டதும்,

இளையோர் சூடார்
வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பில்
மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்
பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற
ஆடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன்
மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ
ஒல்லையூர் நாட்டே!

என்று கேட்கும் அளவிற்கு குடவாயில் கீரத்தனார் குழந்தையாக மாறிவிடுகின்றார்! இங்கும் குழந்தை இலக்கியத்திற்கு இலக்கணத்தைக் காண்கின்றோம். இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னர் எழுந்த பாடலாக இது இருப்பதால், ஓரிரு சொற்கள் இன்றைய குழந்தைகள் அறியாதனவாக இருக்கலாம்; அவ்வளவே! குழந்தைகள் விரும்புகின்ற எளிமையும், இனிமையும் கவர்ச்சியும், துடிப்பும் என்றும் மாறாத பசுமையுடன் இங்கே இருக்கின்றன!

## குழந்தைகள் விரும்பும் இலக்கியம்

பெரியவர்கள் தங்களுக்கு வேண்டிய செய்திகளுக்காகவே ஒரு நூலை முற்றிலும் படிப்பர்; ஆனால், குழந்தைகள் செய்திக்காக நூல் படிப்பது மிகவும் அருமை! உயிரோட்டமும், கற்பனை வளமும் நிறைந்துள்ள இலக்கியங்களையே அவர்கள் விரும்புகின்றனர். சுற்றி வளைத்து எழுதுவது என்றுமே குழந்தைகட்குப் பிடிப்பதில்லை! நேருக்குநேர் நின்று பேசுவது போல் எல்லாம் பசுமையாக; நேர் கூற்றில் அமைந்திருக்க வேண்டும்! குழந்தைகள் விரும்பும் நகைச்சுவை 'ஆண்டி தோண்டியைப் போட்டு உடைக்கும்' நகைச்சுவை போன்று நிகழ்ச்சியை அடியாகக் கொண்டு பிறப்பதாக இருத்தல் வேண்டும். சொல்லின் ஆழத்தில் மறைந்திருந்து சுருக்கென்று தைக்கும் அரசியல் வாதிகளின் "முட்சுவை"யாக அது இருத்தல் கூடாது! கதைகளும் பாடல்களும் அறிவுரையை அகத்தே கொண்டு மேலே இனித்தபடி இருக்கும் 'இஞ்சிமுரபா' வாக இருக்கலாம். முழுதும் கசக்கின்ற தூதுவளைக் கியாழனாக அமைந்து விடக் கூடாது! இங்குத்தான் குழந்தை எழுத்தாளர்கள் தம் புலமை நுட்பத்தையும் திறமையையும் காட்டவேண்டும்! உலக நிலையாமையும், யாக்கை நிலையாமையும் வயது வந்த பெரியவர்கள் அறிந்து உணரவேண்டியவை! குழந்தைகள் இவ்வழகிய உலகத்தில் நெடுங்காலம் இருந்து வாழவேண்டியவர்கள்! இளமை முதலே இயற்கையெழிலைச் சுவைக்கக் கற்றுக் கொண்டால்தான், செயற்கரிய செயல்களை எதிர்காலத்தில் அவர்களால் செய்து முடிக்க முடியும். நிலத்தின் பெருமையையும், வானின் உயரத்தையும், நெடுங்கடலின் ஆழத்தையும் அவர்கள் எண்ணி எண்ணி வியத்தல் வேண்டும். எனவே மஞ்சுதோயும் மலைகளையும் நிலங்கிழித்துஓடும் நீரோடைகளையும், செந்நெல் வளங்கொழிக்கும் வயல்களையும், அலையெறிந்து ஆர்க்கும் பெருங்கடலையும்

குழந்தை எழுத்தாளர்கள் படம் பிடித்துக் காட்டுதல் வேண்டும்.

குழந்தை இலக்கியம் என்ருல் அதில் வானத்து நிலவும், வண்ணத்துப் பூச்சிகளும், கானகத்து விலங்குகளும், கண்கவரும் பிற வைகளும் தவருமல் இடம்பெற ருகவேண்டும். அவைமட்டுமல்ல. ஓடுகின்ற கடிகாரம், உருளுகின்ற மிதிவண்டி, பாடுகின்ற வானொலி, பாய்கின்ற இராக்கெட் ஆகிய புதுமைப் பொருள்களுக்கும் குழந்தை இலக்கியத்தில் நாம் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்.

## "மதம் எனும் பேய்" பிடித்தோர்!

| | | கோடி |
|---|---|---|
| **கிருஸ்துவர் :** | | |
| பிராடஸ்டண்ட் | ... | 21·0 |
| கத்தோலிக்கர் | ... | 48.4 |
| கீழ்த்திசை வைதீக மதம் | ... | 13.0 |
| | | 82.4 |
| **முஸ்லீம்:** | | |
| சுன்னீஸ் | ... | 34.2 |
| ஷியாக்கள் | ... | 8.0 |
| | | 42.2 |
| **பவுத்தர்:** | | |
| மகாயான | ... | 24.2 |
| ஹீனயான | ... | 6.8 |
| | | 31.0 |
| **ஹிந்துக்கள்:** | | |
| (சீக்கியர், சமணர் உள்பட) | ... | 33.0 |
| ஷிண்டோயிசம் (ஜப்பான்) | ... | 3.5 |
| கன்ஃப்யூஷயனிசம் & டாவோயிசம் (சீனவில்) | ... | 40.0 |
| **யூதர்கள்:** | | |
| (இஸ்ரேல், அய்க்கிய அமெரிக்கா முதலியன) | ... | 1.5 |
| **பழங்கால மதங்கள்:** | | |
| (பர்மா, மங்கோலியா, இந்தியா, இந்தோனேஷ்யா முதலியன) | ... | 13.0 |
| சில்லறை மதங்கள் | ... | 30.0 |
| * * | | |
| **மதமற்றவர்கள்** | ... | 45.0 |

## பெண்கள் பகுதி :

# மனை மாட்சி

மூலம் :
SAMUEL SMILES.

தமிழாக்கம் :
சு. வேலு.

[வீடும் வீட்டிலுள்ளவளும் எப்படி யிருத்தல் வேண்டும்? நற்பண்புக்கு விதை ஊன்றும் இடம் வீடு; செடியாக்கும் இடம் வீடு; மரமாக்கும் இடமும் வீடு. இந்த வீட்டுக்குரிய இல்லாளின் இலக்கணம் என்ன?— இவை பற்றிய இங்கிலீஷ் கட்டுரையின் எளிய மொழிபெயர்ப்பு இது.]

"ஒரு நாட்டின் செழிப்பு என்பது அதன் வருவாயைக் கொண்டோ, அதன் கோட்டை கொத்தளங்களைக் கொண்டோ கணக்கிடப்படுவதல்ல. அந்த நாட்டில் உள்ள மக்களின் கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றைக் கொண்டுதான் அளக்கப்படுவதாகும்.'' என்றார், மார்ட்டின் லூதர்.

உலகத்திலேயே உயர்ந்த தூய்மையான பள்ளி என்பது வீடுதான். சிறந்த வாழ்க்கைக்கான நல்ல குணம், தூய பண்பு, பொறுப்புணர்ச்சி, தன்னடக்கம், நுண்ணறிவு, தொண்டு மனப்பான்மை போன்ற இன்றியமையாத நல்லறிவுகள் உண்டாகின்ற இடம் வீடுதான்.

இல்வாழ்வுக்குக் கேடு தரத்தக்க சோம்பல், சிக்கனமின்மை, பொறுப்பற்ற தன்மை போன்ற அத்துணை கெட்ட பண்புகளும் ஏற்படக் கூடிய இடமும் வீடுதான். "தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை" என்பது போல.

நல்ல பண்பும் நுண்ணறிவும் மனிதனை சிறந்தோனாக்குவது உண்மைதான். ஆனால் நல்ல குடும்பமும் தூய பண்புள்ள சிறந்த மனிதனை உண்டாக்குகிறது.

வீடு என்பது பெண்களின் ஆட்சிக்குட்பட்ட ஒரு சிறிய நாடென்று சொல்லலாம். அந்த நாட்டை ஆளக்கூடிய ராணி அந்த வீட்டின் தலைவிதான்.

அந்த வீட்டின் ஆட்சி முழுதும் அவளுக்குக் கீழ்ப்பட்டது. அவள்தான் குழந்தைகளுக்கு நிலையான சிறந்த எடுத்துக்காட்டு. தாய் எவ்வழி குழந்தைகள் அவ்வழி.

''ஒரு நல்ல தாய் நூறு பள்ளிகளுக்குச் சமம்'' என்கிறார், ஜார்ஜ் ஹெர்பர்ட் (George Herbert) என்பவர். தாயினுடைய நல்ல பண்புகளும் செய்கைகளும் தான் குழந்தைகளைக் காந்தக்கல் போன்று ஈர்க்கும் திறனுடையது.

ஒழுங்கு முறைகள், தன்னடக்கம், கூய மரியாதை, அன்பு

டைமை போன்றவைகளை உண்மையிலேயே தெரிந்து கொள்ள வேண்டிய இடம் வீடுதான்.

தாய்மை

எங்கு பெண்கள் இழிவு பட்டவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் இருக்கின்றார்களோ அந்த வீடும், அந்த நாடும், நிச்சயம் இழிவு பட்டும், தாழ்ந்தும்தான் இருக்கும். தாயானவள் இனிமை, அமைதி, மரியாதை, அன்பு, பரிவு, விட்டுக்கொடுக்கும் தன்மை போன்ற நற்பண்புகள் அமைந்து குழந்தைகள் பின்பற்றக் கூடிய எடுத்துக் காட்டாக உள்ளவளாக இருக்க வேண்டும். அதுவே சிறந்த வீடு.

வணிகனுக்கு காலந்தான் பொருள். குடும்பத் தலைவிக்கு அமைதி, ஆதரிக்கும் தன்மை, பொறுமை, முன்யோசனை,—ஆகியவைதான் பொருள்.

தாய்க்கு குழந்தைகளிடம் உள்ள அன்பு தூய்மையான அறிவு வளர்ச்சி தூண்டுகோலாக, நல்ல பண்பாட்டைத் தரக் கூடியதாக அமைதல் வேண்டும். சாதாரண விலங்கினத்திலுள்ள அன்பு ஒரு போதும் கூடாது.

வீடு என்பது தூங்கு மடமாகவும், சாப்பாட்டு விடுதியாகவும் இருக்கக்கூடாது. அங்கு சுயமரியாதை உணர்ச்சியும், அமைதியும், அன்பும் இல்லற இன்பமும் நிலவ வேண்டும்.

நல்ல பெற்றோர்களால் வளர்க்கப்படுகின்ற குழந்தைகள், - நல்ல சுற்றுப்புற சூழ்நிலையில் வளர்க்கப்படுகின்ற குழந்தைகள்— ஆசிரியர்களிடத்திலிருந்து கற்றுக் கொள்ளும் அறிவுரைகள் அதிகமிருக்காது. எவ்வளவு தான் பள்ளியில் பயின்று அறிந்த போதிலும் அக்குழந்தைகள் மாலையில் வீடு திரும்ப வேண்டியவர்களே. அவ்வீடு தூய்மையற்ற, அடக்கமற்ற, இழிவான, கெட்ட பண்பாட்டிற்கு அடிமையான பெற்றோர்களைக் கொண்டதாயிருந்தால், அக்குழந்தைகள் கற்ற கல்வியின் பயன்தான் என்ன? அவ்வீட்டில் நல்ல பண்பாடும் நல்ல குணமும் எவ்வாறு வளரும்? ஆகவே அன்பு, ஆதரவு, இரக்கம், தூய்மை, நுண்ணறிவு என்பன வற்றால் நிரம்பியிருக்க வேண்டும், எது? வீடு!

உண்மையிலேயே ஆண்கள் குடும்பக் கலையைப் பற்றிய அறிவு அற்றவர்களாகவே உள்ளனர். அறிவற்ற ஆண்கள் அறிவற்ற பெண்களையே தங்களுக்கு மனைவியராகத் தேடுகிறார்கள். அதன் பலன் என்ன? மேலும் பல அறிவற்ற குடும்பங்களை நாட்டில் உண்டாக்குவதுதான். திறமையும், மகிழ்ச்சியுமற்ற பண்பற்ற குடும்பங்கள், காரண காரியங்களில் உணர்ச்சியற்று, செலுத்துவோன் இல்லாத மரக்கலம் போல் தத்தளிக்கின்றன.

அறிவுக் கூர்மையுள்ள சிக்கனமான பெண்ணால் நடத்தப்படும் வீடு மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் சிறந்த பண்பாட்டிற்கும் உறைவிடமாக இருக்கும். அந்த வீடுதான் எல்லாவிதச் சிறப்பாலும் உயர்ந்து நிற்கும். அந்த வீடுதான் குடும்பத்தாரும் அண்டை வீட்டாரும், மாற்றாரும் கூட அன்பு செலுத்தக் கூடிய இடமாக இருக்கும். அந்த வீடுதான் வருங்காலச் செல்வங்களான குழந்தைகளின் நிலையான, சிறந்த பயிற்சி நிலையமாகும்.

நல் வீடு

எல்லா விதமான நாகரிக வசதிகளுடன் கூடிய நவீன வீடாக இருந்த போதிலும் அவ்வீட்டில்

ஒழுக்கமற்ற, அன்பற்ற, தீய பழக்கமுள்ளவர்கள் இருப்பார்களேயானல் அவ்வீடு அண்டை வீட்டாருக்கும் நாட்டுக்கும் நிச்சயம் கேடு பயக்கக் கூடியதாகத் தானிருக்கும். நல்ல பண்புள்ள, தூய, சிக்கன வாழ்வு நடத்தக் கூடிய தரமான குடும்பம் சிறு குடிசையில் இருந்த போதிலும் மற்றவர்கள் போற்ற, பின்பற்றக் கூடிய எடுத்துக் காட்டான வீடாக இருக்கும்.

ஒரு வீடு பண்புள்ளதாகவும் அன்புள்ளதாகவும், பொறுப்புள்ளதாகவும் அமைவது அவ்வீட்டுத் தலைவன் தலைவியைப் பொறுத்துத்தான். ஆக, மக்களைப் பண்புள்ளவர்களாக, உணரும் சக்தி உள்ளவர்களாக, நடைமுறையில் செயலில் கொணரக் கூடியவர்களாக— ஆக்க வேண்டும்.

முதலில் மக்கள் பண்புள்ள, தரமான வாழ்வு நடத்தச் செய்ய வேண்டும் இல்வாழ்வுக்குரிய ஒவ்வொரு துறையிலும் மக்கள் நுண்ணறிவு பெறச் செய்ய வேண்டும். இல்லறத் தூய்மையற்றவர்கள் நாகரிகமற்றவர்களே!

## கண்டு பிடித்தோர்

| பொருள் | பெயர் | நாடு | ஆண்டு |
|---|---|---|---|
| விமானம் | ரைட் சோதரர் | அமெரிக்கா | 1903 |
| சைகிள் | மாக்மில்லன் | ஸ்காட்லண்டு | 1839 |
| கெடிகாரம் | ஹுய்கென்ஸ் | நெதர்லாண்டு | 1656 |
| மின்சார பல்பு | எடிஸன் | அமெரிக்கா | 1879 |
| ஃபவுண்டன் பேனு | வாட்டர்மென் | | 1884 |
| ஃபோட்டோ | லூயி டகூரி | ஃப்ரான்ஸ் | 1839 |
| அச்சு இயந்திரம் | க்யூடன்பர்க் | ஜெர்மனி | 1450 |
| ரேடியோ | மார்கோனி | இதாலி | 1895 |
| தையல்மெஷின் | எலியஸ் ஹோ | அமெரிக்கா | 1846 |
| தந்தி | சாமுவல் மோர்ஸ் | ,, | 1837 |
| டெலிஃபோன் | கிரஹாம் பெல் | ,, | 1876 |
| தர்மாமீட்டர் | கலிலியோ கலீலி | இத்தாலி | 1593 |
| டைப்ரைட்டர் | ஷோல்ஸ் | அமெரிக்கா | 1868 |
| நீராவி எஞ்சின் | ஜேம்ஸ் வாட் | ஸ்காட்லண்டு | 1765 |
| தீப்பெட்டி | ஜான் வாக்கர் | இங்கிலாந்து | 1827 |
| எக்ஸ்ரேமெஷின் | ரோயன்ட்ஜென் | ஜர்மெனி | 1895 |
| சினிமா மெஷின் | வில்லியம் ஃப்ரீஸ் கிரீன் | இங்கிலாந்து | 1890 |

"கிருஷ்ணன்"

# 'சோஷலிசம்' என்றால் என்ன?

*['கடவுள்', 'மதம்', 'ஒழுக்கம்', 'நீதி' 'வாய்மை'- போன்ற சொற்களுக்குத் தொன்றுதொட்டுப் பல அறிஞர் பலவகைப்பட்ட பொருள்களைக் கூறி உள்ளனர். இவை பழஞ் சொற்கள். சென்ற ஒரு நூற்றாண்டில் உண்டான புதிய சொற்களுள் 'சோஷலிஸம்' முக்கியமானதொன்று. இச்சொல் பல நாடுகளிலும் மக்கள் கருத்தைக் கவர்ந்துள்ளது. அச்சொல் கவர்ச்சியை அரசியல்வாதிகள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். "ராபெர்ட் அவன்" போன்ற இலட்சிய வாதிகள்; "மார்க்ஸ்", போன்ற பேரறிஞர்; "லெனின்" போன்ற புரட்சியாளர்; "ஹிட்லர்" போன்ற அரக்கர்; யாவரும் இச்சொல்லைத் தம் வெற்றிக்கு ஆயுதமாக உபயோகித்தார்கள். இன்றும் நம் நாட்டு அரசியல் சோஷலிஸ அடிப்படையில் அமைந்ததாகக் கூறப்படுகிறது. சோஷலிஸ அமைப்புபற்றி ஆளும் கட்சி ஜயபூரில் ஆராய்ந்தது; புவனேச்வரத்தில் முடிவு செய்யப் போகிறது; ஆதலின் சோஷலிஸம் என்பதன் பொருளைத் தெளிவாக்குதல் அவசியம்; அதை ஆராய்கிறார், கட்டுரையாளர்.]*

"சோஷலிசம்" ஒரு கொள்கை. அக்கொள்கையின் அடிப்படையில் இயங்குவது 'சோஷலிஸ சமுதாயம்''. அக்கொள்கையின் அடிப்படையில் சமூகம் இயங்க வேண்டுமென்று உழைப்பவர்கள் 'சோஷலிஸ்ட்'கள்.

'சோஷலிச'க் கொள்கையின் அடிப்படைக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதற்கு முன் இன்றைய சமூகத்தின் அடிப்படைக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவது அவசியம். ஏனெனில், இன்றைய சமூகத்திலிருந்துதான் நம் கருத்துக்கள் உதிக்கின்றன; இன்றைய சமூகத்தினின்று பிறப்பதுதான் நாளைய சமூகம். ஓரளவு நேற்றைய சமூக அமைப்பையும் அறிய வேண்டும்; அதிலிருந்து தான் இன்றைய சமூகம் உண்டாகியது.

## சமூக வளர்ச்சி

சமூக வளர்ச்சி ஆற்றொழுக்குப் போன்றது. பல துளிகள்

சேர்ந்து ஆருகப் பெருகுகிறது; பல மக்கள் சேர்ந்து சமூகம் ஆகின்றனர்; சிதறுண்டு கிடந்த நீர் நிலைகள் ஒன்று சேருவது போல, சிதறுண்டு கிடந்த சிறு சமூகங்கள் ஒன்று சேர்ந்து பெரும் சமூகம் ஆகின்றன. ஆற்ருெழுக்கில் பல ஆறுகள் இடையில் வந்து சேருவது போல, புதுக் கருத்துக்கள், புது சமூக அமைப்புக்கள், புது சமூக இயக்கங்கள் ஒன்று சேர்ந்து சமூக வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன. சேர்ந்த பின் இது பழையது, இது புதியது எனப் பகுக்க முடியாது. பகுத்து, ஒரு சமூகத்தின் 'புனித'த் தன்மையைக் காக்க முயல்வது மடைமை. அவ் ஆற்ருெழுக்கைப் பயன்படுத்தி, மக்கள் அனைவருக்கும் உணவு, உடை, போன்ற வசதிகளையும், கருத்துப் பெருக்கையும், ஏற்படுத்தி வாழ்க்கையை உயர்விப்பது சமூகத்தின் அமைப்பாகிய அரசாங்கம். அணைகட்டி, கால்வாய் வெட்டி, நீரால் உண்டாகும் 'விசை'களைப் பயன்படுத்துவதுபோல, சமூகத்தின் சக்திகளை மனித குலத்தின் நன்மைக்காகப் பயன்படுத்திய பெரியோர் பலர்; தீமைக்காகப் பயன்படுத்திய சிலரும் உளர். நன்மை தீமை என்பது அவரவர் கருத்துப்படி முடிவு செய்ய வேண்டுவது.

இவ் ஆற்ருெழுக்காக அமைந்த சமூக வளர்ச்சியில் பல கட்டங்களைக் காண முடியும். நமக்குத் தெரிந்த அளவில், நாடகத்தில் சிறுசிறு கும்பல்களாக மக்கள் உணவும் இருக்க இடமும் தேடித் திரிந்த காலம்; பின்னர், ஆடுகள், பசுக்களைச் செல்வமாகக் கொண்டு வாழ்ந்த காலம்; பின்னர், ஊர், குடிவகுப்பு, குறுநிலம் எனக் குடியினராக ஆண்ட காலம்; குறு நிலத்திலிருந்து மாநிலமாகவும், மாநிலத்திலிருந்து பிற நாடுகளோடு தொடர்பு பூண்டும், பிற நாடுகளில் குடியேறியும், மக்கள் வாழ்ந்த காலம். இவை அனைத்துக்கும் தமிழ் நாட்டு வரலாற்றிலும் இலக்கியத்திலும் சான்று உண்டு.

ஐரோப்பிய, அமெரிக்க, ஆஃப்ரிக்க நாடுகளிலும் மனித சமூகம் இவ்வாறே தனித்து, சிறு கும்பல்களாக, குடியினராக, குறுநிலத்தினராக, இனத்தினராக, நாளடைவில் பெரு மக்களாக முன்னேறியுள்ளது. அவற்றில், குறிப்பிடத்தக்க ஒரு கட்டம் மக்களை மக்கள் அடிமைகொண்டு வாழ்ந்த காலம். இரண்டாவது கட்டம், அடிமைத்தளையிலிருந்து நீங்கியபோதும் நில அடிமைகளாகவும், தொழில் தளையோடும் மக்கள் வாழ்ந்த காலம். (அண்மைக் காலம்வரை தமிழ்நாட்டில் நிலவிய பண்ணையாள் முறையும், இன்றும் உள்ள தட்டான், கொல்லன், சக்கிலியன், ஓதுவான், கோயிற்பூசை புரிவோன் போன்ற சாதிபற்றிய தொழில் முறையும் இத்தளைகளோடு ஒப்பிடத்தக்கன) மூன்ருவது கட்டம், இன்றைய முதலாளித்துவ சமூகம். இம்முதலாளித்துவ சமூகத்தில் உலகத்தில் பெரும் பகுதியும் நம் நாடும் இயங்குவதால், இச் சமூக இயல்பை நிதானமாக ஆராய வேண்டும்.

## முதலாளித்துவ சமூகம்

முதலாளித்துவ சமூகம் என்ருல் என்ன? அதன் இயல்புகள் யாவை? அது எவ்வாறு இயங்குகிறது? அவ் இயக்கத்தில் தங்குதடைகள் உண்டா? அத்தடைகளை நீக்குவது எப்படி? நீக்கிய பின் உண்டாகக் கூடிய சமூகம் எத்தகையது? அதற்குக் கேடுகள் நேரிடக் கூடுமா? மனித சமூகம்

எவ்வாறு உயரும்? இவ்வினுக்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அவ்வினுக்களுக்கு விடைகளைத் தருவன சென்ற ஒரு நூற்றுண்டாக வெளிவந்த பல்லாயிரக் கணக்கான சமூக-விஞ்ஞான நூல்கள் என்ருல் அது மிகையாகாது.

முதலாளித்துவ சமூகத்தை அறிவதற்கு "முதல்" என்பதை முதலில் அறிய வேண்டும். 'முதல்' என்பது 'பொருள்'வகைகளில் ஒன்று. பணம், நிலம், வீடு, இயந்திரம் போன்ற பல வகைத் தோற்றங்களைக் கொண்டது. பொருள் நூலில் 'முதல்' எனக் கொள்ளப்படுவது உபயோகப் பொருள்களான உணவு, ஆடை, அணிகலன், போன்றவை அன்று. எத்தகைய பொருள் மீது உழைப்பைப் பாய்ச்சி அதனுல் பிற உபயோகப் பொருள்களை உண்டாக்குகிருேமோ அதுவே பொருள் நூலார் 'முதல்' என்பது. எடுத்துக் காட்டாக, நிலத்தில் உழைத்து உணவையோ, ஆடைக்கு வேண்டிய பருத்தியையோ, இரும்பு நிலக்கரி போன்ற சுரங்கப் பொருள்களையோ உண்டாக்குவதால் நிலம் 'முதல்' ஆகும். பணத்தைக் கடனுகக் கொடுத்தோ, வேறு வகையில் முதலீடு செய்தோ, ஊதியம் பெற முடியுமாதலால் பணம் 'முதல்' ஆகும்.

ஒரே பொருள் ஒரு இடத்தில் 'முதல்' ஆகவும் மற்ருெரு இடத்தில் "அழி பொருள்" ஆகவும் அமையலாம்; ஒரு மோட்டார் காரை வாடகைக்கு விட்டு அதில் பிறர் உழைப்பைப் பாய்ச்சி ஊதியம் பெறும்போது அது 'முதல்' ஆகும். ஒருவனுடைய இன்பத்துக்காக ஓட்டும்போது, அது 'முதல்' ஆகாது. முதலின் இயல்பு ஊதியம் பெறும் நோக்கத்திற்காக உபயோகிப்பது. (ஊதியம் இலாபத்திற்குப் பதில் நஷ்டத்தில் முடியலாம். ஆயினும் ஊதிய நோக்கம் இருப்பதால் அப்பொருள் முதல் ஆகும்).

அம் 'முதல்' யாரிடம் இருக்கிறதோ அவர் 'முதலாளி'. அம் 'முதலாளி' தனி ஒருவராகவோ பலராகவோ இருக்கலாம். சமூகம் முழுமையுமாக இருக்கலாம். தனி முதலாளிகள் உள்ள சமூகம் 'முதலாளித்துவ சமூகம்'. முதலாளித்துவ சமூகத்தின் உறுப்பினர் எல்லோருமே 'முதலாளிகள்' அன்று! இருக்கவும் முடியாது. சிலரிடம் மட்டும் 'முதல்' இருக்கும்; பலர் அம் முதலில் தம் உழைப்பைப்பெய்து பொருளை உண்டாக்குவர். அவ் உழைப்பைப் பெய்பவர் 'தொழிலாளிகள்' எனப்படுவர். முதலாளியும் தொழிலாளியும் கலந்து, முதலை இயக்கிப் பொருளை உண்டாக்குவது "முதலாளித்துவ சமூக" அமைப்பு.

ஆக, முதலாளித்துவ சமூகத்தின் முதல் இயல்பு அச்சமூகம் முதலாளி-தொழிலாளி என இரு பிரிவுகளாக அமைந்திருப்பது.

'முதல்' வைத்திருப்பவர் ஏன் முதலீடு செய்கின்றனர்? ஏன் அதைக்கொண்டு அதில் பலருடைய உழைப்பைப் பெய்து 'பொருள்' உண்டாக்குகிருர்கள்? முதலாளித்துவ சமூகம் ஏன் இயங்குகிறது? இவ்வினுக்களுக்கு விடை ஒன்றே; "இலாப நோக்கம்". முதலாளித்துவ சமூகம் இயங்குவது சமூகத்தில் பலருக்கு உழைப்பால் வாழ வகை செய்ய வேண்டும் என்ற உபகார எண்ணத்தால் அன்று. பொருள்கள் மலிந்து, சமூகத்தில் உணவும், உடையும், வீடும், கலையும், புத்தகமும், சுகாதாரமும் பெருக வேண்டும் என்பதற்காக அல்ல. முதலீடு செய்து அம்முத

வீடு செய்தவர் இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே முதலாளித்துவ சமூகம் இயங்குகிறது.

இதனுல், முதலாளிகள் பரோபகார எண்ணம் அற்றவர்; கலை வளர்ச்சியில் கருத்து அற்றவர்; என்று சொல்லவில்லை. பிறருக்கு உதவி செய்வதால் தம் செயலுக்குக் கழுவாய் காண விரும்புவார் உளர்; இம்மையிலும் மறுமையிலும் நல்ல பேறு காண விழைவார் உளர். கலை இன்பம் நுகர்வார் உளர். ஆனுல், அவர்களுடைய முதலீடு இவற்றைக் காண அன்று; வட்டியும், பங்கு லாபமும், வாடகை - குத்தகையுமே இவர்கள் வாழ்க்கையை இயக்குகின்றன; அவற்றுல் வந்த வருவாயே இம் முதலாளிகளைப் பிற செயல்களில் (நல்லவையோ அல்லவையோ) ஈடுபடுத்துகிறது. 'வருவாயின் மூலம் எது?' என்பதைக் கொண்டு ஒருவருடைய முதலாளி இயல்பை அறியலாகும்.

முதலாளித்துவ சமூகத்தின் இரண்டாவது இயல்பு அச்சமூகத்தின் முதல் இலாப நோக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இயங்குவது.

இம் முதலீட்டின் விளைவு என்ன? யாரிடம் 'முதல்' இருக்கிறதோ அவர் பிறருடைய உழைப்பை விலைக்கு வாங்க முடியும். 'முதல்' இல்லாமல் 'உழைப்பு' மட்டும் வைத்திருப்பவர் தம் உழைப்பைப் பயன்படுத்திப் பொருளை உண்டாக்க முடியாது. அவ்வாறே, 'உழைப்பு' இன்றி 'முதல்' மட்டும் பொருளை உண்டாக்காது; எனினும், அம் 'முதல்' உபயோகப்படுத்தாவிட்டாலும் முன்னர் உண்டாக்கப்பட்ட பொருளையும், பிற நாடுகளிலும் பிற இடங்களிலும் உண்டாக்கப்பட்ட பொருளையும் விலைக்கு வாங்க உதவும்; தொழிலாளியின் 'உழைப்பு' உபயோகப்படுத்தப்படாவிட்டால் எதையுமே விலைக்கு வாங்க உதவாது. 'முதல்' இன்றி, உழைப்பை மட்டும் வைத்திருப்பவன் சாகவேண்டியதே. வேருெரு வகையாகக் கூறுமிடத்து, 'முதல்' பல மதிப்புகளின், விலைக்கு வாங்கக் கூடிய சக்திகளின் தொகுதி; 'உழைப்பு' தொழிலாளியின் திறமையின் தொகுதி. 'முதலாளி' முதலீட்டின் வருவாயாலும் அன்றி முதலைக்கொண்டும் சிலகாலம் வாழ முடியும்; சமூகத்துக்கு வேருெரு பயனையும் தர முதலாளி கடமைப்பட்டவன் அல்ல. 'தொழிலாளி' தன் தொழிலைக் கொண்டு சமூகத்துக்குப் பயன் தந்து தான்பெறும் ஊதியத்தால் வாழ வேணடியவன். 'முதலாளி'யால் சமூகத்துக்குப் பலன் உண்டாகவேணடும் என்பது அவசியமில்லை (பல 'முதலாளி'கள் பயன்பட வாழ்கின்றனர் என்பது உண்மையே-பயன்படாவிட்டாலும் அவர்கள் வாழ முடியும்). 'தொழிலாளி'கள் சமூகத்துக்குப் பயன்படவே வாழக் கடமைப்பட்டவன். ஆக, முதலாளித்துவ சமூகத்தின் மூன்ருவது இயல்பு சமூகத்துக்குப் பயன்பட வாழாதவரைத் தாங்கி இருக்க வேண்டிய நிலைமை.

அது மட்டுமன்று. 'முதல்' மட்டும் கொண்டு உழைப்பை நல்காது வாழ்வோருக்கு உள்ள இச் சக்தியால், அவர் சமூகத்தில பெருமை பொருந்தியவராகக் கருதப்படுகின்றனர். அதனுல் முதலுக்கு உயர்வும் உழைப்புக்குத் தாழ்வும் உண்டாகிறது. பெரும்பாலும், உழைப்பவர் தம் வயிறு வளர்க்க இன்னல் படுவதும், முதல் கொண்டவர் பல ஆடம்பரப்பொருள்களுடன் வாழ்வதும் முதலாளித்துவ சமூகத்தின் இயற்கை நெறி ஆகிறது.

மிகச் சிறுபான்மை தொழிலாளிகள் தம் திறமையால் முதலாளிகளைப்போல் வாழ்கிருர்கள்; நாளடைவில் முதலாளிகளாகி விடுகிருர்கள். இவற்ருல் செல்வம் ஒருபுறம் குவிய, வறுமை மற்ருெரு புறம் வளர்கிறது. ஏற்றத் தாழ்வுகள் அவற்றிடையே உள்ள வித்தியாசங்கள் நாளுக்கு நாள் அதிகம் ஆகின்றன.

முதலாளித்துவ சமூகத்தின் நான்காவது இயல்பு, ஒரு சார் செல்வம் குவிவதும் மற்ருெரு சார் வறுமை வளர்வதும் ஏற்றத் தாழ்வுகள் அதிகரிப்பதும் ஆகும்.

இவற்ருல் உண்டாகும் சமூக இழுப்பு - பறிப்புகளை உணர்ந்து சமன் செய்ய அரசாங்கம் முயல்கிறது. அம்முயற்சி வரி விதிப்பு, சமூக நலன், தொழிலாளர் பாதுகாப்பு முதலிய பல வழிகளில் நமக்குத் தென்படுகிறது. அவ்வழிகள் அனைத்தும் நோய் முதல் நாடாமல், நோயின் புறச்சின்னங்களைத் தணிக்கும் வாய் நாடுவது ஆகும்.

உலகில் பல நாடுகளில் இம்முதலாளித்துவ சமூகங்கள் தோன்றின. இலாப நோக்கம் கொண்டவை ஆகையால், இச்சமூகங்கள் பிறநாடுகளில் தம் பொருள்களை விற்கவேண்டியும் தம் முதலை ஏற்றுமதிசெய்யவேண்டியும ஏகாதிபத்தியங்களைத் தேடின. இத்தேட்டில் மாறுபாடுகளும் முரண்களும் உண்டாகி இந்நாடுகளுக்குள் பன்முறை போர் மூண்டது. ஒரு நாட்டு மக்களை பிறநாட்டு முதலாளிகள் சுரண்டும் நிலைமை உண்டாயிற்று. மனித இயல்புகள் குன்றி மிருக இயல்புகள் மிகுந்தன.

முதலாளித்துவ சமூகத்தின் ஐந்தாவது இயல்பு ஏகாதிபத்தியங்கள், போர், சுரண்டல் யாவும். சோஷலிசக் கொள்கை வளர்ச்சியால் சென்ற சில ஆண்டுகளாக ஆசிய, ஆஃப்ரிக நாடுகளில் இக்கொடுமைகள் ஓரளவு குறைந்து வருகின்றன.

இம்முதலாளித்துவ சமூகத்தினின்று சில நாடுகளில் பிறந்ததும், நம் நாட்டில் பிறக்கப்போவதும் சோஷலிஸ சமூகம்.

## சோஷலிச சமூகம்

சோஷலிஸ சமூகம் பழைய சமூகங்களின் குணங்களை ஏற்றுக்கொண்டு குற்றங்களை நீக்கித் தன் தனி இயல்புகளை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தும். ஆதலின், இன்றுள்ள முதலாளித்துவ சமூகத்தின் குணங்களையும் குற்றங்களையும் நாடுவோம். அவற்றுள் மிகை நாடுவோம்.

1. சமூக வளர்ச்சிக்கு 'முதல்' வேண்டும்; 'முதலீடு'செய்து அம்முதலீட்டில் உழைப்பைப் பெய்து பொருள் ஆக்கம் உண்டாக்க வேண்டும். இது முதலாளித்துவ சமூகம் ஏற்பட்டபின், அச்சமூக வளர்ச்சியிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடம். அதற்காக முதலீடுசெய்யும் தனி முதலாளிகளும் அம் முதலீட்டிற்குத் தம் உழைப்பை நல்கும் தொழிலாளிகளுமாக 'இரு வேறு உலகத்து இயற்கை' வேண்டியதில்லை. சமூகமே அம்'முதல்' தேடிக்கொள்ள முடியும். தனி முதலாளிகள் முதலீடுசெய்து பொருள் இயக்குவதைவிடச் சிறந்த முறையில் தொழிலை இயக்க முடியும்; பொருள் உற்பத்தி செய்ய முடியும். அதனுல், மக்களுக்கு ஊக்கம் தந்து தொழில் வளர்ச்சிக்கு வேகம் தர முடியும். சோஷலிஸ சமூகத்தில் முதலாளி – தொழிலாளி என்ற பிரிவினை இராது; சமூகம் ஒன்றுபட்டுத் திகழும்.

2. பொருள் ஆக்கம் மக்கள் பயன் கருதி இயங்கும்; இலாபம் மட்டும் கருதி அன்று. அதனால், இலாபம் வேண்டியதில்லை என்பது பொருள் அன்று. நஷ்டத்தில் இயங்கினால், தொழில்களை விரைவில் மூடவேண்டிவரும். அதனால் சமூகத்துக்குக்கேடு உண்டாகும். உற்பத்திப் பெருக்கு இன்மையோடு வேலை இன்மையும் உண்டாகும். 'தொழில் வளர்ச்சிக்கு இலாபம் தேவை. அவ் இலாபத்தில் ஒரு பகுதியைத் தொழிலில் முதலீடு செய்து பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்,' என்பதும் முதலாளித்துவத்தின் சிறந்த படிப்பினை. ஆனால், அவ் இலாபம் சமூகம் முழுவதற்கும் சார்ந்தது; தனி மனிதனுடையது ஆகக்கூடாது என்பது சோஷலிஸம். சமூகத்துக்கு அவசியமானால், ஊதிய விகிதம் கருதாமல் முதலீடு செய்யவேண்டும் என்பது சோஷலிஸம். முதலாளித்துவ நாடுகளிலும் இத்தகைய முதலீடுகள் பல உண்டு. எடுத்துக் காட்டாக, பொதுத் துறையில் ஒரு பூங்காவோ, பள்ளிக்கூடமோ ஏற்படுத்தும்போது அதனால் உண்டாகும் ஊதியத்தைப்பற்றிச் சமூகம் சிந்திப்பதில்லை; ஆனால், அந்தப் பூங்காவுக்குப் 'பஸ்' செலுத்தும் முதலாளியும் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குப் புத்தகம் அச்சிடும் முதலாளியும் அவ் அவற்றால் உண்டாகும் ஊதியத்தைப்பற்றி நிச்சயம் சிந்தித்துத்தான் 'பஸ்' செலுத்துவார்; புத்தகம் வெளியிடுவார். முடிவில், பொதுத் துறை 'நஷ்டத்திலும்' தனித் துறை 'இலாபத்திலும்' இயங்கும். சோஷலிஸ சமூகத்தில் தனி ஒருவரின் இலாப நஷ்டங்களுக்கு இடமில்லை. அச்சமூகத்தில், பூங்காவையும் பள்ளிக்கூடங்களையும் போலவே, 'பஸ்'களும் புத்தகங்களும் சமூகத்தின் உடைமை ஆகும். உற்பத்தி சாதனங்களும் வினியோக சாதனங்களும் சமூகத்துக்கே சொந்தமான பொது உடைமைச் சமூகம் 'சோஷலிஸம்' ஆகும். இதை நீக்கிய சோஷலிஸம் இல்லை. பொருள் உற்பத்தி மக்கள் தேவைகளைக் கருதியே அன்றி இலாபம் கருதி நிகழாது.

3. சோஷலிஸ சமூகம் வீணில் உண்டு களித்திருப்போரைத் தாங்காது. தம் முதல் கொண்டு வட்டி, வாடகை, பங்கு லாபம் பெறும் சிறுபான்மை மக்கள் அச் சமூகத்தில் இரார். அவர்கள் உள்ளவரையும் அவர்களைச் 'சட்டை' செய்யாது; அவர்களுக்குப் பெருமை தராது. மக்கள் அவர்களைப் புல்லராக, புல்லுருவிகளாக, நினைப்பார்கள் அதற்கு மாறாக, தொழிலாளிகளைச் சமூகம் கவுரவிக்கும். தொழிலாளிகளுடைய குழந்தைகளின் நலனும், ஓய்வுபெற்ற தொழிலாளர் தம் முதுமையிலும், நோய், நொடிவு, தொழில் வாய்ப்பட்ட நலிவு காலங்களிலும் சமூகம் அவர்களைத் தாங்கும். பழஞ்சுமை கழிய நிகழ் காலமும் எதிர் காலமும் தொழிலாளருடையது என்ற எண்ணம் எங்கும் நிலவும்.

4. சோஷலிஸ சமூகத்திலும் ஏறத்தாழ்வுகள் உண்டு. அவை ஒருவருடைய தொழில் திறமையை அளந்து சமூகம் தரும் ஊதியத்தால் உண்டாகும் ஏறத்தாழ்வே அன்றி, அவர்கள் 'முதல்' உடைமையாலும் அம் முதலீட்டின் ஊதியத்தாலும் உண்டாவன அன்று. எடுத்துக் காட்டாக, நல்ல எழுத்தாளனோ, இரும்பு காய்ச்சும் தொழிலாளியோ, கட்டடவேலை நிபுணனோ, ஏனைய தொழில் அறியாத வேலை

யாளைக் காட்டிலும் இருபது பங்கு அதிக ஊதியம் பெறலாம். அவ் ஊதியத்தைக் கொண்டு, நல்ல ஆடை அணிகள், உல்லாச வாழ்க்கை வாழலாம். நல்ல வீடு, மோடார் கார், குளிர்ப் பெட்டி போன்ற ஆடம்பரங்களோடும் கூட இருக்கலாம். ஆனால், அந்த ஊதியத்தில் ஒரு பகுதியை மீதம் பிடித்து, வீடு கட்டி வாடகைக்கு விட்டோ, தொழிற்சாலைகட்டி அதில் பிறரை உழைக்கச் செய்தோ, வாடகைப் போக்குவரத்து சாதனம் கொண்டோ பிற மக்களுடைய உழைப்பின் பயனை அபகரித்து வாழமுடியாது. சோஷலிஸ சமூகத்தில் ஒருவனுடைய செல்வம் 'முதல்' ஆகாது. சோஷலிஸ சமூகத்தில் 'முதல்' குவியாது; வறுமையும் வளராது. ஏற்றத் தாழ்வுகள் அவரவர் உழைப்பின் ஊதியத்தையே பொறுத்தன ஆகும்.

(5) மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் வழக்கம் இல்லாத போது, ஒரு நாட்டார் மற்றொரு நாட்டில் முதலீடு செய்வதும் அம்முதலீட்டையும் முதலீட்டால் சிறுபான்மையோர் பெறும் ஊதியத்தையும் காக்கப் போர் மூளுவதும் அநாகரிகமான செயல்களாக மக்கள் கருதுவர். பொருளாதார மந்தங்களும் இரா. போர் அழிவு: சோஷலிஸம் ஆக்கம். வியாபார மந்தமும் வேலை இன்மையும் சமூகத்தை வாட்டும் கொடுமை: சோஷலிஸம் அதற்கு மருந்து.

சோஷலிஸத்தின் இயல்புகள் இவ்வாறு முதலாளித்துவத்திலிருந்து உதித்து அம்முதலாளித்துவ சமூகத்தை முன்னேற்றுபவை. இனி, சோஷலிஸ சமூகத்தை ஏற்படுத்துவதற்கு உரிய வழிகளை ஆய்வோம்.

## சோஷலிச சமூகம் எவ்வாறு உண்டாகும்?

முதலாளித்துவ சமூகங்களிலிருந்து ருஷியா, யூகோஸ்லாவியா, சீனு, முதலான நாடுகளில் சோஷலிஸம் உண்டாயிற்று. சோஷலிஸத்தின் சில பண்புகள் எகிப்திலும் இஸ்ரேலிலும் கூபாவிலும் தலை எடுக்கத் தொடங்கின. பொதுவாகக் கூறுமிடத்து, இந்நாடுகளில் எல்லாம் ஆயுத பலம் கொண்ட புரட்சிவாதிகள் சமூக மாறுதலுக்குக் காரணமாக இருந்தனர். பல புரட்சிகள் தோல்வியுண்டபின், பலர் மாண்டபின், கால் அடைவில் ஒரு புரட்சி வெற்றி பெறலாம். வெற்றிகளைக் கொண்டு மட்டும் முடிவுக்கு வரக்கூடாது; தோல்வியுற்ற புரட்சிகளையும் ஆய்ந்து, காரல் மார்க்ஸ் கண்ட முடிவுகள் இரண்டு:—(i) புரட்சி உண்டானதும் புரட்சி செய்த குழு சமூகத்துக்குத் தலைமை பூணவேண்டும். (ii) முன்பிருந்த மனப்பான்மையில் வளர்ந்து திளைத்த அலுவலாளரை அகற்றிப் புது சமூகத்துக்கு இணைந்த மனப்பான்மை உள்ளவரை அலுவலாளராக நியமிக்கவேண்டும்; புது மனப்பான்மையை வளர்க்கவேண்டும். இம்முடிபுகள் மக்கள் ஆட்சி வளராத, அலுவலாளர் நிர்வாகம் முதிராத, 19-ம் நூற்றுண்டுக்குப் பொருந்தியது. மார்க்சுக்குப் பின் புரட்சியை வெற்றிகரமாக முடித்தது மட்டுமின்றி புது சமூகத்துக்கும் அடிகோலிய லெனின் இதே முடிபுகளின்மீது தம் அதிகாரத்தை நிலை நாட்டினர். புரட்சியின் போது தம் கொள்கைகளைப் பற்றி ஒரு நூலும் இயற்றினர்.

இரண்டாம் உலகப் போர் முடிந்ததும், ஆயுத பலத்தால் பல நாடுகளிலும் புரட்சி உண்டா

கியது. புது சோஷலிஸ சமூகங்கள் உண்டாயின; அவை இன்னும் நிலைபெறவில்லை. நம் நாட்டில் ஆயுத பலம் இல்லாமல், மக்கள் மனதைத் திருத்தி, வாக்குப் பெட்டியை நம்பி, சோஷலிச சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று நம்புகிறோம். அண்மையில் ஓரளவு, கேரளாவில் இரண்டு ஆண்டுகள் அத்தகைய ஆட்சி நிலவியது. பின் குன்றிப் போயது. நம் நாட்டில், ஆயுத பலமின்றி சோஷலிசம் உண்டானால், அது போற்றற்குரியதே. உலகிற்கே எடுத்துக்காட்டு ஆகும். ஆனால், அது மேற்கூறிய அடிப்படைக் கருத்துக்களை விட்டுக் கொடுத்த சோஷலிசமாக இருக்கக் கூடாது.

பலத்தால் உண்டாகக் கூடிய எந்த சமூகமும் மனித உரிமைகளைத் தகர்க்க முயலும். ஆட்சியிலுள்ள சிறு குழுவினர் தம் ஆட்சியை நீடிக்க முயல்வர். இவ் இயற்கை சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் ஒருங்கே பொருந்தும். தலைவர்கள் தமது அரசியல் விவாதங்களிலும், பதவி மோகத்திலும் மேலும் மேலும் ஈடுபடும்போது, அலுவலாளர் ஆட்சி வலுக்கும்; அது மக்களுக்கு இன்னல் விளைவிக்கும். இது சோஷலிச ஆட்சி முறைக்கு (முதலாளித்துவ ஆட்சிமுறைக்கும் கூட) நேரிடக் கூடிய தீங்கு. சிறு தீங்கையும் முதலாளித்துவ நாடுகளும், அவற்றின் பிரசார நிபுணரும், பெரிதுபடுத்தி சோஷலிச நாடுகளில் உள்ள மக்களுக்கு தம் அரசாட்சியின்மீது நம்பிக்கை இல்லாமல் செய்ய முற்படுவார்கள். ஆதலின், சோஷலிச அரசாங்கம் மக்கள் நலனில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். தன் குற்றம் காண வலிந்து முன்வர வேண்டும். முதலாளித்துவ அரசாங்கம் சிறுபான்மை முதலாளிகள் நலனை மட்டும் கவனித்தல் போதுமானது. சோஷலிச அரசாங்கத்தின் பொறுப்போ சாலப் பெரிது.

சிறப்பாக, மக்கள் உரிமைகளை சோஷலிச அரசாங்கம் வளர்க்க வேண்டும். மக்களுக்கு உரிமை உணர்ச்சிகளை ஊட்டவேண்டும். உரிமை உணர்ந்த மக்கள் பிறர் ஏவுதல் இன்றித் தம் கடமைகளையும் பேணுவர். மக்கள் தம் கடமைகளைக் கடைப்பிடிக்கச் செய்வதற்கு அரசாங்க ஆணை எதுவும் அந்நிலையில் வேண்டி இராது. இதையே மார்க்ஸ் 'இறுதியில் அரசாங்க ஆணை தேய்ந்து ஒழியும்' என்றார்.

உரிமைகள் என்றால் அனைவருடைய உரிமைகளும் சேர்ந்த தொகுதி. சிலருடைய உரிமைகள் மட்டும் அன்று. பண உரிமை, முதலீடு செய்யும் உரிமை, நில உரிமை, பண்டங்களை உற்பத்தி செய்யும் உரிமை, பண்டங்களை விற்கும் உரிமை, சொத்து உரிமை, வாரிசு உரிமை-போன்ற பல உரிமைகள் நம் நாட்டுச் சட்டங்களால் பாதுகாக்கப்பட்டு, சமூக நலன் கருதி வரையறுக்கப் பட்டு வருகின்றன. ஆனால், ஊன்றிப் பார்க்கும் போது அவ் உரிமைகள் சிறுபான்மையோருக்கே பயன்படுகின்றன. பெரும்பான்மையோருக்கு வேண்டிய போதிய உணவு பெறும் உரிமை, தொழில் செய்யும் உரிமை, குழந்தைகளுக்கும் முதியவருக்கும் கல்வி பயிலும் உரிமை, வீட்டு வசதி பெறும் உரிமை, சுகாதார வசதி பெறும் உரிமை-இவை நம் சமூகத்தில் இல்லை. முதிர்ந்த முதலாளித்துவ சமூகமாகிய இங்கிலாந்தில் சென்ற 50 ஆண்டுகளாக இவ் உரிமைகள் வளர்ந்து வந்துள்

என. சில ஐரோப்பிய நாடுகளிலும் அவை உண்டு. அங்கு, யாவருக்கும் வேண்டிய அளவு உணவுக்குப் பொருள் வருவாய் இன்றேல் சமூகம் அவ்வருவாயைத் தரும். எந்தக் குழந்தையும் பணமுடையினுல் பள்ளிக்கூடம் செல்ல இயலாது என்ற நிலைமை இல்லை. நோய் நொடியால் வருவாய் நின்று போகாது. மருத்துவச் செலவும் இல்லை. இவை அடிப்படை உரிமைகள். அவற்றை மக்கள் உணருவதால் அவ் உரிமைகளைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளையும் ஆற்ற வேண்டுமென்ற பொறுப்பு உணர்ச்சி உண்டாகிறது. இது, சோஷலிச வளர்ச்சிக்கு அறிகுறி.

### முடிவு

சுருங்கக் கூறுமிடத்து, "உழைப்புக்குத் தகுந்த ஊதியம்" என்பது சோஷலிசம். ஒவ்வொருவரும் தம் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவதற்குத் தடையாக இருப்பது முதலுக்கு ஊதியமாகச் சில மக்கள் பெறும் வட்டி, வாடகை, பங்கு இலாபம் போன்றவை. அத்தகைய ஊதியமுறை சமூகத்தில் உள்ளவரை, வேறு யாருக்கோ "உழைப்புக்குத் தகுந்த ஊதியம்" கிடைக்கவில்லை என்பதுதானே பொருள்! மிக்க இளமை, முதுமை, நோய் போன்ற காலங்கள் தவிர, பிற காலங்களில், பிறர் உழைப்பால் வாழ்பவர் அற்ற சமூகம் சோஷலிச சமூகம். இதுவே 'சோஷலிச சமூகம்'. இது ஒரு நாளில் ஏற்படுவது அன்று. நாம் உழைத்துப் பெற வேண்டுவது. நாம் அச் சமூகத்தை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும், ஒவ்வொரு திட்டத்தையும், ஒவ்வொரு சட்டத்தையும், ஒவ்வொரு செயலையும் இவ் உரைகல்லில் தேய்த்துப் பார்க்க வேண்டும். அப்போதே நாம் சோஷலிசப் பாதையில் முன்னேறுகிருேமா, பின் வாங்குகிருேமா என்பது புலனுகும்.

---

*"உறுதியான எண்ணங்கள் யாவும் பெரும்பாலும் நல்ல உடற்கட்டுள்ளவர்களிடமே உருவெடுக்கின்றன. உடல் நலமுள்ளவர்களே, நாட்டை நன்ருக ஆளும் ஆற்றல் படைத்தவர்களாயிருக்கிருர்கள். இவர்களே தம் கடமையைச் செய்வதில் சிறந்தவர்களா யிருக்கின்றனர்."*

—R. W. எமர்சன்.

* * *

*"வறுமையைக் கண்டு நாம் அஞ்சினல் அது போக்கிரியாகிவிடும்; அஞ்சாமல் மனித உணர்வுடன் அதை எதிர்த்து நின்ருல் அது நமக்குப் பணிந்து விடும்."*

—தாக்கரே.

புலவர் தே. ப. சின்னசாமி

# நிறையிசை தந்த நிறைமாண்பே!

## (ஓர் மறுப்பு)

*[சிலப்பதிகாரத்தின் கோவலன் பாடியது 'குறை இசை' என்றார் குழந்தைவேலு. அன்று, அன்று, 'நிறை இசையே' என்கிறார், புலவர் சின்னசாமி, இக்கட்டுரையில். எல்லாத் தமிழ் இலக்கியங்களையும் இதுபோல் மனிதக்கண் கொண்டு (கடவுள் கண் கொண்டின்றி) ஆராய்ச்சி உரை கல்லில் (பக்திச் சேற்றில் இன்றி) உரைத்துப் பார்க்கும் இலக்கியப் பண்பு வளர வேண்டும். புராண—இதிகாச இலக்கியங்களையும் இவ்வாறே ஆராய்வதுதான் ஆறறிவு படைத்த மனிதருக்கு அழகு.]*

''குறையிசை தந்த நிறை மாண்பு'' என்ற இலக்கியப் பகுதிக் கட்டுரை (குத்தூசி ஊசி—2 குத்து—1)யில் கட்டுரையாளர் மு. குழந்தைவேலு அவர்கள் செஞ்சொற் புலவனும் இன்றமிழ் ஆசான் இளங்கோவடிகளின் நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரத்தில் குறையிசை கண்டு குறையும் நிறைமாண்பே என்று விளக்கிப் போந்தார்!

அன்னவர் கண்ட குறையிசை குறையிசையன்று; நிறையிசையே என்பதை விளக்கி விளக்கீடு வைப்பதே இக்கட்டுரை.

குறையில்லா ஒன்றில் குறை கண்டு அக்குறைபாட்டிற்கு மெழுகீடு செய்து குறையும் நன்மைக்கே என்று அமைதி கூறுவது சரியல்ல.

### கட்டுரையாளர் காட்டும் குறை

''சிலப்பதிகாரத்தில் மாதவியின் குறைபட்ட இசைப் பயிற்சியோ அல்லது கோவலனின் நிறைவு பெறாத இசைக் குறைவோதான் கண்ணகியின் சிலைக் கல் உருவில் கனகவிசயரின் கழுத்தை நெறித்தது''

''கோவலன் யாழில் பாடியது மாதவிக்கும் கானல்வரியாகப் படவில்லை. வேறொருத்தி மேல் கொண்ட காமக்குறிப்புணர்த்தும் வரிகளாகவே தெரிந்தது. இங்கு கோவலன் இசையில் குறையிருக்க வேண்டும். அல்லது மாதவிக்குத் திறம்படப் பகுத்துணரும் ஆற்றல் முதிர்ச்சி பெறாததாக இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்று தவிர வேறு ஒன்று இருக்க வழியில்லை,'' என்பதாம்.

### மறுப்புரை

முதற்கண் ''மாதவியின் குறைபட்ட இசைப் பயிற்சியோ'' என்கின்றார்.

மாதவியின் இசைப் பயிற்சி குறைபட்டது என்று கூறுவதற்

குரிய சான்று சிலப்பதிகாரத்தில் யாண்டுமில்லை. மாருக அவளது இசை நிறைவையே அடிகள் பல் லாற்ருன் சிறப்பித்துப் போந் தார் என்பது வெள்ளிடைமலை. மாதவி,

"ஆடலும் பாடலும்
அழகுமென்றிக்
கூறிய மூன்றின்
ஒன்று குறைபடாமல்
ஏழாண்டியற்றியோ
ரீரா ருண்டிற்
சூழ்கழன் மன்னற்குக்
காட்டல் வேண்டி
இருவகைக் கூத்தி
னிலக்கண மறிந்து
பல்வகைக் கூத்தும்
விலக்கினிற் புணர்த்தும்
பதிஞேராடலும்
பாட்டும் கொட்டும்
விதிமாண் கொள்கையின்
விளங்க வறிந்தால்
காடலும் பாடலும்
பாணியும் தூக்கும்"
(அரங் 8-10)

கூடியவள் என்றும்,

"யாழுங் குழலுஞ் சீருமிடறும்
தாழ்குரற்றண்ணுமை
யாடலொடிவற்றின்
இசைந்த பாடலிசையுடன்
படுத்தவள்" (அரங் 26-28)

என்றும் காட்டுகின்ருர் ஈடற்ற இளங்கோவடிகள்!

"தேசிகத் திருவிஞேசை
யெல்லாம் மாசின்றுணர்ந்த
அறிவினனுகிய நாத்தொலை
வில்லா நன்னூற் புலவ
னிடத்து"

இசை கற்று "ஆடல் பாடல் இசையே தமிழே"யாகி நின்ற கலையரசி மாதவி குறைபட்ட இசைப்பயிற்சி யுடையள் என்று யாங்ஙனம் கூற இயலும்?

கட்டுரையாளரே,

"எண்ணும் எழுத்தும் இயல்
ஐந்தும் பண் நான்கும்
பண்ணின்ற கூத்துப்
பதினொன்றும் மண்ணின்மேல்
போக்கினல் பூம்புகார்ப்
பொன்தொடி மாதவிதன்
வாக்கினள் ஆடு
அரங்கின் வந்து"

எனும் உரையால் மாதவி புவி முழுதும் உள்ளோர் எல்லாம் புகழ்ந்து பேசும்படி ஆடியும் பாடியும் காட்டி உலகம் போற்றும் சிறப்புப் பெற்ருள் எனக் கூறு கிருர்" என்பதை எடுத்துக் காட்டியவர் முன்னுக்குப் பின்முரண் பட்டும், மயங்கியும் கூறியது எற் றுக்கோ?

அடுத்து, "கோவலனின் நிறைவு பெருத இசைக் குறைவோ?" என்றும், "கோவலன் இசையில் குறை இருக்க வேண்டும்" என்றும் கட்டுரையாளர் கூறுகின்ருர். கோவலன் இசையில் குறையிருக்க வேண்டும் என்று கூறுகின்றவர், இவ்விடத்தில், இன்ன முறையில், இந்த இசையில் குறையென்று பகுத்துக் காட்டாமல் சென்றிருக்கின் ருர்.

முத்தமிழ் இயலை முழக்குகின்ற இளங்கோவடிகளின் காப்பியத்தில் இத்தகைய இசைக் குறைவை அமைப்பரோ? அதுவும் காப்பியத் தலைவனும் நுண் கலை வல்லுநன் கோவலனை அம் முறையில் படைப்பரோ?

கோவலன், ஒப்புயர்வற்ற ஒண்டமிழ் இசை வல்லவன்; நுண்கலை நுகர்ச்சி யுடையவன். தேமதுரத் தமிழோசை யாழிசை மன்னன், "எல்லாப் பாட்டுக்களும், எல்லா இசைகளும், எல்லாப் பண்களும், இருவகைத் தாளங்களும், எழுவகைத் தூக்கு

களும் அமைய யாழ்ப்பாடலும், குழலின் பாடலும், கண்டப் பாடலும், இயைந்து நடக்கிறபடி கேட்போர் செவிக்கொள அமைந்த காரணத்தாற் குறியறிந்து சேர வாசித்தலும், அக்கருவிகளின் மிகுதி யடக்குதலும், ஆக்குமிடத்தும், அடக்குமிடத்தும் இசையின் இரந்திரம் தோன்றாதபடி செய்பவன்'' (அரும்பதவுரை)

மேலும் இவன் ''கற்புக் கடம் பூண்ட பொற்புடை தெய்வமாம் திருமா பத்தினியின் செவ்வியறியாது மாதவி நல்லாளிடம் மயக்கமுற்று கிடந்ததற்கே முதற் காரணம் இக்கலையுள்ளமே! ஒத்த கலையுணர்வு உடையோர் ஒன்றி இணைந்து இயைந்து வாழ்ந்த வாழ்க்கை முறையே மாதவி–கோவலன் தொடர்பு என்க.

கோவலனின் இசைப் புலமைக்குச் சான்ருக அமைந்துள்ள ஓரிடத்தை நோக்குவோம்.

முத்தம் கொளிக்கும் தத்துநீர் அடைகரை பூம்புகார் கடற்கரையில் வெள்ளிய நிலா மணற்பரப்பில் கோவலனும், மாதவியும் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தனர். முன்னுள் நடந்த மாதவியின் நாட்டியத்தைக் கண்டு களித்தனர் மக்கள். தனக்கே உரிய மாதவியின் அழகையும் ஆடலையும் மற்றவர்கள் கண்டு களித்தமை பொருத கோவலன் மனம் துணுக்குற்று இருந்தான் என்பதை அவனது பளிங்கு முகம் திரையிட்டுக் காட்டியது!

ஆடல் பாடலுடன் ஊடலும் கூடலும் கோவலற்களித்து அவனை எப்பொழுதும் இன்பத்தில் ஆழ்த்திய மாதவி இப்பொழுது அவன் மனம் மகிழ யாழ் வாசிக்க நினைத்தாள்.

''பத்தருங்கோடு மாணியுநரம்பு மென்றித் திறத்துக் குற்றம் நீங்கிய யாழ் கையிற்றொழுது வாங்கிப் பண்ணல் பரிவட்டணையா ராய்ந்து வாசிக்கத் தொடங்கினுள்.

காதற்றலைவனன்றியும், யாழிசைத்தவனும் பண்வகையால் பரிவுதீர்ந்த கோவலன் தலைமை தோன்ற அவனிடம் யாழினைக் கொடுக்கின்ருள்.

''ஏவலன் பின்
பாணி யாதெனக்
கோவலன் கையாழ்
நீட்டவ வனும்
காவிரியை நோக்கின ஒங்கடற்
கானல்வரிப் பாணியும்
மாதவி தன்மன மகிழ
வாசித்தல் தொடங்குமன்.''

ஈண்டு இசையில் வல்ல மாதவி கோவலனிடம் பாணியாதெனக் கேட்கின்ருள். இது அவனது நிறையிசைப் பண்பை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

இதற்கு அரும்பதவுரையார் ''இப்பொழுது இதனை வாசியென்று விதிக்கின்றேனல்லேன்; வாசிக்குந்தாளம் யாதென்று யான் அறியலுறுகின்றேன், என்பாள் போலக் கொடுத்தாளென்க. யாழைத் திருத்தித்தான் முற்படவாசியாதே அவன் தலைமைதோன்றக் கொடுத்தாள்'' என்று கூறுகின்ற குறிப்புரை கோவலனின் நிறையிசை மாண்பை வலியுறுத்துவதாக உள்ளது.

மற்று, ''கோவலனை எழில் கண்டபோது மயங்கும் நிலையற்ற கலையுள்ளம் கொண்டவனுகவே நமக்குக் காட்டுகின்ருர் என்றும், அழகிய காட்சிகண்டு கோவலன் மனம் தான் செய்யும் தொழில் யாழ் வாசிப்பது மறந்து புறத் தோற்றத்தில் மயங்கி இருந்தா

லும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றும் கூறுகின்றார்.

எழில் கண்டு மயங்கும் நிலையற்ற கலையுள்ளம் கொண்டவன் என்றாலும் அவனது இசைப் பயிற்சியில் குறை உண்டு என்று கூறுவதற்கில்லை. புறத்தோற்றத்தில் மயங்கி யாழ் வாசிப்பது மறந்தான் என்றும் கூறுவதற்கில்லை. அத்தகைய சூழ்நிலை ஆண்டு உருவாகவில்லை.

தான் ஒருவனுக்கே ஆடியும் பாடியும் இன்பத்தை யளிக்கின்ற மாதவி பல்லோரும் இன்பமுற ஆடிப்பாடினளே என்ற பொறாமையும், அதன் காரணமாக எழுந்த மனக் கசப்புமே அந்த நேரத்தில் அவனது உள்ளத்தில் நிலவியிருந்தது. அதனை வெளிப்படுத்தியே குறிப்புரையாக தனது நுண்கலைப் புலமை நலம் பெருக மிக உயர்ந்த யாழிசைப் பாடலை கனிச்சுவை ததும்ப இன்னிசை நிறைமாண் பெய்தப் பாடினான்.

மற்று, காப்பியத் தலைவனை முதற்கண் அறிமுகம் செய்யும் பொழுதே அவனது பெருமையும் சிறப்பும் தோன்ற,

''மண்டேய்த்த புகழினன்
  மதிமுகமட வார்தம்
பண்டேய்த்த மொழியின
  ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேள்
  என்றிசை போக்கிக்காதலான்
கொண்டேத்துங் கிழமை
  யான் கோவலன்"

என்கின்றார் அடிகள்.

கலையில் மயங்கும் கலையுள்ளங் கொண்ட நுண் கலைஞன் தன் கலையில் குறைபாடு உடையவனாக என்றும் இருக்கவே மாட்டான் என்பது வெளிப்படை.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் ''ஆடல் பாடல் இசையே தமிழே" ஆகியது. கானல் வரிப் பாடல்கள் அனைத்தும் சிறந்த இசைப் பாடல்களே! இது சிலம்பிசைக்கே நிலைக்களமாக இசையின் ஒளி விளக்காக ஒளிர்கின்றது. அதனுள் அமைந்துள்ள ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில் வரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணைநிலைவரி ஆகியவைகளெல்லாம் இசைப்பாகு பாட்டை எடுத்திசைக்கின்ற சுவைப் பெட்டகங்கள் அல்லவோ?

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## வேர்க்கடலை

இதன் தாயகம் தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் பகுதி. அங்கிருந்து கினி, மேற்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களுக்குப் பரவிற்று. போர்ச்சுகீசியர் இதை இந்தியாவுக்கும், பசிபிக் பெருங்கடல் தீவுகளுக்கும் பிற இடங்களுக்கும் கொண்டுவந்தனர். 15-ஆம் நூற்றாண்டில்தான் முதன் முதல் இந்தியாவுக்கு வந்தது எனினும், இங்கு பல இடங்களில் பரவியுள்ளது.

இது குறுகிய காலப் பயிர்; வயது 105 நாட்கள்.

வேர்க்கடலைப் பருப்பு மக்களுக்கு நல்ல உணவு. எளிதாகச் செரிக்கத் தக்கதே. பச்சையாகவும் உண்ணலாம். இதில், ப்ரோட்டீன் (உயிர்ச் சத்து) 26·72; கொழுப்பு 40·13; தாது 1·87; மாச்சத்து 20·29 – சதவிகிதம் உண்டு. வைட்டமின் 'பீ' மிகுதி; 'ஏ' யும் 'சி'யும் சிறிது. இதைப் பசு வெண்ணெய்க்கு ஈடாகக் கருதலாம். இதிலுள்ள புரோட்டீன் இறைச்சியிலுள்ளதற்கு இணையாகும்.

வை. சு. மணி பீ.ஏ., பி.டி.

# சாட்டையடி தந்தார்!

வர்ணாசிரம தர்மம் எவ்வளவு சூதுமிக்கது என்பதை இன்று ஒவ்வொருவரும் உணர்கிறோம். நாம் உணர்வதோடு கூட வர்ணாசிரம தர்மத்தை இன்றளவும் கடைப்பிடித்து வருபவர்களும் ஒருவேளை இல்லாவிட்டாலும், ஒருவேளை உணர்ந்து வருகின்றனர். இஃது சுயமரியாதை இயக்கம் முப்பது ஆண்டுக்கு மேலாகவே அர்ப்பணித்த உழைப்பின் வெற்றிக்கு ஓர் அறிகுறியாகும்.

நம்மைப்போலவே, நம் காலத்திற்கு முன்பு, இவ்வருணாசிரம தருமத்தைக் கண்டபோது கொதித்தெழுந்த புலவர் பலருண்டு. அவர்களில் சிலர் 'சாடை'யாகவும், சிலர் 'சிலேடை'யாகவும், வருணாசிரம தருமத்தைச் சாடினர். சிலர் மனம் தாங்காமல் சாட்டையடியும் கொடுத்துள்ளனர்.

அவருள் ஒருவர் வேதியர் கும்பலைக் காண்கிறார். அவர்களது வாய் வேதம் ஓத, மனம் பலவற்றை நாடுவதைக் காண்கிறார்.

''இருக்கு நாலு வேதமும்
எழுத்தறவே யோதினும்
பெருக்கநீறு பூசினும்
பிதற்றினும் பிரானிரான்"

என்கிறார்.

அவர்கள், ''நாங்கள் பிரம்மாவின் முகத்திலே பிறந்தவர்கள்." என்று கூற, புலவர் அவர்களை நோக்கி,

"பிறந்தபோது கோவண
மிலங்குநூல் குடுமியும்
பிறந்துடன் பிறந்ததோ
பிறங்குநாற் சடங்கெலாம்?''

என்று கேட்கிறார். சிவனடியார் அவர்; நமச்சிவாயத்தை நம்புபவர்தான். ஆயினும் வருண

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இத்தகு சிறந்த மெல்லிசைப் பாடல்களைத் தம் யாழிசையோடு இணைத்துக் கருத்துக் கருவூலமாக, கவிச்சுவை கனிந்தொழுக, பல்வகை அணிநலம், தொடை நலம் பொலிய உள்ளுறை, இறைச்சிப் பொருள் தோன்ற பாடுகின்ற இசைக்கலை மன்னனும், அரசியுமாகிய கோவலனும் மாதவியும் குறையிசை உடையவர்கள் என்று நினைத்தலும் ஒல்லுமோ?

இறுதியில் தன் கருத்திற்கு ஏது பல காட்ட இயலாத கட்டுரையாளர், ''இசையில் தவறியது கோவலன்தான் என்று முழுதும் அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும்'', என்று நழுவுகின்றார்.

மற்று, ''பெரும் பொறுப்பு, அடிகள் அவனை உருவாக்கியிருக்கும் நிலையை ஆய்ந்தால், கோவலனையே சேரும்," என்கின்றார்.

அடிகள் அவனை உருவாக்கியிருக்கும் நிலை, நிறையிசையுடையவன் என்பதை முன்னர் நிறுவினோம்.

கட்டுரையாளர் கருத்துப்படி அடிகளாரின் பாத்திரப் படைப்பு சிறப்பில்லை என்றாகும். அந்த ஐயப்பாட்டிற்கே ஒரு சிறிதும் சிலப்பதிகாரத்தில் இடமில்லை என்க.

இதுகாறும் விளக்கியவாற்றால் சிலப்பதிகாரத்தில் கோவலன், மாதவி யாழிசை குறையிசையன்று நிறையிசையே என்பதும், அந்த நிறையிசையே அத்தகு நிறைமாண்பை அளித்துக் குன்றா விளக்காய் ஒளிர்கின்றது என்பதும் விளக்கமுறும்.

பழமொழி விளக்கம்:

# "கெட்டும் பட்டணம் போ"

புலவர் வி. பொ. பழனிவேலன் B. O. L.

இப்பழமொழி பொருட் செறிவோ, கருத்தாழமோ, உடையதன்று. இதனைப் பழமொழி என்பதைவிடப் 'புது மொழி' என்பதே பொருந்தும். ஏன் எனின், இஃது உருவாகியது ஆங்கிலேயர் இந்த நாட்டில் ஆட்சி செலுத்தியபோது தான், பொதுமக்கள் இம்மொழித் தொடரை உண்டாக்கினரேயன்றி எந்தச் சான்றோரோ, ஆன்றோரோ, இயைக்கவில்லை.

'பட்டணம்' என்ற சொல்லே தமிழிலக்கணங்களில் யாண்டும் காணப்படவில்லை. பட்டினம் என்ற சொல்தான் பொதுமக்கள் வாயிலகப்பட்டு இங்ஙனம் திரிந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கடற்கரையூரைப் 'பட்டினம்' என்பது தமிழ் மரபு.

சென்னை மாநகரம் கடற்கரையில் தோன்றியுள்ளதாதலின் சென்னப்பட்டினம் என்று செப்பப் பெற்று வந்தது. மக்களது அறியாமையாலும் பலுக்கற் பிழையாலும் சென்னப்பட்டணமாகிவிட்டது. பிறகு 'சென்னை' போய் 'பட்டண'மாகவே மாறி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சிரம தருமத்தினை ஏற்காதவர். அதன் சூதினை அம்பலப்படுத்துகிறார்.

"பறைச்சியாவதேதடா
பணத்தியாவதேதடா?
இறைச்சிதோல் எலும்பினுள்
இலக்கமிட்டிருக்குதோ?
பறைச்சிபோகம் வேறதோ?
பணத்திபோகம் வேறதோ?
பறைச்சியும் பணத்தியும்
பகுத்துப் பாரும் உம்முளே."

என்று சரியான சாட்டை அடி தருகிறார்.

"கோயில் பள்ளியேதடா
குறித்து நின்றதேதடா?
வாயினால் தொழுதுநின்ற
மந்திரங்களேதடா?
ஞானமான பள்ளியில்
நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியிற்
காணலா மிறையையே!"

என்கிறார் அவர்.

இறைவனைக் காண இதைவிடத் தெளிவான விளக்கம் வேறுயார் தரமுடியும்? மறந்தே விட்டேன், இவ்வாறு பாடிய புலவரின்—அடியாரின் — பெயர் என்ன தெரியுமா? தெரியும் என்பீர்கள், சிலர்! தெரியாது என்பீர்கள் பலர்! அவர்தான் சிவவாக்கியர். சிவவாக்கியம் எனும் நூலில்தான், அவரது இப்பாடல்கள் காணப்படுகின்றன.

வேதாந்திகள் பலர், "இத்தகைய பாடல்களை 'வேதாந்த நோக்கு"டன் படிக்க வேண்டும். சாமான்யர்களுக்குச் செய்யப் பட்டதல்ல, இவை" என்று விளக்கம் கூறுவர். சாமான்யர்கள் இவற்றின்படி நடந்தால் தங்கள் சோம்பேறி வாழ்வுக்கு எவ்வளவு சங்கடம் வரும் என்பதை முன்கூட்டி உணர்ந்தே அவர்கள் அவ்வாறு கூறுகின்றனர், என்க!

"விண்ணியங்கும் ஞாயிற்றைக் கைம் மறப்பார் இல்" என்பது போல, அன்று சிவவாக்கியர் போன்றவர்கள் எண்ணியவை, இன்று மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக உண்மையாகி வருகின்றன. சாட்டையடி வாங்கிய வருணாசிரம தர்மம், இனி எப்பாடு பட்டாலும் தலை தூக்குவது என்பது முடியாததாகும்.

விட்டது. இன்று யாராவது, 'பட்டணம் போனேன்' என்று கூறினால் சென்னப்பட்டினம் என்றே எல்லோரும் கருதுமளவிற்கு மாற்றமுற்றுளது.

ஆங்கிலேயர் இச்சென்னையின் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய போழ்து கற்றவர் மிக மிகக் குறைவாக விருந்தனர்; ஆங்கிலங் கற்றவர்கள் அறவே இல்லை. ஏவற்பணிகளைச் செய்வதற்கு ஆட்கள் மிகவும் தேவையா யிருந்தது. அன்றியும், ஆங்கிலக் குடியேற்ற நாடுகளாகிய மலேயா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா முதலியவற்றிற்கு ஆட்கள் மிகுதியாக வேண்டிய சூழ்நிலை இருந்தது.

எனவே, இவணின்றும் ஆட்களை அயல்நாடுகட்குக் 'கண்காணி' மூலம் அனுப்ப ஆள் திரட்டினர். போர்ப் படையில் பணிபுரியவும் ஆட்கள் வேண்டப்பட்டனர். கண்காணிகள் ஊர் தோறும்போய் ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொணர்ந்தனர். முதலில் வாணிகம் செய்யவந்த குழுவினரின் ஆட்சிக்குட்பட்டுப் பிறகன்றோ ஆங்கில அரசியின் ஆட்சிக்குட்பட்டது?

எழுத்தர், எடுபிடிக்காரர், ஏவலர், தொழிலாளர் முதலியோர் மிகுதியாகச் சேர்க்கப்பட்டனர். இச்செய்தி தமிழ்நாடு முழுதும் பரவி மக்கள், பிழைப்பு கருதி, திரள் திரள்ாகச் சென்னப் பட்டினம் நோக்கிச் செல்லத் தலைப்பட்டனர். அங்கு சென்றால் ஏதாவது வேலை செய்து பிழைக்கலாம் என்ற எண்ணம் எல்லா மக்கள் மனத்திலும் ஊறிப்போய்விட்டது. அதனால் தான் காந்தியார், நகரங்களில் மக்கள் தொகை பெருகுவதைப் பார்த்து, 'சிற்றூர்க்குச் செல்' (Go back to the Village) என்று அறிவுரை கூறிவந்தார்.

முதலில் அந்தப் பட்டினம் என்ற பெயர் 'பட்டணம்' எனச் சென்னையையே குறித்தது; நாளடைவில் மக்கள் பெரிய நகரங்களையும் அப்பெயராலேயே அழைக்கத் தொடங்கிவிட்டனர். இன்று கங்கை, காவிரி என்ற பெயர்களை எல்லா ஆறுகட்கும் 'ஓரின மக்கள்' இட்டு வழங்குவது போன்றதெனக் கொள்க.

வறுமையினால் துன்புறுபவனைப் பார்த்துப் பொதுமக்கள், "பட்டணம் போனால் ஏதேனும் தொழில் செய்து பிழைக்க வழியுண்டு; இங்கிருந்து எதற்காக வறுமையால் வாடவேண்டும்?" என்று அறிவுரை கூறத் துவங்கினர். அந்த அறிவுரையே பலராலும் பயிலப்பட்டுப் பாராட்டப்பட்டு, "கெட்டும் பட்டணம் போ," என்று வழக்கத்தில் வந்துவிட்டதெனலாம்.

ஆகவே, அத்தொடரின் திரண்ட பொருள், "வறுமையடைந்து வருந்தினாலும் பட்டணத்திற்குச் சென்றால் எத்தொழிலேனும் செய்து பிழைக்க வழி கிடைக்கும்; அங்கு போய்ச் சேர்" என்பதாம். சிலவிடங்களில், 'கெட்டவன் பட்டணஞ் சேர்', என்றும், 'கெட்டும் பட்டணம் சேர்,' என்றும் வழங்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29.
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனய் நகர், சென்னை-30

# குத்தூசி

[ஆசிரியர் : சா. குருசாமி]

*— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —*

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ் : விலை 50 காசு ;

ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5 கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.
விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

## விற்பனையாளர் :

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவையான இதழ்களுக்கு, இதழ் ஒன்றுக்கு 40 காசு வீதம் 15-ந் தேதிக்குள் தெரிவித்து விடுவது நல்லது. 100 இதழ்களுக்குமேல் பெறுபவர்களுக்கு 25% கழிவு தரப்படும்.

## விளம்பர விகிதம் :

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய் ; அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய் ; இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.

(அரைப் பக்கம் : 25 ரூபாய்)

குறிப்பு :- நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

---

குறிப்பு :—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை ; முன் அனுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

டெலிஃபோன் நம்பர் : 51451

நிறுவனம் : 1930

தந்தி : ORIDOL

தரத்தில் சிறந்த

எங்கள் பருப்பு வகைகள்

| பட்டினத்தார் உளுத்தம் பருப்பு | எப்போதும் வாங்கி உபயோகியுங்கள்<br>எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். | ஷெல் துவரம் பருப்பு |
|---|---|---|

தயாரிப்பாளர்கள் :

P. புன்னவன நாடார் (FIRM)

235, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21.